சரசுவதி மகால் வெளியீடு எண். 320

# அக்காலத்துச் சித்தவைத்திய அனுபவ முறைகள்

SARASVATI MAHAL • சரசுவதி மகால் • सरस्वती महल्
• தஞ்சாவூர் •
கற்றனைத்து ஊறும் அறிவு

சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

1991 விலை ரூ. 20-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 320

# "அக்காலத்துச் சித்த வைத்திய அனுபவ முறைகள்"

சிறப்புக்கௌரவப் பதிப்பாசிரியர் :

**டாக்டர் M. நந்தகுமார், R. I. M. P.**

பொதுப்பதிப்பாசிரியர் :

**பேராசிரியர் மு. சதாசிவம்,** எம்.ஏ., எம்.லிட்.,
இயக்குநர்

வெளியீடு :

**இயக்குநர்,**
**சரசுவதி மகால் நூலகம்,**
**தஞ்சாவூர்.**

1991 ] [ விலை ரூ. 20-00

முதற் பதிப்பு : 1991

# AKKAALATHU SIDDHA VAITYA ANUBAVA MURAIKAL

( A Handbook of Siddha Medicines )

அச்சிட்டோர்

ஸ்ரீ அபிராமி பிரிண்டர்ஸ்

பள்ளியக்கிரகாரம்

தஞ்சாவூர்.

# பதிப்புரை

❋

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சித்த மருத்துவச் சுவடிகளுள் சிறப்புடையனவற்றை நூல்வடிவில் வெளியிடும் பணியினைச்செய்து வருகின்றோம். அம்முறையில் "அக்காலத்துச் சித்த வைத்திய அனுபவ முறைகள்" என்ற இந்த நூல் சித்த மருத்துவநூலாகும். இந்நூலகத்திலுள்ள சுவடி எண் 329 கையெழுத்துப் பிரதி எண் 1758 இவற்றைக்கொண்டு இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலில் பல்வேறு நோய்களுக்கு அனுபவ மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. சித்த மருத்துவரின் உதவி கொண்டு தனிப்பட்டவர்களும் இந்த மருந்துகளை முறைப்படி தயாரித்து நோய்களைப் போக்கிக்கொள்ள முடியும்.

இந்த நூலை வெளியிடப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ அபிராமி அச்சகத்தாருக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சரசுவதி மகால்,<br>
தஞ்சாவூர்.<br>
6—5—91.

**மு. சதாசிவம்,**<br>
இயக்குநர்

# நூல் விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற் பெயர் : | அக்காலத்துச் சித்த வைத்திய அனுபவ முறைகள் |
| பதிப்பாசிரியர் : | டாக்டர் எம் நந்தகுமார்,<br>560, காமராஜர் தெரு,<br>ஈ. பி காலனி,<br>நாஞ்சிக்கோட்டை ரோடு,<br>தஞ்சாவூர்-613006. |
| வெளியிடுபவர் : | மு. சதாசிவம்<br>இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம். |
| வெளியீடு எண் : | 320 |
| மொழி : | தமிழ் |
| பதிப்பு : | முதற் பதிப்பு |
| வெளியீட்டு நாள் : | மே 1991. |
| தாள் : | 14.2கிலோ சேஷசாயி பேப்பர் |
| நூல் அளவு : | 21 x 14 செ. மீ, |
| பக்கங்கள் : | XII + 140 |
| படிகள் : | 1200 |
| எழுத்து : | 12 பாயிண்ட் |
| அச்சிட்டோர் : | ஸ்ரீ அபிராமி பிரிண்டர்ஸ்,<br>பள்ளியக்கிரகாரம்.<br>தஞ்சாவூர். |
| நூற் கட்டு : | மெலிந்த அட்டைக்கூடு |
| பொருள் : | சித்த வைத்தியம் |
| விலை : | ரூ. 20—00 |

## முன்னுரை

### விநாயகர் துதி

"பூமாது தனை மணந்த புயல் வண்ணப் பெருமாளும்
புலவர் போற்று
நாமாது தனை மணந்த நான் முகனும் போர் மாது
நயக்கு மெண்டோட்
கோ மானுந் தானே யென் றுணர்த் துதற்கேபிரண
வருள்
சாமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானே யுயிர்த்தானை
நினைத்திறைஞ்சி
வழுத்து வாமே

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

உலகத்தில் மனிதர்களாகப் பிறந்து அவர்கள் அக்காலத்தில் பிறப்பின் உண்மைகளைப் பற்றி ஆராய்ந்து, பிறப்பின் மூலமாக உலகத்து மக்களுக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும் என்று மனதில் கொண்டு நாம் பிறப்பதின் மூலம் மக்களுக்கு என்ன பயன் என்று கருதி உலக மக்களுக்கு நமது பிறப்பினால் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தினால் அக்காலத்துச் சித்தர்கள் ஞானம், யோகம் இவைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண்டு இதிலுள்ள உண்மைகளையும் நன்கு புரிந்து உலகத்து மக்கள் நோய், நொடிகள் இல்லாமல் வாழவேண்டும் என்பதற்காகவும், அப்படி வரும் நோய்களுக்கு நிவர்த்தி செய்ய அக்காலத்துச் சித்தர்கள் அரும்பாடுபட்டு இயற்கையாகக் கிடைக்கும் சில மூலிகைகளைக்கொண்டு மருந்து செய்து நோயைக் குணப்படுத்தி இருக்கிறார்கள்.

அக்காலத்தில் கல்வி அறிவு போதிய அளவு இல்லாத காலத்திலும், அச்சுப் புத்தகங்கள் இல்லாத காலத்திலும் சித்தர்கள் தமது அறிவைக் கொண்டு கல்வி, ஞானம், சித்து, யோகம் இவைகளைப் புரிந்து கொண்டு நோய்களை நன்கு புரிந்து இவைகளை நிவர்த்திக்கப் பலவிதமான சித்த வைத்திய முறைகளைக் கொண்டு மருந்துகளைத் தயார் செய்து நோயைக் குணப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் சித்தர்கள் தாம் அனுபவ முறையில் மருந்துகளைப் பற்றியும், மருந்து செய்யும் முறைகளைப் பற்றியும் பிற்காலத்து மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் அக்காலத்துச் சித்தர்கள் ஓலைச்சுவடிகள் மூலமாகக் கணக்கில் அடங்காத அளவிற்கு எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதி வைத்த சுவடிகளில் இந்தச் சுவடி ஒரு பகுதியாகும்.

இந்தப் பகுதியைப்பற்றி விளக்கிப் பார்க்கும்போது மக்களுக்கு ஏற்படும் அனைத்து நோய்களைப் பற்றியும், அந்த நோய்களின் நிவர்த்திக்குத் தகுந்த மருந்துகள் பற்றியும் குறிக்கப்பட்டுள்ளன. இந்தச் சுவடியில் எந்தச் சித்தர், எந்த ஊர், எந்தப் பெயர் என்ற விபரத்தைச் சுவடியில் குறிப்பிடவில்லை. இதை நாம் பார்க்கும்போது அக்காலத்துச் சித்தர்கள் புகழையும், பெருமைகளையும், விரும்பவில்லை என்றுதான் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். இச்சுவடியில் சில வியாதிகளுக்குச் சில மருந்து முறைகள் குறிக்கப்பட்டு இருப்பதை நாம் பார்க்கும்போது ஒரு ஆச்சரியமும், ஒரு திகைப்பும் ஏற்படும்படி அவ்வளவு மருந்து வகைகளையும் சேர்த்து மருந்து செய்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சுவடியின் மூலமாக நாம் காண்கிறோம்.

இதில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்துகள் இக்காலத்தில் எங்கு கிடைக்கும், அதிகமான ரூபாய் செலவுகள் ஆகும் இந்த மருந்து வகைகளை எப்படி நாம் சரிபார்ப்பது என்ற எண்ணமெல்லாம் மனதில் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட மருந்து வகைகளைச் சேர்த்து அக்காலத்துச் சித்தர்கள் முறைப்படி மருந்து-களைத் தயார் செய்து கஷ்டமின்றி நோயாளிகளுக்குக் கொடுத்துக் குணப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சுவடியின் சிறப்பு அக்காலத்துச் சித்தர்கள் தாங்கள் அனுபவித்துப் பலவித முறைகளைக் கொண்டு தெரிந்ததைத்தான் இந்தச்சுவடியில் எழுதியிருக்கிறார்கள் என்பதுதான். இக்காலத்து அச்சுப் புத்தகங்களில் உள்ள மருந்து முறைகளோ அல்லது வேறு குறிப்புகளின் மூலமாகத் தொகுத்த முறைகளோ இல்லாத அளவிற்கு இந்தச் சித்தர்கள், இந்தச் சுவடியில் சில வைத்திய மருந்து முறைகளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். இந்த நூலில் அக்காலத்துச் சித்தர்கள் அனுபவித்து எழுதப்-பட்டிருந்த முறைகளும், இக்காலத்து நடைமுறையிலுள்ள சில மருந்து செய்யும் முறைகளைப் பற்றியும் உள்ள வித்தியாசத்தையும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் குறிப்பிடக் காரணம் அக்காலத்து முறைகளைப் பற்றியும், இக்காலத்தில் அச்சுப்புத்தகங்கள் வாயிலாக வெளிவந்திருக்கும் நூலில் உள்ள மருந்து முறைகளில் உள்ள வித்தியாசத்தை மருத்துவ அறிஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக இந்த நூலில் மிகவிளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச்சுவடியில் இக்காலத்தில் முழுமையாகக் குணம் செய்ய முடியாத நோய்களுக்கு மிகச்சிறந்த மருந்து முறைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அக்காலத்துச் சித்தர்கள் இந்த மருந்து முறைகளைப்பற்றிச் சுவடியில் எழுதி வைக்கும்போது மற்றவர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கும், எளிதில் செய்ய முடியாத அளவிற்கும் மருந்து வகைகளின் பெயர்களை மாற்றுப் பெயர்களையும், துணைப் பெயர்களைக் கொண்டும் கோவையாகப் பாடல் மூலமாக எழுதி வைத்துள்ளார்கள்.

இப்படிப் பாடலாக அமைந்த காரணம், மருந்து வகைகளைப்பற்றி மருத்துவ அறிஞர்களுக்கு மட்டும் தெரிந்து இந்த மருந்து முறைகளைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் அக்காலத்தில் பாடல் மூலமாக சித்தர்கள் ஓலைச்சுவடியில் எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அக்காலத்துச் சுவடிகளை விளக்கமாக உலகமக்களுக்கு நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அச்சுப்புத்தகங்கள் மூலமாகப் பதிப்பு செய்து மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும், நிதி உதவி அளித்து, இப்படிப்பட்ட சேவைகளைச் செய்துகொண்டு இருப்பதை நினைக்கும்போது ஒரு மகிழ்ச்சியும், நன்றியும் தெரிவிக்க வேண்டிய கடமையில் உள்ளேன். இந்த இரண்டு அரசாங்கங்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்யவேண்டிய பொறுப்பிலிருக்கும் தஞ்சாவூர் சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகத்தின் இயக்குநர் அவர்களுக்கும், மற்ற ஏனைய பணி புரிவோர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந்த நூலை அச்சிட்ட, அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சிறந்த நூல்கள் இன்னும் அதிகப்படியான நூல்கள் இந்தச் சரசுவதி மகாலில் இருந்து வெளியாகும் நிலையில் உள்ளன. இந்த நூல்களையெல்லாம் பொதுமக்களும், மருத்துவ அறிஞர்களும் பயன்பெற வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்

அன்புடன்,

**டாக்டர். மு. நந்தகுமார்**

குறிப்பு :

இச்சுவடியின் மூலத்தின் மருந்து முறைகளில் சில பிழைகள் திருத்தப்படாமல் எழுதப்பட்டு விளக்கத்தில் திருத்தி எழுதப்பட்டுள்ளன என்பதை வாசகர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலத்தின் மருந்துமுறைகளின் பிழைகளைத் திருத்தாத காரணம், அக்காலத்திலிருந்த கல்வி நிலை, சொல் அமைப்புகள், எழுத்து வடிவங்கள் ஆகியவை அழியாதிருக்கவும், இக்காலத்து மக்கள் இதனைத்தெரிந்து கொள்ள ஏதுவாகப் பிழைகள்திருத்தாது எழுதப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூலில் அனுபவ முறையில் சில நோய்களின் குறிகுணங்களைப் பற்றியும் செய்திகள் மிக விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்


பக்கம்

1. வெள்ளைக்கி தயிலம் 1
2. வயிற்றுக் கடுப்புத் தீர்வதற்கு மருந்து 4
3. சிவசஞ்சீவி மாத்திரை 7
4. சகல சூலைக்கு எண்ணெய் மருந்து 10
5, மேக வாய்வுக்குச் சூரண மருந்து 16
6. குருபாதம் சுரத்திற்கு மருந்து 19
7. சகல கண் நோய்களுக்கும் மருந்து 20
8. பூரண லேகியம் செய்யும் முறையும் உபயோகமும் 23
9. காமாலை, உள்நீர்க்கோர்வை, மல்லி குணம் இவைகளுக்கு மருந்து 26
10. பெண்களுக்குக் கர்ப்பம் தரிக்க மருந்து 29
11. பெண்களுக்கு ஏற்படும் சூதகவலிக்கும், கர்ப்ப வலி நிவர்த்திக்கும் மருந்து 32
12. சகல வாதத்திற்கும் மருந்து செய்யும் முறை 34
13. கிரந்தி மேகம். மேக வாய்வு, அக்கினி மந்தம், தாதுகூடம், குட்டம், பக்கிரி சூலை இவைகளுக்கு மருந்து 37
14. சகல மேகத்திற்கும் மருந்து 40
15. சகல சன்னி வகைகளுக்கு மருந்து 43
16. வெண்குட்டம், அரையாப்பு. தொடை வாளை கண்ட மாலை, புடை கரப்பான். ஆறாத புண் இவைகளுக்கு மருந்தும், செய்யும் முறையும் 45
17. அரையாப்பு, கண்டமாலை, இவைகளுக்கு மேல் பூசும் மருந்து 48
18. கிராணி, அதிச்சார, கழிச்சலுக்கு மாதுளை சூரண மருந்து 49
19. வெள்ளைப் பாஷாணம் சுத்திசெய்யும் முறை 54

பக்கம்

20. கொடி பௌத்திரத்திற்கு மருந்து செய்யும்முறை 55
21. அண்டை வாயுவுக்கு அடை மருந்து 58
22. அட்ட குணம் நிவர்த்திக்கு மருந்து 59
23. பயத்திய வேட்டை, எலும்புருக்கி இவைகள் நிவர்த்திக்கு மருந்து 61
24 சகல வாய்வு, வயிற்றுவலிக்கு எலுமிச்சம்பழம் தயிலம் 63
25. சகல மார்புநோய். மேல்மூச்சு, ஈளை, இருமல் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து 65
26. சகல மேகத்துக்கும் நெய் மருந்தும் செந்தூர வகை மருந்தும் 66
27 நடுக்கு வாதம், கொன்னை வாதம், பக்க வாதம் சிரசு வாதம், முக வாதம், குறுக்கு வாதம், பிடரி வாதம், கண் வாதம் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து 71
28. பவுத்திரத்திற்கும், சகல காது நோய்களுக்கும் நிவர்த்திக்கு மருந்து 73
29. சகல காது நோய்களுக்கு மருந்து 74
30. வாத நோய்களுக்கு மேல் தடவும் தைல மருந்து 74
31. ஆனந்த வாய்வுக்குச் சில வகையான மருந்துகளின் விபரம் 76
32. அண்ட வாய்வின் நிவர்த்திக்கு மருந்துகள் செய்யும்முறை 80
33. அக்கினி மந்தம், வாத பித்த சிலேத்துமவகை மேக குட்டம், சூலை, ஆறாத புண் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து 82
34. கை வெள்ளை, கால் வெள்ளை, உதடு வெள்ளை இவைகளின் நிவர்த்திக்கு மருந்து 84
35. சகல சன்னிக்குத் தைல மருந்து 86
36. தலை நோய், தொண்டை கரப்பான், புண் கரப்பான், நாசி நீர்ப்பாய்ச்சல், இவைகளின் நிவர்த்திக்கு மருந்து 90

| | | பக்கம் |
|---|---|---|
| 37. | மேக சந்தனாதி எண்ணெய்த் தைலம் | 92 |
| 38. | மேக சந்தனுதித் தைலம் | 98 |
| 39. | சகல நீர்க்கடுப்பு நிவர்த்திக்கு மருந்து | 103 |
| 40. | நீரடைப்புக்கு நிவர்த்திக்கு மருந்து | 105 |
| 41. | அஸ்தி சுரம் நிவர்த்திக்கு மருந்து | 105 |
| 42. | சகல கணைக்கும் எண்ணெய் மருந்து | 106 |
| 43. | தீராத புண்ணுக்கு உள்ளுக்கும் மேல் பூசுவதற்கும் மருந்து | 109 |
| 44. | பேதியாவதற்குத் தொப்புளில் தடவும் மருந்து | 111 |
| 45. | குளிர் சுரம், ஈளை இருமல், உள்மாந்தம் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து | 113 |
| 46. | மேகக்கணச்சூடு, மேக பீனிசம், இவைகளின் நிவர்த்திக்கு மருந்து | 114 |
| 47. | நீரிழிவு நோயின் நிவர்த்திக்கு மருந்தும் அதன் குறிகுணமும் | 116 |
| 48. | மூலக்கிராணி நிவர்த்திக்கு மருந்து | 125 |
| 49. | தீராத சுரங்களுக்கும், தீராத ஜன்னிகளுக்கும் நிவர்த்திக்கு மருந்து | 128 |
| 50. | சகல விஷங்கள் நிவர்த்திக்கு மருந்து | 130 |
| 51. | சூலைக்கட்டு, சூலை வெட்டு நிவர்த்திக்கும் சுக பேதிக்கும் மருந்து | 131 |
| 52. | வரமூலம், கிரந்தி மேகம், நீரழிவு இவைகள் நிவர்த்திக்கு மருந்து | 136 |
| 53. | வரமூலம், கிரந்திமேகம் நிவர்த்திக்கு இரண்டாவது முறை மருந்து | 139 |

# வெள்ளைக்கி தயிலம்

(உடலின் மேல் ஏற்படும் வெள்ளைப்புள்ளிகளுக்கு மருந்தும்
மருந்து செய்யும் முறையும்

## சுவடி மருந்து முறை : I

மாட்டு எலும்பு இடித்தது உய குதிரை எலும்பு இடித்து
ஆட்டு எலும்பு இடித்து உய இந்த மூன்று வகையும்
இடித்ததை ஒரு பானையில் போட்டு கீளே குளி வெட்டி
அந்த குளியின் நடுவில் சிறுகுளி வெட்டி அதுக்குள்ளே
கலையத்தை வைத்து அந்தக் கலையத்தின் நடுவே
இந்த மருந்து
பானையை வைத்து தூரிலத்து வாரம் பண்ணி வைக்கவும்
அந்த கலையம் தெரியாமல் மண்குளைத்துப் போட்டு
ஆறவிட்டு
பானைக்கு வாய் மேலே சட்டி கொண்டு மூடி சிலைமண்
செய்து எருவடிக்கி தீயப்போட்டு வுருவெல்லாம் வெந்து
ஆறவிட்டு கலையத்தை எடுக்கவும் அந்த தயிலம் சகல
வெள்ளைக்கு
வியாதிக்கும் வெள்ளை உதடு. வெள்ளை கால் வெள்ளைக்கு
ஒரு மண்டலம் தடவ வலுவாகும் கை கண்டது.

## விளக்கம் :

உடலில் வெள்ளைப்பத்துப் போல் இருந்தால், இதனைச் சிலர் வெண்குட்டம் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் அது வெண்குட்டம் இல்லை. இதனை வெள்ளைப் பத்து, வெள்ளைப் புள்ளிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

மனித உடலில் எல்லா வகையான சத்துக்களும் உள்ளன. அதில் உலோகச் சத்துக்களும் இதில் அடங்கும் இப்படிப்பட்ட சத்துக்கள் அடங்கிய நமது உடலில் சில வகையான சத்துக்கள் குறைவு ஏற்படும் பொழுது சில வியாதிகள் வருவது போல் இந்த வெள்ளைப் புள்ளி, வெள்ளைப்பத்து வருகின்றன. ஆனால் இது வருவதற்குக் காரணம் சில சத்துக்கள் குறைவதேயாகும். இந்த வியாதி தொத்து வியாதிகள் என்றும், பரம்பரை வியாதிகள் என்றும், மற்றவர்களுக்குப் பரவும் என்று யாவரும் பயப்படவேண்டியது இல்லை. அப்படிப் பரவும் வியாதி அல்ல இது. சாதாரணமாக மனிதன் தோலில் பலவகையான தேமல் மாதிரி இது ஒரு வகைப்படும். இதற்கு இக்காலத்தில் பலவிதமான சிகிச்சைகள் செய்து முழுதும் குணப்படுத்த முடியாமல் பல நோயாளிகள் உள்ளனர். இப்படிப்பட்ட நோய்களுக்கும் அக்காலத்தில் சிகிச்சை செய்து குணப்படுத்தி இருக்கின்றார்கள் என்பனைப் பற்றி அக்காலத்துச் சித்தர்களின் ஓலைச் சுவடிகளின் மூலமாக அறிய முடிகிறது. இதன் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மாட்டு எலும்பு | 2,500 கிராம் எடை |
| குதிரை எலும்பு | 2,500 கிராம் எடை |
| ஆட்டு எலும்பு | 2,500 கிராம் எடை |

இந்த மூன்று எலும்புத் துண்டுகளையும், வகைக்கு சமன் எடை எடுத்துக் கொண்டு கல் உரலில் போட்டு நன்கு இடித்து இதனைக் குழித்தைலம் செய்து வைத்துக் கொண்டு தினம் இரண்டு வேளை வீதம் நாற்பத்தெட்டு நாட்கள் வெள்ளை உள்ள இடத்தில் தடவி வந்தால் குணம் ஆகும் என்பது சுவடியின் சுருக்கமான கருத்து.

## குழித்தைலம் செய்யும் முறை :

ஒரு பானையை எடுத்துக்கொண்டு அதில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்றுவித எலும்புத் துண்டுகளை தூள்களாக்கிப் போட்டு அந்த பானையின் கீழே ஒரு சிறு துவாரம் செய்துவிட்டு இதனை மேல் மூடி போட்டுச் சீலைமண் செய்து முடித்தபின்னர், நிலத்தில் ஒரு குழி தோண்டி அதனுள் ஒரு சட்டியை வைத்து அதன்மேல் இந்த எலும்புத் தூள்கள் உள்ள பானையைச் சமமாக வைக்கவேண்டும். எலும்புத் தூள்கள் உள்ள பானையின் பகுதி நிலத்திலுள்ளும் அதன் மேலே உள்ள பகுதி நிலத்தின்மேல் இருக்க வேண்டும். இப்பொழுது இந்தப் பானைப் பகுதியைச் சுற்றி எரு வைத்து நன்கு எரிக்க வேண்டும். அப்பொழுது எலும்புகளிலிருந்து பிரியும் சாரம் துவாரத்தின் வழியே அதன் அடியில் உள்ள சட்டியில் சென்று சேகரமாகும். பானை நன்கு சூடு ஆறியவுடன் அதனை வெளியே எடுத்து அந்தச் சட்டியில் உள்ள தைலத்தைப் பத்திரமாகப் பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். இந்த முறைக்குக் குழித்தைலம் செய்யும் முறை என்று பெயர்.

## குறிப்பு :

**ஆசிரியர் கருத்து :**

மேல் குறிப்பிட்டிருக்கும் வெள்ளைக்கு மருந்து என்ற பாடலில் மூன்றுவித எலும்புகளை குழித்தைலம் செய்து கொண்டு பூசி வந்தால் நிவர்த்தியாகும் என்று பாடலில் உள்ளது. ஆனால் இந்த மூன்று எலும்புகள் காய்ந்த எலும்புகளா? அல்லது ஈரப்பசையுடன் இருக்கக் கூடிய எலும்புகளா? என்பதைப்பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. இருந்தாலும் ஆசிரியரின் கருத்து ஈரப் பசையுடன் இருக்கக்கூடிய எலும்புகளை மட்டும் குழித் தைலம் செய்ய எடுத்துக் கொள்ளவும்.

# வயிற்றுக் கடுப்பு தீர்வதற்கு மருந்து

(மருந்து செய்யும் முறை)

## சுவடி மருந்து முறை: 2

தேவ தாரம் வீங$^{3}$, வெள் வெங்காயூ2, கடுக்காய், உய $^{0}$, தாணிக்காய்$^{10}$ ய நெல்லிப் பருப்பு இ. பொரிகாரம்$^{3}$, சின்னக் காரம்$^{3}$ வீங,இந்துப்பு வீசா6, எண்ணை தூ, வயத்துக் கடுப்பு, பெருங்காயம் சித்திரமூலம் கரிப்பான், அறுகம் புல்லும், கம்பனியும் கரிக்கிக் கொண்டு வேள் வெங்காயம் ஒன்றை போடவே தீப்பிலி4 கொண்டு............கருப்புக் கடியும் சுண்டைக்காய் பிரமாணம் மூன்று உருண்டை குடிக்கவும் வயிற்று தீரும்

## விளக்கம்:

மலங்கழியும் போது தடங்கும், சீதம் இரத்தம், மலத்துடன் விழும் இடுப்புக்கடுக்கும், வயிறிலையும், அன்னம் செல்லாது, உடல் மெலிந்து வரும். இந்தக் குறி குணம் இருந்தால் வயிற்றுக்கடுப்பு என்று சொல்லலாம். இதன் நிவர்த்திக்கு மருந்தும், மருந்து செய்யும் முறையும்.

தேவையான மருந்துகளின் விபரம்:

| | |
|---|---|
| 1. தேவதாரம் | 35 கிராம் |
| 2. வெள்வெங்காயம் (பூண்டு) | 35 கிராம் |
| 3. கடுக்காய் | 70 கிராம் |
| 4. தான்றிக்காய் | 70 கிராம் |

| | | |
|---|---|---|
| 5. | நெல்லி பருப்பு | 70 கிராம் |
| 6. | பொரி காரம் | 35 கிராம் |
| 7. | சின்ன காரம் | 35 கிராம் |
| 8. | இந்துப்பு | 35 கிராம் |
| 9. | அறுகன் புல் | 70 கிராம் |
| 10. | கம்பளி கறுக்கிய சாம்பல் | 35 கிராம் |
| 11. | பெருங்காயம் | 35 கிராம் |
| 12. | கருவேப்பிலை | 35 கிராம் |
| 13. | திப்பிலி | 35 கிராம் |
| 14. | கருப்பட்டி | 35 கிராம் |
| 15. | நல்லெண்ணெய் | 200 மில்லி |
| 16. | சித்திரமூலம் | 35 கிராம் |
| 17. | பூண்டு | 35 கிராம் |

*மருந்து செய்யும் முறை:*

மேற்சொன்ன மருந்து வகைகளைக் குறித்த விகிதப்படி எடுத்துக் கொண்டு சுத்தம் செய்த பின்னர் இதனை நல்ல சுத்தமான கல் உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து துணி கொண்டு வடிகட்டிய சூர்ணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு இத்துடன் மேற்சொன்ன அளவிற்கு நல்லெண்ணையும் கலந்து வைத்துக்கொள்ளவும்.

*தீரும் வியாதிகள்:*

வயிற்றுக் கடுப்பு, ஆசனக்கடுப்பு, வயிற்று இரைச்சல் தீரும்.

*அளவு:*

ஓர் சுண்டைக்காய் அளவு, தினம் மூன்று வேளை (காலை, மதியம், இரவு) சாப்பிடவும். (ஐந்து கிராம் எடை)

**காலம் :**

வியாதி குணம் ஆகும் வரை சாப்பிடவும்.

**அனுமானம் :**

இந்த மருந்தைச் சுண்டைக்காயளவு எடுத்துப் பனை வெல்லத்தில் வைத்துச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

காரம், புளிப்பு, இனிப்பு இவைகளை நீக்கி அரிசிக் கஞ்சிச் சாப்பிடவும்.

## வயிற்றுக் கடுப்புக்கு இரண்டாவது மருந்து செய்யும் முறை :

| | | |
|---|---|---|
| 1. | வில்வம் பிஞ்சு | 20 கிராம் எடை |
| 2. | திப்பிலி | 20 கிராம் எடை |
| 3. | சாதிக்காய் | 20 கிராம் எடை |
| 4. | ஓமம் | 20 கிராம் எடை |
| 5. | சுக்கு | 10 கிராம் எடை |

இவைகளை அளவுப்படி எடுத்துக் கொண்டு ஒரு புதுச்சட்டியில் போட்டு லேசான தீயில் மேற்படி மருந்துகளைக் கருகாமல் பொன் நிறமாக வறுத்து, இடித்துத் தூள் செய்து வெண்ணெயில் இந்தச் சூரணத்தைக் கலந்து மெழுகு பதமாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :**

இந்த மெழுகு மருந்தை ஒரு கொட்டைப்பாக்கு அளவு (5 கிராம் எடை) சாப்பிடவும்.

**காலம் :**

தினம் இரண்டு வேளை வீதம் ஏழு நாட்கள் (காலை, மாலை) சாப்பிடவும்.

**அனுமானம் :**

பனை வெல்லத்தில் கலந்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

அனைத்து விதமான வயிற்றுக் கடுப்புத் தீரும்.

**பத்தியம் :**

புளி, காரம், இனிப்பு வகைகளை நீக்கி விட்டு அரிசிக்கஞ்சி சாப்பிடவும்.

# சிவசஞ்சீவி மாத்திரை

**( செய்யும் முறையும், உபயோகமும் )**

## சுவடி மருந்து முறை : 8

புடம் போடலங்கமு, கஷத்துரியுங் குங்குமப்புவும்
கோரோசினையும் கிரும்பு சித்திர மூலக கசாயம் விட்டு
அறைத்து மாத்திரை சேர்த்துக் கொள்ளவும்.
அரைப்பு 3 சாமம் அறைத்துக் கொள்ளவும் சாதி
லிங்கம் ஒரு கட்டியாய் அஞ்சுவிராகன் பத்து விராகன்
எட்டு விராகன் ஒரு கட்டியாய் வாங்கி வைத்துக் கொண்டு
பெரிய கோம்மட்டிக்காய் பலம் கொண்டு வந்து
கொம்மட்டிக்காய் பளத்தை மேலே சிவனாப்போல்.

## விளக்கம் :

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | புடம் போட்டுச் சுத்தி செய்த லிங்கம் | 10 கிராம் |
| 2. | கஸ்த்தூரி | 5 கிராம் |
| 3. | குங்குமப் பூ | 5 கிராம் |
| 4. | கிராம்பு | 10 கிராம் |
| 5. | கோரோசனை | 5 கிராம் |
| 6. | சித்திரமூலம் | 10 கிராம் |

## மருந்து செய்யும் முறை:

மேற்கண்ட மருந்துகளைக் கல்வத்தில் போட்டு இதனைச் சித்திர மூலம் கசாயம் விட்டு ஒன்பது மணி நேரம் அரைத்து மிளகு அளவுக்கு உருண்டைகளாகச் செய்து நிழலில் காயவைத்துக் கொள்ளவும்.

**தீரும் வியாதி:**

சகல காச்சல் அனைத்துச் சன்னி சம்மந்தப்பட்ட வியாதிகள் நீங்கும்.

**அளவு:**

குண்டுமணி அளவு அல்லது மிளகு அளவிற்குக் கொடுக்கவும் ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம்.

**காலம்:**

ஏழு நாட்கள் அல்லது சுரம் நிற்கும் வரை கொடுக்கவும்.

**அனுமானம்:**

மேற்படி மாத்திரைகளை முலைப்பாலுடன் தேன் அல்லது இஞ்சிச்சார் இவைகளில் கலந்து கொடுக்கவும்.

**பத்தியம்:**

அரிசிக் கஞ்சி சாதம், இச்சா பத்தியம்

**குறிப்பு:**

**சுத்திச் செய்யும் முறை:**

சுத்திச் செய்ய வேண்டிய அளவுக்கு லிங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு, ஆத்துக் கும்மிட்டிப் பழத்தைச் சீவி உள்பக்கம் லிங்கக் கட்டியை வைத்து, அதற்கு மேல் சீலை மண் செய்து ஒரு விராட்டியில் புடம் போட்டு ஆறிய பின் எடுத்தால் லிங்கம் சுத்தியாகும்.

மேற்குறிப்பிட்டுள்ள சஞ்சீவி மாத்திரைகளில் மூன்று வகையுண்டு. இந்த மூன்று வகையின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. **சீவச்சஞ்சீவி மாத்திரை**
2. **சஞ்சீவி மாத்திரை**
3. **பாலச்சஞ்சீவி மாத்திரை**

என்று மூன்று வகையுண்டு. ஆனால் இந்த நூலில் குறிப்பிட்டு இருப்பது சீவசஞ்சீவி மாத்திரை செய்யும் முறையும், இதன் உபயோக முறையினைப் பற்றியும் மிக விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சீவச்சஞ்சீவி மாத்திரை செய்யும் முறையும், அதன் உபயோகமும் :**

இந்த மாத்திரைகளுடன் சில கடைச் சரக்குகளைச் சேர்த்து இவைகளைக் குமரிச் சாற்றில் 12 மணிநேரம் அரைத்து மறுபடியும் கொன்றைப் பூச் சாற்றில் 12 மணி நேரம் அரைக்கவேண்டும்.

**தீரும் வியாதிகள் :**

மேற்சொன்ன அனைத்து வியாதிகளுக்கும் அதே அனுமானத்தில் கொடுக்கவும்.

**பால சஞ்சீவி மாத்திரை செய்யும் முறையும், அதன் உபயோகமும் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளைத் துத்தம் | 1 கழஞ்சு | 5·1 கிராம் எடை |
| 2. | வெள் வெங்காயம் (பூண்டு) | 1 கழஞ்சு | 5·1 கிராம் எடை |
| 3. | கோரோசனை | 1 கழஞ்சு | 5·1 கிராம் எடை |
| 4. | கொழுஞ்சி இலை | 1 கழஞ்சு | 5·1 கிராம் எடை |
| 5. | கடுகு ரோகணி | 1 கழஞ்சு | 5·1 கிராம் எடை |

மேற்படி மருந்து வகைகளை அகத்தியிலைச் சாறு விட்டு மூன்று மணிநேரம் அரைத்துப் பயிறு அளவிற்கு உருண்டை செய்து நிழலில் காயவைத்து ஒரு உருண்டை வீதம் வெண்ணெய் அல்லது முலைப்பாலில் கலந்து கொடுத்தால் குழந்தைகளின் கணமாந்தம், வயிற்று வலி, பொருமல் இவைகள் நிவர்த்தியாகும்.

## சகல சூலைக்கு எண்ணெய் மருந்து

(செய்யும் முறையும், உபயோகமும்)

### சுவடி மருந்து முறை: 4

சாதிக்காய் வீ. சாதி பத்திரி, வீசா., இரும்பு
அதிவிடையம் வீசா கோரை கிளங்கு வீசா, தாளிச பத்திரி
வீசா குங்குமப்பூ
இஞ்சி பனம் பாக்கு பால் அமுக்கிரா கிழங்கு ராயபூரிசக்கா
கிழங்கு சீனி
சிறுகாஞ்சரி முரை வெதுப்புகு, கொத்தமல்லி முத்தக்காசு,
சிந்திக்கொடி பற்பாடகம் திப்பிலி இவை எல்லாம்
வருத்து வஷ்த்திரா காயூ பண்ணி கொள்ளினவு
வேப்பண்ணைடி நரி உடைவேர், குன்று மணிவேர்
தயவளை வேர், எருக்கலம் வேர், முருங்கை வேர்,
ஆ வோங்கு கருத்தேன் எண்ணை டிக பூதகரப்பான்
பட்டை
கடலாருறு சிவபட்டை, அக்கிரு பட்டை, உடலூத்தி பட்டை
வாதம் கொலி பட்டை, இது வகை பலம், ஊசி காந்தம்,
கல்நார்
கல பிசின் வருத்து பொடி பண்ணி எண்ணையில்
போடவும் மிளகு
பலம் இ பொடி பண்ணி, எண்ணெயில் போட சூரிய
புடம்
மூன்று முளுகு உள்ளுக்கு ஒரு துட்டுணிடை சாப்பிட்டு
சீயக்காய் செய்வ
முளுகவும், சகல சூலையும் புண்ணும் சகல கரப்பானும்
புத்துகளும் தீரும்

## விளக்கம்:

சூலை என்பது ஒரு வாய்வுக் குணத்தைக்கொண்டது. பொதுவாக வாய்வு சதைகளில் பிடிப்பு மாதிரி வரும். ஆனால் சூலை வாய்வு என்பது, மனிதனின் மூட்டுகளில் தங்கிக்கொண்டு நீட்ட முடியாமலும், வீக்கமும், வலியுடன் முடங்கிய மாதிரி இருக்கும். இந்தச் சூலை வாய்வுகள் பதினெட்டு வகைப்படும். இவற்றின் சில வகை குறி குணங்களைப்பற்றிக் கீழே மிக விரிவாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

### 1. வாதச்சூலையின் குறிகுணம்:

உடல் கணத்து, திமிராய் விறுவிறுத்துப் பிடரியையும், பாதத்தையும் பற்றியிசிந்து கை, கால் விரல்கள், மொழி முதலிய பொருத்துகளில் வீங்கிக் கொண்டு, வலித்து நடக்க முடியாமல் முடங்கி மலம் கட்டும் இது குளிர் காலத்தில் அதிகக் கஷ்டத்துடன் இருக்கும்.

### 2. வாத வரய்வுச் சூலையின் குறிகுணம்:

கழுத்துப்பிடரி, மூட்டு முள்ளந்தண்டு, மார்பு விலா, பிட்டித்துடை இவைகளில் வீங்கிக் கழுத்து அதிகமான குத்து வலி மாதிரியும் காலையில் வயிறு கடல் அலை சத்தம் போல் இரையும்.

### 3. வாத நீர்ச்சூலையின் குறிகுணம்:

உடம்பின் உள் பகுதிகளில் புண் மாதிரி இருக்கும் கை, கால் விரல்கள் வீங்கித் திமிராய் விறுவிறுத்து அதிகமான வியர்வையுடன் குளிர்ந்து முகம் தலை வெதும்பி ஐயமும் பித்தமும் அதிகம் இருக்கும்.

**4. வாதச் சுரோணிதச் சூலையின் குறிகுணம்:**

உடம்பில் நரம்புகளின் மூலம் நீர் சென்று எல்லா விதமான அசைவு மூட்டுகளில் பாய்ந்து வீங்கி வலிக்கும்.

**5. வாதப் பித்தச் சூலையின் குறிகுணம்:**

மனிதன் கை, கால் விரல்கள், மூட்டு பொருந்துகளில் கரடு கட்டி மேனியெல்லாம் தடித்துப் புண்ணாகிவிடும்.

**6. சன்னி வாதச் சூலையின் குறிகுணம்:**

மனிதன் கை, கால் மூட்டுகளில் மோது கட்டி மேனி வீங்கி, நரம்பு அயர்ந்து தோன்றி, நாக்குக்குழறி காதுகள் சரியாகக் கேட்காது. கண்களின் பார்வை மங்கும்.

**7. பித்தச் சூலையின் குறிகுணம்:**

உடம்பில் உஷ்ணம் அதிகமாக ஏற்பட்டு வரண்டு, வலித்து, அசதி ஏற்பட்டு, நடுக்கம் ஏற்பட்டு தலை வலிக்கும். வாய் காய்ந்து இருக்கும். கை கால் பொருத்துகள் வலித்து விறுவிறுத்து மோது கட்டி இருக்கும்.

**8. ஐய சூலையின் குறிகுணம்:**

மனிதனின் கை, கால் நெஞ்சு இவைகளில் குத்து வலியுடனும், நெஞ்சு வரண்டு இருமல் கபம் சளியுடன் இருக்கும்.

**9. சுக்கிலப் பிரமேக சூலையின் குறிகுணம்:**

மனிதனின் தேகத்தில் அக்கினி அதிகரித்து நீர்த் தாரை வழியாகச் சுக்கிலம் வழியாகச் சீழ், இரத்தம் சதை போல் வேளியேறி உடம்பில் குத்து, வலியுடன் கை, கால் மொழிகளில் வீக்கம் இருக்கும். இவைகள் அனைத்திற்கும் நிவர்த்திக்கு மருந்து பின்வருமாறு.

தேவையான மருந்துகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | சாதிக்காய் | 50 கிராம் |
| 2. | சாதிப்பத்திரி | 50 கிராம் |
| 3. | கிராம்பு | 50 கிராம் |
| 4. | கோரைக்கிழங்கு | 50 கிராம் |
| 5. | தாளிச்சபத்திரி | 50 கிராம் |
| 6. | இஞ்சிச்சாறு | 250 மில்லி |
| 7. | களிபாக்கு | 50 கிராம் |
| 8. | அமுக்கிரான் கிழங்கு | 50 கிராம் |
| 9. | ராய பூரிச கிழங்கு | 50 கிராம் |
| 10. | சீனி கிழங்கு வத்தல் | 50 கிராம் |
| 11. | முரை கிழங்கு | 50 கிராம் |
| 12. | முத்தக்காசு | 50 கிராம் |
| 13. | திப்பிலி | 50 கிராம் |
| 14. | வேப்ப எண்ணெய் | 1 லிட்டர் |
| 15. | நரி உடை வேர் | 70 கிராம் |
| 16. | குன்றிமணி வேர் | 70 கிராம் |
| 17. | தூர்துவளை வேர் | 70 கிராம் |
| 18. | எருக்கன் வேர் | 70 கிராம் |
| 19. | முருங்கை வேர் (பட்டை) | 70 கிராம் |
| 20. | நல்ல எண்ணெய் | 1 லிட்டர் |
| 21. | ஆதகரன் பட்டை | 50 கிராம் |
| 22, | கடலாஞ்சி பட்டை | 50 கிராம் |
| 23. | சிவப்பட்டை | 50 கிராம் |
| 24. | அக்கிருகாரம் | 50 கிராம் |
| 25. | நூத்திப்பட்டை | 50 கிராம் |
| 26. | வாதமடக்கிப் பட்டை | 70 கிராம் |
| 27. | கொள்ளிப் பட்டை | 70 கிராம் |
| 28. | ஊசிகாந்தம் | 50 கிராம் |
| 29. | கல்நார் | 50 கிராம் |
| 30. | விலாம் பிசினு | 50 கிராம் |

| | | |
|---|---|---|
| 31. | மிளகு | 50 கிராம் |
| 32. | பரங்கி பட்டை | 35 கிராம் |
| 33. | கொத்தமல்லி | 50 கிராம் |
| 34. | சீந்திக்கொடி | 50 கிராம் |
| 35. | குங்குமப்பூ | 10 கிராம் |
| 36. | சிறுகாஞ்சி வேர் | 35 கிராம் |

மேற்குறிப்பிட்ட மருந்துகளை வில்வ இலைச் சாற்றில் வறுத்து நன்கு பொடிசெய்து, நல்லெண்ணெயில் போட்டு எண்ணெய் பதம் வரும் வரை சுண்டக்காய்ச்சி இதில் மிளகு 50 கிராம் எடைக்கு எடுத்துப் பொடி போட்டுச் சூரியபுடம் (சூரிய வெளிச்சத்தில் மூன்று தினங்கள் வைத்திருந்து) போட்டு வைத்துக்கொள்ளவும்.

**சாப்பிடும் அளவு :**

ஒரு பண எடை அளவு 488 மில்லி கிராம் அளவு.

**காலம் :**

நாள் ஒன்றுக்கு ஒரு பண எடையளவு அரை மண்டலம் அதாவது 24 நாட்கள் சாப்பிட்டு வரவும்.

**பத்தியம் :**

இச்சாப் பத்தியம் (புளி, உப்பு, கரப்பான் பண்டங்கள் நீக்கவும்)

**குறிப்பு :**

இந்த மருந்தை தலைக்குத் தேய்த்துக்கொண்டு சிறிது நேரம் கழித்து நல்ல சீயக்காய்ப் பொடியில் தலை முழுகவும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை: (லேகியம்)

கீழ் குறிப்பிட்டுள்ள முறையில் மருந்து செய்தும் உட்கொள்ளலாம்

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. | விளக்கெண்ணெய் | 750 மில்லி |
| 2. | தேங்காய்ப்பால் | 250 மில்லி |
| 3. | பேய்குமுட்டிகாய்ச் சாறு | 250 மில்லி |
| 4. | சத்திசாரம் | 35 கிராம் |
| 5. | நவச்சாரம் | 35 கிராம் |
| 6. | பஞ்சலவணம் | 35 கிராம் |
| 7. | பெருங்காயம் | 35 கிராம் |
| 8. | வாய் விளங்கம் | 35 கிராம் |
| 9. | கருஞ்சீரகம் | 35 கிராம் |
| 10. | கிராம்பு | 35 கிராம் |
| 11. | அறத்தை | 35 கிராம் |
| 12. | ஆணைத்திப்பிலி | 35 கிராம் |
| 13. | அரிசித்திப்பிலி | 35 கிராம் |
| 14. | திப்பிலிமூலம் | 35 கிராம் |
| 15. | அமுக்கிரான் கிழங்கு | 35 கிராம் |
| 16. | சதகுப்பை | 35 கிராம் |
| 17. | நெல்லிப்பருப்பு | 35 கிராம் |
| 18. | கொத்தமல்லி | 35 கிராம் |
| 19. | பொன்முசுட்டை வேர் | 35 கிராம் |
| 20. | ஓமம் | 35 கிராம் |
| 21. | சித்திரமூலம் | 70 கிராம் |
| 22. | வெந்தயம் | 35 கிராம் |
| 23. | வெள்ளைப்பூண்டு | 200 கிராம் |
| 24. | வெல்லம் | 500 கிராம் |
| 25. | கடுக்காய் | 100 கிராம் |
| 26. | தான்றிக்காய் | 100 கிராம் |

மேற்குறிப்பிட்டுள்ள மருந்துகளை நன்கு இடித்துச் சூரணித்து, லேகியமாகச்செய்து வைத்துக்கொள்ளவும்.

சாப்பிடும் கால அளவு :

தினம் ஒரு கொட்டைப்பாக்கு அளவு 48 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் :

இச்சாப்பத்தியம் (புளி, உப்பு. கரப்பான் பதார்த்தங்கள் நீக்கவும்)

## மேக வாய்வுக்குச் சூரண மருந்து

(செய்யும் முறையும், அதன் உபயோகமும்)

### சுவடி மருந்து முறை : 5

சுக்கு, வீசா, திப்பிலி, வீசா, திப்பிலி முலம்
வீசா, மிளகு வீசா, ஓமம் வீசா, குருசாணி ஓமம் வீசா
ஏலம் வீசா, நரசீரகம் வீசா கருஞ்சீரகம், வீசா
தேசாவாம் வீசா, பெருங்காயம் வீசா வெந்தயம்
வீசா பூபடி ரசத்தை புகளான் லோகத்தில் நிட்டு நீ
தங்கம் நேராம் மிடை போன்று ஆட்டு மணக்கு
அந்தயிடைக்
கேந்தி கூட்டு பொடியாய்க் குப்பிக் கொடுத்திடே...ய...
எடுத்தே யேரித்திடு இயல்பாய் சாமம் படுத்தே
செந்தூரம் பவள நிரமாகும் அடுத்தே தினங்குண்ணி
அமந்துன்ன மண்டலம் கருத்தே உன் திமாகம் கல்லும்
சமன் ஆவேன்.

விளக்கம் :

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 70 கிராம் |
| 2. | திப்பிலி | 70 கிராம் |
| 3. | திப்பிலி மூலம் | 70 கிராம் |
| 4. | மிளகு | 70 கிராம் |

| | | |
|---|---|---|
| 5. | ஓமம் | 70 கிராம் |
| 6. | குருசாணி ஓமம் | 70 கிராம் |
| 7. | ஏலம் | 70 கிராம் |
| 8. | நச்சீரகம் | 70 கிராம் |
| 9. | கருஞ்சீரகம் | 35 கிராம் |
| 10. | தேவதாரம் | 35 கிராம் |
| 11. | பெருங்காயம் | 35 கிராம் |
| 12. | வெந்தயம் | 35 கிராம் |
| 13. | ரசம் | 35 கிராம் |
| 14 | நெல்லிக்காய் கந்தகம் | 20 கிராம் |
| 15 | பூர் நீர் | 20 மில்லி |

மேற்குறிப்பிட்டுள்ள மருந்துகளில் ரசம், கெந்தகம் இவைகளைத் தவிர மற்ற வகைகளைக் கல் உரலில் போட்டு நன்கு இடித்துச் சூரணமாகச் செய்து வைத்துக் கொண்டு, பிறகு கெந்தகத்தையும், ரசத்தையும் ஆட்டு மணக்குச் சாற்றைவிட்டு அரைத்துக் குப்பியில் வைத்து 3 மணி நேரம் எரிய வைத்தால்செந்தூரம் பவள நிறமாகும்

(ஆட்டுமணக்கு என்றால் ஆமணக்கு)

**உட்கொள்ளும் அளவு :**

இந்த செந்தூரத்தில் ஒரு வேளைக்கு 130 மில்லி கிராம் எடையுடன் 5 கிராம் சூரணத்தை கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் ஒரு மண்டலம் சாப்பிடவும். (ஒரு மண்டலம் 48 நாட்கள்)

**பத்தியம் :**

இச்சாப் பத்தியம் (புளி, உப்பு, கரப்பான் வகை பண்டங்கள் நீக்கவும்)

## இரண்டாவது மருந்து செய்யும் முறை :

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 35 கிராம் |
| 2. | மிளகு | 35 கிராம் |
| 3. | திப்பிலி | 35 கிராம் |
| 4. | நச்சீரகம் | 35 கிராம் |
| 5. | ஏலம் | 35 கிராம் |
| 6. | அதிமதுரம் | 35 கிராம் |
| 7. | கோஷ்டம் | 35 கிராம் |
| 8. | சண்பகப்பூ | 35 கிரரம் |
| 9. | லவங்கப்பட்டை | 35 கிராம் |
| 10. | தாளிச பத்திரி | 35 கிராம் |
| 11. | சிறு நாகப்பூ | 35 கிராம் |
| 12. | கோரோசனை | 35 கிராம் |
| 13. | கூகை நீர் | 35 கிராம் |
| 14. | கல்நார் | 35 கிராம் |
| 15. | தாமரை வளையம் | 35 கிராம் |
| 16. | லவங்கப்பத்திரி | 35 கிராம் |
| 17. | சாதிக்காய் | 35 கிராம் |
| 18. | சாதிப்பத்திரி | 35 கிராம் |
| 19. | கிராம்பு | 35 கிராம் |
| 20. | வாய்விளக்கம் | 35 கிராம் |
| 21. | கடுக்காய் | 35 கிராம் |
| 22. | தான்றிக்காய் | 35 கிராம் |
| 23. | நெல்லிக்காய் | 35 கிராம் |
| 24. | குறுசாணி | 35 கிராம் |
| 25. | ஏலம் | 35 கிராம் |

இவைகளை நன்கு இடித்துச் சூரணம் செய்து இத்துடன் சீனி முந்திரிப்பழம், பேரீச்சம்பழம் இவைகளையும் ஒன்றாகச் சேர்த்து இடித்துச் சூரணமாக செய்து கொள்ளவும்.

**சாபபிடும் அளவு :**

மேற்கண்ட சூரணத்தில் 5 கிராம் எடையும், வங்க பஸ்பத்தில் ஒரு குன்றிமணி (130 மில்லிகிராம்) எடையுடன் கலந்து தினம் ஒரு வேளை வீதம் அரை மண்டலம் அதாவது 24 நான்கு நாட்கள் தொடர்ந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம், (உப்பு, புளி, காரப் பண்டங்களை நீக்கவும்)

**அனுமானம் :**

சீனி, கருப்பட்டி இவைகள் ஏதாவது ஒன்றில் கலந்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

அனைத்து விதமான மேக வாய்வுகளும் தீரும்.

## குருபாதம் சுரத்திற்கு மருந்து

### சுவடி மருந்து முறை : 6

**குரு பாதம் சுரத்திற்கு வெள்ளைக்காரம், மருந்து சூடன்றும் மூன்று மிளகு ஒரு எருக்கலம் மரும்பும் அரைத்துக்கொடுக்க குடுத்தின் பேரில் மோர் கலும்பு புளிச்ச தண்ணீர் ராகிலும் குடுக்கிலும் சுரம் நிற்க்கும்.**

**விளக்கம் :**

சுர வகையில் பல வகையுண்டு. அதனால் மேற்குறிப்பட்டுள்ள சுரம், கிரந்தி, சூலை, மேகநீர் ஆகிய வியாதி உள்ளவர்களுக்கு வரும். இதன் நிவர்த்திக்கு வெள்ளை

காரம் சூடம் ஏழு மிளகு இவைகளுடன் எருக்கன் பழுப்பு இலை ஒன்றைச் சேர்த்துத் தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாளைக்குக் கொடுக்கவும்.

**அனுமானம் :**

புளித்த தண்ணீர் மோர் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளி, உப்பு, கரப்பான் வகைகள் நீக்கவும்.

அசைவ உ ண வு க ள் நீக்கவும். கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும் என்பது மிக அவசியம்.

## சகல கண் நோய்களுக்கும் மருந்து

(செய்யும் முறையும், உபயோகமும்)

### சுவடி மருந்து முறை : 7

கீள்க்காய் நெல்லி வேரும் சிறுகீரை வேரும்
நெடுஞ்சி வேரும் யிது மூன்றும் அரைத்து கிளையில் தடவி உலர
வைத்து தீரித்து விளக்கி போட்டு கருத்த எள் எண்ணை
விட்டு விளக்கேற்றி புதுச்சட்டித் தாரில் வைக்கனும் மையப்
பத்தும் அந்த மையும் ஒரு விவாகன் றுத்தமும் ஒரு விராகன்
துரிதம் நெருப்பில் வெருப்பிக் கொண்டு ஒரு
விராகன் ஒரு கலத்தின் தாரிலே போட்டுக் காவீசம் செம்பு
கொண்டு உரைத்து நல்ல எண்ணெய் விட்டு நாலு நாளிகை
உறைத்துக் கொண்டு கண்ணிப்போட நீறு சகல கண்ணோவுந்தி தீரும்.

**விளக்கம் :**

உலகில் உயிர்வாழும் அனைத்து ஜீவன்களுக்கும் கண் பார்வை மிக முக்கியமானது. ஆனால் மனிதர்களுக்கு மிக, மிக முக்கியமாகும், அக்காலத்தில் உள்ளவர்கள் கண்களுக்கு எவ்வித நோய்களும் இல்லாமலும் பார்வைக் குறைவு இல்லாமல் வாழ்ந்து இருக்கிறார்கள் என்று சில நூல்களின் மூலமாக நாம் தெரிந்துகொண்டோம். ஆனால் கண்நோய்கள் 96 வகைப்படும் என்பதையும் அக்காலத்துச் சித்தர்கள் மிக விளக்கமாக எழுதிவைத்திருக்கிறார்கள். அதனைப்பற்றிக் கீழே மிக விரிவாகவும், அதற்கான மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

1) கருப்பு விழிகளில் மட்டும் வரும் வியாதிகள் மொத்தம் 45 வகைப்படும்.

2) கண் விழிகளில் இருக்கும் வெண்மையான பாகத்தில் வரும் நோய்கள் மொத்தம் 20 வகைப்படும்.

3) கண் இமையில் வரும் நோய்கள் மொத்தம் 16 வகைப்படும்.

4) கடைக்கண்ணில் வரும் வியாதிகள் மொத்தம் 15 வகைப்படும்.

ஆகக் கண் வியாதிகள் மொத்தம் 96 வகைப்படும்.

**இதன் நிவர்த்திக்கான மருந்து :**

1. கீழ்க்காய் நெல்லி சுத்தம் செய்த வேர் 5 கிராம் எடை
2. சிறு கீரை சுத்தம் செய்த வேர் 5 கிராம் எடை
3. நெருஞ்சி சுத்தம் செய்த வேர் 5 கிராம் எடை

இந்தமூன்று வேர்களை நன்றாக,சுத்தமாக அரைத்து ஒரு துணியில் இதனைத்தடவிக் காயவைத்து நல்லெண் ணெய் விளக்குத் திரியாக இதனைப் போட்டு எரியிட்டு அதன் சுடரை ஒரு புதுச்சட்டியில் புகை படரும்படி வைத் தால் மேல் இருக்கும் புதுச்சட்டியில் மையாகப் படர்ந்து இருக்கும் இதனைச் சுரண்டி எடுத்துக்கொண்டுஇத்துடன் ஒரு சிறு துண்டு துருசை அடுப்பில் சற்று வெதுப்பி இதனை ஒரு சொம்பில் போட்டு மேல் செய்து வைத்திருக்கும் விளக்குச் சுடர் மையைப் போட்டுக் கொஞ்சம் நல்ல எண்ணெய் விட்டு நான்கு நாழிகை வரை நன்றாக இந்த மூன் று வகைகளை உறைத்து ஒரு சிமிழில் வைத்துக் கொண்டு மேற்சொன்ன கண்நோய்களுக்குத் தினம் இரண்டு விழிகளில் 3 சொட்டுவீதம் போட்டு வந்தால் நிவர்த்தியாகும்.

குறிப்பு :

**கீழ்க்கண்ட முறையில் மருந்து தயார் செய்து போட்டால் சகல கண் நோய்கள் தீரும்.**

சுருள்ளி, குரிஞ்சா இலை சமன் எடை வீதம் எடுத்துக் கொண்டு இடித்து வெள்ளைத் துணியில் முடிந்து கண் விழிகளில் மூன்று சொட்டு வீதம் மூன்று நாளுக்குத் தொடர்ந்து போடவும்.

ஒரு சிறு துண்டு படிக்காரத்தைச் சுத்தமான தண்ணீரில் கரைத்துக் கண் விழிகளில் மூன்று சொட்டு வீதம், ஒரு நாளொன்றுக்கு மூன்று முறை வீதம், மூன்று நாளுக்குப் போடவும். கண் விழிகளில் போடாமல், மேற்படி மருந்தைக் கொண்டு கண் விழிகளைக் கழுவினாலும் கண் நோய்கள் தீரும்.

# பூரண லேகியம்

( செய்யும் முறையும், உபயோகமும்)

## சுவடி மருந்து முறை: 8

சுக்கு திப்பிலி, மிளகு சாதிக்காய், கிரும்பு சாதி
பத்திரி, தாளிகை பத்திரி, மிளகு, சடாமான்சி மாஞசி,
சன்ன இலவங்கம், நெல்லிப்
பருப்பு அதி மதுரம், ஏலம், சீரகம், சிருநாகப்பூ,
கசகளைவு பின்ன
ஓமம், வால் மிளகு, சித்தரத்தை, அக் கிருகாரம், கோட்டம்,
சாரப் பருப்பு, வாலுளுவை, அரிசி இது வகைக்கு பீ எகி
ராய பூரிச சர்க்கரை தூய நல்ல சடைக் கஞ்சா
அருகம் வேர், தூதுவளை வேர், அமுக்கிருவேர்
வில்லைனேர்
ரசி ந்திகக் கொடி, சந்தனக்கட்டை, விலாமிச்ச வேர்,
இது வகைக்கு ஸய தண்ணீர் படிரு யக கசாயம்
இரண்டுபடி பால்
பிசி வில்லை வேர், பசும்படி கற்பபம், பாலில் சுத்தி
முப்பது நாழிகை தண்ணீர் சுத்தி பதினைந்து நாழிகை
சட்டி காயவைத்து
நவ புடம் போட்டு கொள்ளவும் சர்க்கரை நரய

## விளக்கம் :

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 100 கிராம் |
| 2. | திப்பிலி | 100 கிராம் |
| 3. | மிளகு | 100 கிராம் |
| 4. | சாதிக்காய் | 100 கிராம் |
| 5. | கிராம்பு | 50 கிராம் |
| 6. | சாதிபத்திரி | 50 கிராம் |

| | | |
|---|---|---|
| 7. | தாளிசபத்திரி | 50 கிராம் |
| 8. | நெல்லிப்பருப்பு | 100 கிராம் |
| 9. | கசகசா | 50 கிராம் |
| 10. | அதிமதுரம் | 50 கிராம் |
| 11. | ஏலம் | 50 கிராம் |
| 12. | சீரகம் | 50 கிராம் |
| 13. | ஓமம் | 50 கிராம் |
| 14. | வால்மிளகு | 50 கிராம் |
| 15. | சித்திரத்தை | 50 கிராம் |
| 16. | சன்னலவங்கப்பட்டை | 50 கிராம் |
| 17. | அக்கிரகாரம் | 50 கிராம் |
| 18. | கோஷ்ட்டம் | 50 கிராம் |
| 19. | சாரப்பருப்பு | 50 கிராம் |
| 20. | வாலுலுவையரிசி | 50 கிராம் |
| 21. | பூமி சக்கரகிழங்கு | 50 கிராம் |
| 22. | தூதுவளைவேர் | 50 கிராம் |
| 23. | கஞ்சா (சுத்தி செய்தது) | 25 கிராம் |
| 24. | அருகன் வேர் | 25 கிராம் |
| 25. | அமுக்கிரான்வேர் | 50 கிராம் |
| 26. | வில்வவேர் | 50 கிராம் |
| 27. | சீந்திக்கொடி | 50 கிராம் |
| 28. | சந்தனக்கட்டை | 50 கிராம் |
| 29. | பசும்பால் | 1 லிட்டர் |
| 30. | தேன் | 250 மில்லி |
| 31. | சர்க்கரை | 500 கிராம் |
| 32. | ராயபூரிச கிழங்கு | 35 கிராம் |
| 33. | விலாமிச்சம் வேர் | 35 கிராம் |
| 34. | சிறுநாகப்பூ | 35 கிராம் |
| 35. | திராட்சை | 35 கிராம் |
| 36. | பாதாம்பிசின் | 35 கிராம் |
| 37. | சடாமாஞ்சில் | 35 கிராம் |

மேற்படி மருந்து வகைகளை ஒரு புதுச்சட்டியில் போட்டு இலேசான தீயிட்டுப் பொன் நிறமாக வறுத்து நன்றாக இடித்துத் துணிகொண்டு வடிகட்டிச் சூரணம் மாதிரிசெய்து சர்க்கரைப்பாகு காய்ச்சி இந்தச்சூரணத்தைத் தூவி நன்கு கிண்டிக்கொண்டு இருக்கும் சமயம் பாலை விட்டு நன்றாகச் சுண்டி மெழுகு பதம் வரும்போது இறக்கி நெய், தேன் விட்டுக் கிண்டி ஆறவிட்டுச் சுத்தமான ஜாடியில் வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

சின்னப்பாக்களவு (5 கிராம் எடை) வீதம் தினம் இரண்டு வேளை சாப்பிடவும்.

**காலம் :**

ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

தாது விர்த்தி, பிரமேகம், கிராணி அதிசாரம், வாய்வு பெரும்பாடு, எரி குன்மம்.

**பத்தியம் :**

பத்தியம் எதுவும் கிடையாது, நல்லவிதமான உணவு வகைகளையும், இரவில் பாலும் சாப்பிடவும். பெரும்பூசணி கரப்பான் சம்பந்தப்பட்டது, வாய்வு பதார்த்தங்கள் நீக்கவும்.

**குறிப்பு :**

**கஞ்சா விதைகளைச் சுத்தி செய்யும் முறை :**

தேவையான கஞ்சா விதைகளைப் பசும்பாலில் வேகவைத்துக் கொண்டால் சுத்தியாகும்.

# காமாலை, உள்நீர்க் கோர்வை, மல்லிகுணம் இவைகளுக்கு மருந்து

( செய்யும் முறையும், உபயோகமும் )

## சுவடி மருந்து முறை: 9

சங்கு, சங்குபபிச்சாறுபடி உ, முடக்கோத்தான் சாறுபடி உ, நீர்முள்ளிச்சாறுபடி உ, வெள்அருகன் சாரணைவேரங் முருங்கைப்பட்டைஙசி மூப்பிலி பீரங்கில் இருபத்தோரு பிடி பெரப்பிக்கில் யிருபத்தோரு பிடி விளி இலே — எருமைச்சாணி ஒரு தேங்காய் ஆண் கழுதை லத்திங் யஉ, வெள்ளாட்டுக் கொமியமும் படி உ, பசுவின் கொமிலுடி உ, கையபளி நீரடி முன் சொன்ன மருந்தும் இந்தக் கொமியமும் ஒன்ருக்கூடி பிசைந்து பிளிந்து சிலே படி கொண்டு இதுவுட்கை கூட்டும் கடைசரக்கும் சுக்கு, திப்பிலி, வாறுவை அரிசி அரிசிக்கார போக்கரிசி விரை சித்தரத்தை பொத்தை சாதிக்காய் கடுக்காய் இதுவெல்லாம் வேரொன்றும் பத்து காசிடைக்கூட்டி அரைத்து கலந்துகொள்ள இதில் ஆமணக்கெண்ணை இதுகூட விட்டுக்கலந்து வெந்ததுமே குபதத்தில் வடித்துக்கொள்ளும் இந்த எண்ணை ரண்டு காசிடை உட்கொள்ள மேலுக்கு வாலேயிட இப்படி பத்து நாளுக்கு கொள்ள கிறுக்கு தீரும். வியாதி விசம் பாகம் பாண்டு ரோகம் உளது காமாலை உள்நீர் கோர்வை கோதாம் வாய்குணம் மல்லிகுணம் வாயு, புத்திர சினைப்பு, இருமல் இது முதலான ரோகமெல்லாம் தீரும்.

**விளக்கம்:**

மேலே குறிப்பிட்டு இருக்கும் வியாதிகளுக்கு மேற்சொன்ன மருந்துகளைப் பார்க்கும்பொழுது சற்று மன அருவெறுப்பு ஏற்படக்கூடும். ஆனால் அக்காலத்துச் சித்தர்கள் வியாதிகள் குணமாக அவர்கள் அனுபவத்தில் எல்லாவிதமான பொருட்களையும் மருந்துப் பொருட்களாக நினைத்து மற்ற மருந்துகளுடன் சேர்த்து மருந்துகள் தயார் செய்து வியாதி உள்ளவர்களுக்குக் கொடுத்துக் குணம் அடையச் செய்து இருக்கிறார்கள். அதனைச் சுவடி மூலமாகவும் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த மருந்தின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | சங்குப்பிச்சாறு | 1½ | லிட்டர் |
| 2. | முடக்கோத்தான் சாறு | 1½ | லிட்டர் |
| 3. | நீர்முள்ளிச் சாறு | 1½ | லிட்டர் |
| 4. | வெள்ளை அருகன் இலைச் சாறு | 1½ | லிட்டர் |
| 5. | சீனிக்காரம் | 16 | கிராம் |
| 6. | போக்கரிசி விரை | 16 | கிராம் |
| 7. | சாரணை வேர் | 16 | கிராம் |
| 8. | முருங்கப்பட்டை | 16 | கிராம் |
| 9. | முப்பிலி பிரங்கில் இலை | 22 | கைப்பிடியளவு |
| 10. | பொப்பிக்குல் | 21 | கைப்பிடியளவு |
| 11. | விளிதா இலை சாறு | 1½ | லிட்டர் |
| 12. | எருமைச்சாணி | 1 | கிலோ |
| 13. | கழுதை லத்தி | 1 | கிலோ |
| 14. | வெள்ளாட்டுச் சிறுநீர் (கோமியம்) | 1½ | லிட்டர் |
| 15. | பசுவின் சிறுநீர் (கோமியம்) | 1½ | லிட்டர் |
| 16. | சுக்கு | 16 | கிராம் |
| 17. | திப்பிலி | 16 | கிராம் |

| | | |
|---|---|---|
| 18. | வாலுளுவை அரிசி | 16 கிராம் |
| 19. | கார்போக அரிசி | 16 கிராம் |
| 20. | சித்தரத்தை | 16 கிராம் |
| 21. | பேரரத்தை | 16 கிராம் |
| 22. | சாதிக்காய் | 16 கிராம் |
| 23. | கடுக்காய் | 16 கிராம் |
| 24. | ஆமணக்கெண்ணெய் | 1½ லிட்டர் |
| 26. | அவுரி இலைச்சாறு | 1 லிட்டர் |

மேற்சொன்ன சாறு வகைககளையும்எருமைச்சாணி கழுதை லத்தி, தேங்காய்ப்பால், வெள்ளாட்டுச் சிறுநீர் பசுவின் சிறுநீர், இவைகளை ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி வடித்துக்கொண்டுகடைச்சரக்குகளை நன்கு இடித்து இதை அந்தப் பாத்திரத்தில் உள்ள கலவையில் போட்டு நன்கு கலக்கவும். இக்கலவையுடன் அளவுக்கேற்ற விளக்கெண்ணையை ஊற்றி அடுப்பில் வைத்து எண்ணெய்ப் பதம் வரும் வரை நன்கு காய்ச்சி வடிகட்டிக் கொண்டு, கீழ்ச்சொல்லிய விகிதங்களின்படி உட்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

இரண்டு காசு எடை அளவு (330 மில்லி கிராம்)

**காலம் :**

பத்து நாட்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சா பத்தியம் (புளி, உப்பு, கரப்பான் உணவு வகைகளை நீக்கவும்)

**குறிப்பு :**

இந்த எண்ணெய் மருந்தை உடல் முழுவதும் தடவிக்கொண்டு சிறிது நேரம் கழித்து நன்கு சுத்தமான நீரில் குளிக்கவும்.

காமாலையின் அறிகுறிகள் :

உதிரம்கெட்டு தலைவெறுத்து ஈரல்கருகி, தசைகளில் கிருமிகள் பட்டு மாமிசத்தைத் தின்று மஞ்சள்நீர் கொள்வதன்றிப் பல வியாதிகள் வர வாய்ப்புண்டு.

## காமாலைக்கு மருந்து

### இரண்டாவது மருந்து செய்யும் முறை :

செங்கடுக்காய், பூவரசம்பட்டை வகைக்கு 25 கிராம் எடுத்து இரண்டையும் எடுத்துக்கொண்டு இடித்து ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீர்விட்டுக் கிஷாயம் செய்து இதனை (500 மில்லி கிராம்) வரும்வரை சுண்டக்காய்ச்சி 100 மில்லி கிராம் எடுத்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும்.

## பெண்களுக்குக் கர்ப்பம் தரிக்க மருந்து

(செய்யும் முறையும், உபயோகமும்)

### சுவடி மருந்து முறை : 10

குரு பாதம் எலுமிச்சம் பளச் சாறுபடி. அதில் கருஞ் சீரகம் அந்த சாற்றில் உலர போட்டு நின்றுலத்தாய் உலர்த்தி பொடி செய்து அந்த பேரிரண்டு பங்கும் கூகை நீரு ஒரு பங்கும் வட்டி, சூதகமான முன்னாள் புளிச்சக்காடி தண்ணீரில் அந்தப் பொடியைப் போட்டு மூன்று நாள் கொடுத்தால் கெர்ப்பம் முண்டாம்.

**விளக்கம் :**

பெண்கள் திருமணமாகிப் பல ஆண்டுகள் கடந்தும் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் இக்காலத்தில் சிலர் இருக்கிறார்கள். ஆனால் கர்ப்பம் தரிக்காததற்குப் பல வகையான காரணங்கள் உள்ளன. இதன் நிவர்த்திக்கு மேற் சொல்லியிருக்கும் மருந்தினை அக் காலத்தில் அனுபவ முறையில் சுவடிகளின் மூலமாக எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த மருந்தின் விளக்கம் கீழே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு லிட்டர் எலுமிச்சம்பழத்தின் சாற்றில் 100 கிராம் எடைக்குக் கருஞ்சீரகத்தைப் போட்டு நன்றாக ஊற வைத்துப் பிறகு இதனை நிழலில் நன்கு காயவைத்துப் பொடி செய்து இந்த இரண்டின் அளவிற்கு, இரண்டு மடங்கு அதிகமான அளவு எடுத்துக்கொண்டு, கூகை நீர் ஒரு பங்கு அளவுக்கு எடுத்துக் கலந்து வைத்துக் கொண்டு பெண்கள் மாத விலக்கு ஏற்பட்ட மூன்றாவது நாள் காலை எதுவும் சாப்பிடாமல் இந்த மருந்தைப் புளிச்சகாடித் தண்ணீரில் 10 கிராம் பொடியைப் போட்டுக் கலக்கி உட்கொள்ளவும். இப்படி மூன்று தினங்களுக்குக் கொடுத்தால் கெர்ப்பமுண்டாகும்.

**பத்தியம் :**

இந்த மருந்தைச் சாப்பிடும் போது எதையும் சாப்பிடாமல், மருந்து சாப்பிட்ட நான்கு மணி நேரம் கழித்துச் சுவைக்குத் தகுந்தாற் போல் உணவு சேர்த்துக் கொள்ளலாம். இதற்குப் பத்தியம் வேறு இல்லை.

இதற்குக் கீழ்க்கண்ட முறையிலும் மருந்து தயார் செய்து சாப்பிடலாம்

## இரண்டாவது மருந்து செய்யும் முறை:

1. சிற்றாமணக்கு எண்ணெய் ½ லிட்டர்
2. கருநொச்சிச் சாறு ½ லிட்டர்
3. கையாந்தகரை ½ லிட்டர்
4. எலுமிச்சம் பழச்சாறு ½ லிட்டர்
5. நல்ல பசுவின் நெய் ½ லிட்டர்
6. மிளகு 50 கிராம்
7. காயம் (பெருங்காயம்) 50 கிராம்
8. நெருஞ்சி விதை 50 கிராம்

மேற்கண்ட சாறு வகை எண்ணெய், நெய் இவைகளை ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி மற்ற இதர மிளகு, காயம், நெருஞ்சி விதை இவைகளை இடித்த பொடியை எண்ணெய்ச் சாறு கலவையில் போட்டு இந்தக் கலவையை அடுப்பில் வைத்து லேசான தீயிட்டு எண்ணெய்ப் பதம் வரும் வரை நன்கு காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**சாப்பிடும் அளவு :**

மூன்று நாளைக்கு ஒரு சின்னக்கரண்டி (15 மில்லி அளவு)

**காலம் :**

மூன்று நாட்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டும்.

**குறிப்பு :**

வீட்டு விலக்கு ஏற்பட்ட மூன்றாம் நாள் முதல் மூன்று நாட்களுக்குச் சாப்பிட வேண்டும். காலை வேளையில்தான் இந்த மருந்தை உட்கொள்ள வேண்டும். இவ்வாறு சாப்பிட்டு வந்தால் கர்ப்பம் தரிக்கும்.

# பெண்களுக்கு ஏற்படும் சூதகவலிக்கும் கர்ப்ப வலி நிவர்த்திக்கும் மருந்து

(செய்யும் முறையும், உபயோகமும்)

## சுவடி மருந்து முறை: II

கவுதும் பையை வாய் பேசாமல் பிடிங்கி வந்து அரைத்து எலுமிச்சம் காய் அளவு கருத்த என் எண்ணையில் படிவு ⅛ படி குழப்பிக் கொடுக்க இந்த படி மூன்று நாள் கொடுத்தால் சூதக வலி கெர்ப்பவலி நிற்கும்.

## விளக்கம்:

கதும்பைச் செடியை யாரிடமும் பேசாமல் வேருடன் பிடுங்கி வந்து, இந்தச் செடியைத் தண்ணீரில் போட்டுச் சுத்தம் செய்து விட்டு, அம்மியில் வைத்து அரைத்து எலுமிச்சங்காயளவு உருண்டை செய்து அடுப்பில் ஒரு சட்டியை வைத்து நல்ல சுத்தமான நல்லெண்ணெயை ஊற்றிய பிறகு உருண்டையை அடைபோல் செய்து இந்த எண்ணெயில் போட்டு வதக்கி எடுக்கவும். இப்படி மூன்று நாட்களுக்கு செய்து கொடுத்தால் மேற்படி வியாதிகள் தீரும்.

பத்தியம்:

வாய்வுப் பண்டங்களை நீக்கவும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை:

துத்தியிலை, மிளகு, பூண்டு, வசம்பு இவைகளைச் சமன் எடை எடுத்துக்கொண்டு நன்றாக அரைத்து 10 கிராம் எடை வீதம் தினம் ஒரு வேளை மட்டும் சாப்பிடவும். இப்படி மூன்று நாட்களுக்கு மட்டும் கொடுக்கவும்.

குறிப்பு :

இந்த மருந்தைப் பெண்கள் சூதகமாயிருக்கும் தினங்களில் மட்டும் மூன்று நாட்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம் (புளி, உப்பு நீக்கவும்)

## மூன்றாவது மருந்து செய்யும் முறை :

இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம் இவைகளைச் சமன் எடை எடுத்துச் சட்டியில் போட்டு இளவறுப்பாய் வறுத்து நன்றாகப் பொடி செய்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் சூதகமான மூன்றாம்நாள் முதல் மேற்படி மருந்தைக் கொடுக்கவும்.

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம்

## நான்காவது மருந்து செய்யும் முறை :

சுக்கு, மிளகு, திப்பிலி, கழற்பருப்பு, ஓமம், இந்துப்பு இவைகளைச் சமன் எடை எடுத்துக் கொண்டு இள வறுப்பாய் வறுத்துப் பொடி செய்து 5 கிராம் எடைக்கு எடுத்து நல்லெண்ணெயில் கலந்து தினம் ஒரு வேளை வீதம் சூதகமான மூன்றாம் தினம் முதல் கொடுக்கவும்.

பத்தியம் :

இச்சாப்பத்தியம் கடைப்பிடிக்கவும். (புளி, உப்பு நீக்கவும்)

## கெர்ப்ப வலிக்கு மருந்து :

| | | |
|---|---|---|
| 1. | தாமரைப்பூ | 20 கிராம் |
| 2. | சந்தனத்தூள் | 20 கிராம் |
| 3. | விலாம்மிச்சம்வேர் | 20 கிராம் |

இவைகளைச் சமன் எடை எடுத்து தண்ணீர் விட்டு அரைத்துப் பாலில் கலந்து உட்கொள்ளவும்.

காலம் :

மூன்று நாட்கள் சாப்பிடவும். (மூன்று வேளை மட்டும் கொடுக்கவும்)

அளவு :

மேற்சொன்ன மருந்தில் ஒரு கரண்டி வீதம் சாப்பிடவும் இதற்குப் பத்தியம் கிடையாது.

2, தக்கோலமும், தாமரைப்பூவும் இவை இரண்டையும் சமன் எடை வீதம் எடுத்தரைத்துப் பசும்பாலில் கலந்து மேற்சொன்ன அளவு, காலம் பத்தியம் இவைகளின்படி மருந்துகளைச் சாப்பிடவும்.

# சகல வாதத்திற்கும் மருந்து செய்யும் முறை

## சுவடி மருந்து முறை: 12

கவுதும்பை பச்சிலையுடன் வெள் வெங்காரபத்தை பூரு கஉ எலுமிச்சால் கூட்டி அரைத்துக் கொடுக்க தொடையும் அமரத

வள்ளிதுரதன் பிரியி வேம்பு, நீடிய சிவதை சுக்கு நிலை
குறிஞ்சாரணையோடு யோடியே இவை யேட்டும்
கடு நெய்யில்
விண்ணு நகக பெடியூ பிடகா வுண்டாம் பிராயமு
மிளமையாகும்
வே பே எண்ணை வ, நொச்சி சாறுபடி வ,
வாதமடக்கி
துளறு படி வ, கோவை கிழங்கு சாறு படி நீவ,
எருக்கம்பால்
படிவ வெள் வெங்காயம் பூடு ந, கத்தரி மஞ்சள்
தெறுக்க
இது வெல்லாம் ஒன்றாய் சேகரித்து பதத்தில்
வடித்து—விவீவேறு மேறுகு தடவி சாயஸ்காலம்
வென்னீர்
விட்டு சகல வாதமும் தீரும்.

**விளக்கம்:**

வாத நோய் என்பது மிகக் கடுமையான நோய் ஆகும். இதில் பலவகை உண்டு. இதன் வகைகளைப் பற்றியும் குறிகுணங்களைப் பற்றியும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளது. பொதுவாகச் சகல வாத நோய்களுக்கு உட்கொள்ளும் மருந்து, மேல் தடவும் எண்ணெய் என்ற இரு மருந்து முறைகள் உள்ளன. இவை விபரமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மேற் குறிப்பிட்டுள்ள மருந்துகளைவிட இன்னும் அதிகமான அளவில் மருந்துப் பொருட்களைச்சேர்த்து, லேகியமாகவும், சூரணமாகவும், தைலமாகவும் செய்துகொள்ளும் முறை பற்றிப் பழைய நூல்களில் முன்னதாக வெளியாகி உள்ளது. ஆனால் அக்காலத்துச் சித்தர்கள் மேற்குறிப்பிட்டு இருக்கும் மருந்துகளை அவர்கள் அனுபவித்துத் தெரிந்ததனைச் சுவடிகளில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மேற்படி மருந்து செய்யும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**சூரணம் செய்வதற்குத் தேவையான மருந்துகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | கதும்பை இலைத்தூள் | 150 | கிராம் |
| 2. | பூண்டுப்பல் | 150 | கிராம் |
| 3. | எலுமிச்சங்காய் | 5 | பழச்சாறு |
| 4. | அமுர்த வள்ளி | 150 | கிராம் |
| 5. | வேம்புத்தூள் | 150 | கிராம் |
| 6. | சிவதை வேர் | 150 | கிராம் |
| 7. | சுக்குத் தூள் | 100 | கிராம் |
| 8. | குற்ஞ்சா இலைத்தூள் | 100 | கிராம் |
| 9. | ஆடாதோடாபட்டைத்தூள் | 100 | கிராம் |
| 10. | நுநாப்பட்டைத்தூள் | 100 | கிராம் |
| 11. | ஆவாரைப்பட்டைத்தூள் | 100 | கிராம் |
| 12. | சத்தி சாரணைத்தூள் | 100 | கிராம் |
| 13. | கோவை கிழங்கு | 20 | கிராம் |

மருந்துகளை மேற்கண்ட விகிதப்படி எடுத்துக்கொண்டு பசுவின் நெய்யில் பொன் நிறமாக வறுத்து நன்றாகப் பொடி செய்து இந்த சூரணத்தைத் தினம் மூன்று வேளை வீதம் ஒரு மண்டலம் (அதாவது 48 நாட்கள்) சாப்பிடவும்.

**உட்கொள்ளும் அளவு :**

ஐந்து கிராம் எடை அளவு எடுத்துக்கொண்டு மேற் குறிப்பிட்டுள்ள காலத்திற்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

வாய்வு உள்ள உணவு வகைகளையும், புலால்உணவு வகைகளையும் நீக்கவும்.

**தைலம் செய்வதற்குத் தேவையான மருந்துகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | வேப்ப எண்ணெய் | 1 | லிட்டர் |
| 2. | நொச்சிச்சாறு | 1 | லிட்டர் |
| 3. | வாதமடக்கிச் சாறு | 1 | லிட்டர் |
| 4. | துளசிச்சாறு | 1 | லிட்டர் |
| 5. | வெள்ளை நொச்சிச்சாறு | 1 | லிட்டர் |
| 6. | எருக்கன் பால் | $\frac{1}{4}$ | லிட்டர் |
| 7, | பூண்டு | 250 | கிராம் |
| 8. | கஸ்தூரி மஞ்சள் | 200 | கிராம் |

மேற் குறிப்பிட்டுள்ள மருந்துகள் அனைத்தையும், இடித்துச் சூரணம்போல் செய்து, வேப்ப எண்ணெயில் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து எண்ணெய்ப் பதம் வரும் வரை, காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு மேற் சொன்ன வாத நோய்களுக்கு மேல் தடவி வந்தால் நிவர்த்தியாகும்.

குறிப்பு :

தினம் ஒருவேளை மட்டும் மேல் தேய்த்துக்குளிக்கவும்

பத்தியம் :

வாய்வு உள்ள உணவு வகைகளை நீக்கவும்.

குறிப்பு :

மேல் குறிக்கப்பட்டு இருக்கும் மருந்து வகைகளை அரைத்துப் பந்தத்தில் தடவிச் சுருட்டி வேப்ப எண்ணெயில் சுடர்செய்து வடியும் எண்ணெய்க்குத்தான் சுடர் தைலம் என்று பெயர்.

## கிராந்தி மேகம், மேகவாய்வு, அக்கினி மந்தம், தாதுகூடம், குட்டம், பக்கிரி சூலை இவைகளுக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 13

வெல்லப் பாதுரி பட்டை, கெந்தகம் குக்கிலங், பரங்கிப் பட்டை இடித்து வடிகட்டி இரண்டுபடி. பசுவின் பால் தாளில் சீ சட்டியில்லிட்டு பேலே சிலை வண்டு
கடிவடிகடின்

சூரணத்தை விட்டு யேல்ச் சட்டியில் மூடி சில மண் செய்து அரைப்படி பால் சட்டியில் லிருக்க எரியிடிரக்கி கொண்டு பிடம் வித்த சூரணத்தின் பெரிகன் சட்டியில்லபி தீர்த்து ஆரவைத்து தூளாக வைத்துக் கொள்ள கெந்தகம் சுத்தி

ரெண்டுபடி பசுவின் பாலில் சுத்தி பண்ணி யெடுக்க
வெள்ளாட்டு
பாலில் ஒரு சுத்தி பண்ணி எடுக்க அப்பி சிலையில்
கிளிக்கடி
ஒரு 'மூடாவில் பதக்குத்' தண்ணீர் விட்டு கத்தாளைச் மூல
மதுண்டித்து அந்த தண்ணீரில்ப் போட்டு இதைத் தொ
வைந்திரம் கட்டி ஒருபடி தண்ணீர் யிருக்க யிரக்கி
ஆர வைத்பு
எடுத்துக் கொள்ள லுருக்கி சுத்தி எட்டுபடி தண்ணீர்
விட்டு அதில் எரிவொங்கு சித்திர மூலம் வொங்கு - சங்கம்
பெ......நரு முப்புர மெரிதான் வேர் பருவாயப்
பட்டைரு இது வெல்லாம் இடித்து தண்ணீரில் போட்டு
பானை][வாயில்] பச்சிலை] கடி அதின் பேரில் குக்கிலைப்
பாத்தி சட்டி பிளத்தித் சிலை மண் செய்து நாளித் தண்
ணீர் யிருக்கி கொள்ள அந்த குக்கிலை எடுத்து
நிறுத்துக் கொண்டு அதுக்கு ரெண்டு கெந்தகம் நிறுக்
கொண்டு
பொடி 'பண்ணி குக்கிலை பசுவின்பால் விட்டரைத்து
கெந்தகம்
நிறுக் கொண்டு' பொடி பண்ணி குக்கிலை பசுவிசு பால்
விட்டரைத்து கெந்தகம் பரம் பற்பத்துடனே. பிசரிக்
கொண்டு கெந்தகம் பிரபத்து-குரஷ பட்டைச் சூரணங்க
கூட்டிக் கொண்டு முறையூ ஒன்ருயச் சேர்த்து ஒரு புது
கலசத்தில் வைத்துக்கொள்ள நெய்யில் பத்துனுள் வெருகடி
பிரமாணங் கொள்ள சீனியும் வெறுகடி பிரமாணமும்
பத்துனுள்
பசுவின் நெய்யில்.........கொள்ள தலை முளுகிறது
முக்கூட்டு தேச்சு முளுகு இதுக்கு தீரும் வியாதி கிராந்தி
மேகம் பசுவாச. காசம்மே மெய் வாய்வு அக்கினி
மந்தம் தாது கூடம். குட்டம் பக்கிரிருலை இது முதலாகிய
ரொகங்களெல்லாம் தீர்த்து மாளம் பூ வண்ணமாக வலிப்பு
முண்டாகும்.

**விளக்கம் :**

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | வெள்ளைப்பாதிரிவேர்ப் பட்டை | 100 கிராம் |
| 2. | கெந்தகம் | 50 கிராம் |
| 3. | குக்கிலம் | 50 கிராம் |
| 4. | பரங்கிப்பட்டை | 100 கிராம் |
| 5. | பசும்பால் | 1 லிட்டர் |
| 6. | சித்திரமூலம்பட்டை | 50 கிராம் |
| 7. | சங்கம்வேர் | 50 கிராம் |
| 8. | வேங்கைப்பட்டை | 100 கிராம் |
| 9. | பெருங்காயம் | 50 கிராம் |
| 10. | முப்புரமெரித்தான் வேர் | 100 கிராம் |
| 11. | ஜீனி | 200 கிராம் |
| 12. | பசுநெய் | 150 கிராம் |
| 13. | முறையாகச் செய்யப்பட்ட ரசபஸ்பம் | 10 கிராம் |
| 14. | கருக்குவாய்ப்பட்டை | 100 கிராம் |

செய்யும் முறை :

வெள்ளைப்பாதிரிப்பட்டை, குக்கிலம், பரங்கிப் பட்டை, சித்திரமூலம்பட்டை, சங்கம்வேர், வேங்கைப் பட்டை, பெருங்காயம், முப்புரமெரித்தான்வேர், கருக்கு வாய்ப்பட்டை இவைகளை நன்றாக இடித்துத் தூள் செய்துகொள்ளவும். பிறகு ஒரு தாளிச்சட்டியை எடுத்துக்கொண்டு அதில் அரை லிட்டர் பாலை ஊற்றி, இச்சட்டியின்மேல் துணிகொண்டு வேடுகட்டி. இதன் மேல் மேற்படி செய்து வைத்துள்ள தூள்களை வைக்கவும். இதன்மேல் ஒரு சட்டியைத் தலை கீழாகக் கவிழ்த்து மூடிச் சிலைமண்செய்து பிட்டு அவிப்பதுபோல் அவிக்கவேண்டும் இப்படி அவித்தத் தூளைக் காயவைத்து இடித்ததூளுடன் முறையாகச் செய்யப்பட்ட கெந்தக பஸ்பத்தையும், ரஸ பஸ்பத்தையும் ஜீனியையும் சேர்த்துச் சூரணமாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் ஒரு வேளைக்கு 3 கிராம் எடை.

**காலம் :**

24 நாட்கள்.

**அனுமானம் :**

நெய் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாபத்தியம் (உப்பு, புளி, கரப்பான் உணவு வகைகளை நீக்கவும்)

**குறிப்பு :**

கந்தக பஸ்பத்தையும், ரச பஸ்பத்தையும் சூரணத் திற்குஏற்ற அளவு சேர்த்துக்கொள்ளவும்.

## சகல மேகத்திற்கும் மருந்து

### சுவடி மருந்து முறை : 14

அப்பிறக மாண்டுபலம் கொண்டு வந்து ஒரு கோணியிலே போட்டு ஒரு படி நெல்லும் போட்டு பொட்டணு கட்டி அந்தப் பொட்டணத்தை ஒரு தாணிக்குள்ளே தண்ணீர் விட்டு அந்த தாணியில் பொட்டணத்தை தேய்கிறபோது அப்பிரகம் நவநீதமாய் விழும். அந்தத் தண்ணீரை இறுத்துப்போட்டு அப்பிரகத்தை எடுத்துக் கொண்டு இந்த இடைக்கு இடை வெடியுப்பு கூடப் போட்டு ரண்டையும் குளிரும் அம்மியில் ௳ரைத்து உலரப் போடு சாராயமும் விட்டரைத்து

அஞ்சு புடம் போட்டு புடத்துக்கு புடம் விட்டரைத்து புடம் போட்டு பேரபமாம் அந்த பற்பம்
பத்துக்கு அனுபானு ...........வெண்ணையில் சீனியில் நெய்யில் அநுபானத்தில் குடுக்க செந்தூரம்
பண்ண வேணுமானால்அகத்திப் பறப்புச்சாறு
விட்டரைத்து .............. போட்டு செந்தூரமாம்
பற்பத்துக்கு தீரும் வியாதி சகல மேகமும் நிற்கும்.

## விளக்கம் :

இந்த மேக வியாதி வ ர க் கா ர ண ம் கோதையர் கலவியை மிக விரும்புவதால் மூலத்தில் கனல் மிஞ்சி மேகஞ்சனித்துச்சிரம்வரை வெந்துருகித்தாது கெட்டு நரம் பெல்லாம் பலங்குறைந்து, பிரமேகநீர், நீரிழிவு உண்டா கின்றன. இதன் குறிகுணம் உடல் மெலியும், வெளுக்கும், முறுகும், வியர்க்கும், நோகும். முகம், கை, கால் காந்தும், நகம் பிரியும், கண் வெளுக்கும், நெஞ்சுலரும், நாவறளும் தாகம் மிகும். ஆயாசங்களைப்புண்டாகும். இரவும் பகலும் நித்திரை மிகும். அன்னஞ்செல்லாது.

## மருந்து செய்முறை :

அப்பிரகத்தை 35 கிராம் எடை எடுத்துக்கொண்டு இதை ஒரு சிறிய சாக்குப் பையில் போட்டு இத்துடன் ஒரு லிட்டர் அளவு நெல்லைப் போட்டு இதை ஒரு பொட்டலம் மாதிரி கட்டி வைத்துக் கொள்ளவும். பின்பு ஒரு பெரிய சட்டியை எடுத்துக்கொண்டு அதில் தண்ணீரை ஊற்றி இதில் மேற்படி கட்டிவைத்துள்ள பொட்டலத்தைப் போட்டு நன்கு கொதிக்க வைக்க வேண்டும். பொட்ட லத்திற்குள் இருக்கும் நெல் நன்கு வெந்தவுடன் அதை எடுத்துத் தண்ணீரைச் சுத்தமாக வடிகட்டி விட வேண்டும்.

பிறகு நெல்லுக்குள் இருக்கும் அப்பிரகத்தைத் தனியே பிரித்து எடுத்து இந்த எடைக்கு வெடி யுப்பைப் போட்டு இதனுடன் நன்கு அரைத்துச் சற்று உலர வைக்க வேண்டும். பின்பு அதில் சாராயத்தை விட்டு அரைத்து ஐந்து புடம் போட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும். இப்படிக் கிடைக்கும் பற்பத்தைக் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள அளவுப்படி உட்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் 130 மில்லிகிராம் வீதம் ஒரு வேளைக்குச் சாப்பிடவும்.

**காலம் :**

ஒரு மண்டலம் அளவு (அதாவது 48 நாட்கள்)

**அனுமானம் :**

வெண்ணெய், ஜீனி, நெய் இவைகளுடன் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

வியாதிக்கு ஏற்றபடி உணவு வகைககளை நீக்கித் தேவையானவற்றை மட்டும் சேர்த்துக்கொள்ளவும்.

**குறிப்பு :**

மேற்குறிப்பிட்டுள்ளபடி சுத்தி செய்யப்பட்ட அப்பிரகத்தை அகத்திப்பருப்புஇலைச் சாற்றில்அரைத்துப் புடம் போட்டாலும் பற்பம் ஆகும்.

## சகல சன்னி வகைகளுக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 15

சீனத்துப் பட்டை பலம் பத்து பசிய மோட்டை
சீனத்து பட்டை பலம் பத்து பசியமோ
குசு மோசுக்கைப் புளித்திருந்த சாருரி,
வேப்ப எண்ணைபடி. முட்டை கோளி உருக
வாத மடக்கிச்சாறு, நொச்சிச்சாறு
எருக்கிலை வேலி பருத்திச்சாறு
முருங்கைப்பட்டைச்சாறு, வணை வகைக்குச் சாறு
மேல் வேங்கா பூலம் சுக்கு வசம்பு சன்னிநு
யகம் ஆவகை தூங் சடைப்பெரு, மானுக்
குருக்கள் சீனப் புகை சூதம் வீஉ, தாளகம்
வீகவ, வெண்ணை வீடக, வெண்ணை கங்கிலிபூ
பெருக் கலங்கரி வீசு காரீயம் வீக துருசு
விக. பருத்தியிலை சாற்றில் அறைத்து தூளாக்கி
ஒன்பது கிளிக்கட்டி, நொத்துக் கொரு சிளிப்பு
கைப்பித்து தண்ணீரில் அந்தப் படிக்கு மூணாகி மீகொண்டு
வரவும். பத்தியம் புளிபாகல்காய்
அவத்துக் கூட்டிக் கொண்டு பசுவின் மோர்
கூடி கொள்ளவும்,

### செய்முறை:

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | சீனத்துப்பட்டை | 350 | கிராம் |
| 2. | முசுமுசுக்கைஇலைச்சாறு | 350 | மில்லி |
| 3. | வேப்ப எண்ணெய் | 750 | மில்லி லிட்டர் |
| 4. | முட்டை வெள்ளைக்கரு | 250 | கிராம் |
| 5. | வாதமடக்கிச்சாறு | 350 | மில்லி |
| 6. | முருங்கைப்பட்டைச்சாறு | 150 | கிராம் |
| 7. | பூண்டு | 35 | கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 8. | பூலாம்பட்டை | 35 | கிராம் |
| 9. | சுக்கு | 35 | கிராம் |
| 10. | வசம்பு | 35 | கிராம் |
| 11. | நொச்சி இலைச்சாறு | 250 | மில்லி |
| 12. | வேலிபருத்தியிலைச்சாறு | 250 | மில்லி |
| 13. | தூதுவளைச்சாறு | 250 | மில்லி |
| 14. | நாயுரிசமூலச்சாறு | 150 | கிராம் |
| 15. | சன்னலவங்கப்பட்டை | 35 | கிராம் |
| 16. | ஆவரைப்பட்டை | 35 | கிராம் |
| 17. | சடாமாஞ்சில் | 35 | கிராம் |
| 18. | சூதம் (சுத்தி) | 10 | கிராம் |
| 19. | தாளகம் (சுத்தி) | 10 | கிராம் |
| 20. | வெள்ளை (சுத்தி) | 10 | கிராம் |
| 21. | வெள்ளைக் குங்கிலியம் | 10 | கிராம் |
| 22. | எருக்கன் இலைச்சாறு | 150 | கிராம் |
| 23. | கலங்காரி | 10 | கிராம் |
| 24. | காரீயம் | 10 | கிராம் |
| 25. | துருசு | 5 | கிராம் |

மேற்குறிப்பிட்ட வகைகளை மேற்கூறிய அளவுகளின் படி எடுத்துக்கொண்டு அவைகளை வேலிபருத்தி இலைச் சாற்றில் நன்கு அரைத்துக்கொண்டு பின்பு இதனை ஒன்பதுதடவை கிளிக்கட்டி நேரத்துக்கு ஒரு முறை தேவையான தண்ணீரில் சிலுப்பி இத்தண்ணீரைத் தினம் மூன்று வேளை வீதம் ஆறு நாட்கள் குடித்து வரவும்.

**பத்தியம் :**

பசுவின் மோர், புளி, பாகக்காய் (அவித்து) சேர்த்துக் கொள்ளவும்.

**பத்தியத்தில் நீக்கவும் :**

வாழைக்காய், வாழை இலை, நல்லெண்ணெய், கடுகு, உளுந்து, பலாக்காய், செம்மறியாட்டுக்கறி ஆகியவற்றை நீக்கவும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை :

| | | |
|---|---|---|
| 1. | மஞ்சள்நிறமுள்ள மூசாம்பரம் | 35 கிராம் |
| 2. | சடாமாஞ்சில் | 35 கிராம் |
| 3. | அசாருன் | 35 கிராம் |
| 4. | ரூமஸ்தகி | 35 கிராம் |
| 5. | குங்குமப்பூ | 10 கிராம் |
| 6. | மிளகு | 35 கிராம் |
| 7. | லவங்கப்பட்டை | 35 கிராம் |
| 8. | பெரிய லவங்கப்பட்டை | 35 கிராம் |
| 9. | கஸ்தூரி | 10 கிராம் |
| 10. | தேன் | 200 கிராம் |

## மருந்து செய்யும் முறை :

ஒரு சட்டியில் தேனை மட்டும் ஊற்றி நன்கு காய்ச்சி அழுக்கை நீக்கிய பின்பு மேற்படி மருந்து வகைகளைத் தனித்தனியாக இடித்துச்சூரணம்செய்து காய்ச்சியதேனில் போட்டுக்கிண்டி வைத்துக் கொண்டு ஒரு குன்றியளவு (130 மில்லி கிராம் எடை) மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொண்டு இஞ்சிச் சாற்றில் கலந்துகொடுக்கவும்.

# வெண்குட்டம், அரையாப்பு, தோடை வாளை கண்ட மாலை, புடை கரப்பான், ஆறாத புண் இவைகளுக்கு மருந்தும், செய்யும் முறையும்,

## சுவடி மருந்து முறை: 16

கோதையீர மண்டலத்தில் பாதினாள் தெனல்
பரிவாக வேயருத்த பெரும் வியாதி புகலக
கேள்தீது, பெறு குட்டம் கிரந்தி கொடியப்பி
மந்திரமும் வெண் குடம், பக்கிரியும் கூறிக்
கேள் முடில் வெடி சூலை. அரையாப்புத்துடை

வாளை மிறு கண்ட மால. மார்பிலானிபுடை
கரப்பான். ஆறாத புணங்களெல்லாம், ஆவு
மென்று வேலையுண்ட நம்பாயரை வாயிந்த
ரசம் பத்து விராகன் கொண்டு வந்து ரசமும்
வெள்ளை, வெள்ளைக்கல்லும், இந்துப்பு
எலுமிச்சம்பளச்சாறு விட்டரைத்து இரண்டு
நாளிகை அரைத்து தண்ணீர் விட்டு அலம்பிப்
போட்டு மறுப டி விடத்தலை வேர் பட்டை
தட்டி கமுரதம் விட்டு பிளிந்து ஒரு சாமம்
அரைத்து அந்த யிலையை அரைத்து அந்த
இலைக்குள்ளே ஒரு புடம் போட்டு மறுபடி
எருக்கம்பாலு கோளி முட்டை வெள்ளைக்கருவும்
விட்டு ஒரு நாளிகை அரைத்து ஒரு புடம் போட்டு
எடுத்துக்கொள்ள பற்பத்தை யெடுத்து கருப்புக்
கட்டி அனுபானத்தில் குடுக்க சகல புண்ணும்
சகல கிரந்தியும் குடுகுநி சாறு-ரசவீஉ அரப்பு வீசா
எண் தண்ணீர் விட்டு அரைத்து திரியா திரித்து
கிள்ளில் உலர வைத்துக்கொண்டு திரியை பதினேரு
நேரத்துக்கு பதி............னேரு துண்டு நறுக்கி
பீங்கானில் உப்புபுகை, குடிக்கலுப்புகை,
அன்றைக்கு போக மறுநாள் ஒவ்வொரு
நேர்குளிகை கரும் பத்திலு பதினேந நா ளக்கு
ஒன்று மாகாது. சகல சூலையும் தீரும்
குருபாத துணை.

**விளக்கம்:**

| | |
|---|---|
| சுத்தி செய்த ரசம் | 10 கிராம் |
| சுத்தி செய்த வெள்ளை | 10 கிராம் |
| வெள்ளைக் கல்லுப்பு | 35 கிராம் |
| இந்துப்பு | 35 கிராம் |

மேற்கண்ட மருந்துகள் அனைத்தையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து இதனைத் தண்ணீரில் கரைத்து இருத்திவிட்டு மறுபடியும் இ ந் த ம ரு ந் தை

விடுதலை வேர்ப்பட்டைச்சாரை விட்டு மூன்று மணி நேரம் அரைத்துக் காயவைத்து, மேற்படி இலையை அரைத்து அதன் உள் மேல் செய்து வைத்திருக்கும் மருந்தை வைத்துச்சிலைமண்செய்து ஒரு புடம்போட்டுஎடுத்து மறுபடி இந்த மருந்தை எருக்கம்பால் கோழி முட்டை வெள்ளைக் கருவும் போட்டு ஒரு நாழிகை அரைத்து நன்கு காய வைத்து ஓட்டில் வைத்து ஒரு புடம் போட்டு எடுத்தால் பற்பம் ஆகும். இந்தப் பற்பத்தை வைத்துக் கொண்டு கீழ்க்குறித்த அளவிற்குச் சாப்பிடவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் ஒரு வேளைக்கு 130 மில்லி கிராம் வீதம்.

**காலம் :**

முதலில் ஆறு நாட்களுக்குச் சாப்பிடவும். பின்பு ஆறு நாட்கள் கழித்து மீண்டும் ஆறு நாட்கள் சாப்பிடவும். இவ்வாறாக மூன்று தடவைகள் சாப்பிடவேண்டும்.

**பத்தியம் :**

இச்சாப் பத்தியம். புளி, உப்பு, கரப்பான் பண்டங்கள் நீக்கவும். இந்தப் பத்தியத்தை மிகவும் கடுமையாகக் கடைப்பிடிக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

மேற்குறிப்பிட்ட அனைத்து வியாதிகளும் குணமாகும் நிவர்த்தியடையும்.

குறிப்பு : 1

# அரையாப்பு, கண்டமாலை இவைகளுக்கு மேல் பூசும் மருந்து

| | | |
|---|---|---|
| 1. | மருதோன்றி இலை | 25 கிராம் |
| 2. | நீலி இலை | 25 கிராம் |
| 3. | கார்த்திகை கிழங்கு | 25 கிராம் |
| 4. | குன்றிமணி | 25 கிராம் |
| 5. | எட்டி விதை | 25 கிராம் |
| 6. | பெருமரத்துப்பட்டை | 25 கிராம் |
| 7. | கஞ்சா இலை | 25 கிராம் |
| 8. | வசம்பு | 25 கிராம் |
| 9. | காயம் | 25 கிராம் |
| 10. | பூண்டு | 25 கிராம் |

இவைகளைச் சமன் எடை எடுத்துக்கொண்டு நன்றாக அரைத்துத் தினம்இரண்டுவேளைவீதம் பத்து நாட்களுக்கு மேல் பூசவும்.

குறிப்பு : 2

ரசம் பத்து கிராம், அரப்பு 10 கிராம் இவைகளுடன் காட்டுக் கிலு கிலு செடியின் சாறு, தண்ணீர் சேர்த்து நன்றாக அரைத்து நிலா வெளிச்சத்தில் உலரவைத்துப் பின்பு இதனை 11 திரியாகச் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பீங்கான் பாத்திரத்தில் கொஞ்சம் உப்பைப் போட்டு, இத்துடன் தண்ணீர் ஊற்றி மேற்படி திரியாகச் செய்து வைத்துள்ளவற்றை ஒருதுண்டு போட்டு இதனைச் சிலுப்பிஇந்தத் தண்ணீரை ஒரு நாள்விட்டு ஒருநாள் என்ற விகிதத்தில் ஏழு நாட்கள் குடித்து வந்தால் மேற்சொன்ன வியாதிகள் யாவும் தீரும்.

# கிராணி, அதிச்சார, கழிச்சலுக்கு மாதுளை சூரண மருந்து

## சுவடி மருந்து முறை: 17

மாதுளம் பளத்தோடு, வில்லை பளத் தோடு,
மாங்கொட்டை பருப்பு, இந்துப்பு, சாதிக்காய்,
சாதிபத்திரி, அதிவிடையம், பெருமாப்பட்டை,
கருவேலம் பிசின், விளாம்பிசின், இலவங்கபிசின்,
நற்சீரகம், புளியம்கொட்டை தோல்,
களச்சிபருப்பு, சுக்கு, மிளகும், திப்பிலி,
வெந்தயம், கொடுவேலிவேர், பெருங்காயம்,
திப்பிலிமூலம், கருஞ்சீரகம், கடுக்காய்,
காட்டத்தி கோர கிழங்கு ஊமைத்தம் விரை
ஓமம், குருசாணி ஓமம் வேம்பாலரிசி
கோஷ்டம் இந்த மருந்தெல்லாம் வறுத்து தூள்
பண்ணி தயிரில் தேனில் குடுத்தால் இது தீரும்.
வியாதி கிருணி அதிசாரம் குளம்ம தீரும்.
சுக்கு ய, மிளகு ய, திப்பிலி ய, திப்பிலி மூலம் ய,
சித்திர மூலம் ய, இலவங்க பட்டை கா,
இலவங்கபத்திரி ய, கடுக்காய், தானிக்காய் ய,
நெல்லிப்பருப்பு ய, சித்தரத்தை ய, கர்க டச்சிங்கு கா,
கஸ்தூரி மஞ்சள் கா, கொத்தமல்லி ய,
கோஷ்டம் ய, செண்பகப்பூ ய, சாதிக்காய் ய,
சிரும்பு ய, ஏலம்பூ ய, அதிமதுரம் ய,
காடாம் மஞ்சள், குருசாணி ஓமம், கோரோசனை,
இஞ்சி, தேன். கருப்புக்கட்டி, வில்லு
வேர்ப்பட்டை கொண்டு வந்து பதக்கு தண்ணீரில்
போட்டு. இரண்டு படியாக வத்தக் காச்சி
அதில் கருகருப்புக்கட்டி தட்டிப்போட்டு,
பாதக காச்சி அதில் கடை மருந்து இடித்து
வஷ்த்திர காயம் பண்ணிபாக்கில்ப் போட்டு
லேகியம் பண்ணவும், பயத்திய வேட்டை,
எலும்புருக்கி எல்லாம் தீரும்.

## விளக்கம் :

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாதுளம்பழத்தோல் | 150 | கிராம் |
| 2. | வில்வம் பழத்தோல் | 150 | கிராம் |
| 3. | மாங்கொட்டைப் பருப்பு | 150 | கிராம் |
| 4. | இந்துப்பு | 50 | கிராம் |
| 5. | சாதிக்காய் | 50 | கிராம் |
| 6. | சாதிப்பத்திரி | 50 | கிராம் |
| 7. | அதிவிடையம் | 25 | கிராம் |
| 8. | பெருமாத்துப்பட்டை | 50 | கிராம் |
| 9. | கருவேலம்பிசின் | 25 | கிராம் |
| 10. | விளாம்பிசின் | 25 | கிராம் |
| 11. | இலவங்கப்பிசின் | 25 | கிராம் |
| 12. | ச்சீரகம் | 25 | கிராம் |
| 13. | புளியங்கொட்டை தோல் | 25 | கிராம் |
| 14. | களச்சி பருப்பு | 25 | கிராம் |
| 15. | வெந்தயம் | 25 | கிராம் |
| 16. | சுக்கு | 25 | கிராம் |
| 17. | மிளகு | 25 | கிராம் |
| 18. | திப்பிலி | 25 | கிராம் |
| 19. | கொடிவேலிவேர்ப்பட்டை | 25 | கிராம் |
| 20. | பெருங்காயம் | 25 | கிராம் |
| 21. | ப்பிலி மூலம் | 25 | கிராம் |
| 22. | கருஞ்சீரகம் | 25 | கிராம் |
| 23. | கடுக்காய் | 25 | கிராம் |
| 24. | காட்டு அத்திப்பட்டை | 25 | கிராம் |
| 25. | கோரைக் கிழங்கு | 25 | கிராம் |
| 26. | ஊமத்தை இலை | 25 | கிராம் |
| 27. | ஓமம் | 25 | கிராம் |
| 28. | குருசாணி ஓமம் | 25 | கிராம் |
| 29. | வப்பாலரிசி | 25 | கிராம் |
| 30. | கோஷ்டம் | 25 | கிராம் |

மேற்குறிப்பிட்ட மருந்துகளை எல்லாம் வகைப்படி எடுத்துக்கொண்டு ஒரு சட்டியில் போட்டுப் பொன் வறுவலாக வறுத்துஎடுத்துக்கொள்ள வேண்டும். பின்பு இவற்றை நன்றாக இடித்துத் தூள்செய்து ஒரு மெல்லிய துணிகொண்டு சலித்து அதைப்பத்திரமாக ஒரு தூய்மையான பாட்டிலில் அடைத்துவைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

5 கிராம் எடைவீதம் எடுத்துக்கொண்டு தினம் மூன்று வேளைக்கு அரை மண்டலம் அளவு அதாவது 24 நாட்கள் சாப்பிட்டு வரவும்.

**அனுமானம் :**

தயிரில் அல்லது தேன் கலந்து சாப்பிடலாம்.

**தீரும் வியாதிகள் :**

கிராணி, அதிச்சாரம், குன்மம் ஆகிய நோய்கள் நிவர்த்தியாகும்.

**பத்தியம் :**

காரம், புளிப்பு இவைகளை நீக்கவும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை : (லேகியம்)

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 70 கிராம் |
| 2, | மிளகு | 70 கிராம் |
| 3. | திப்பிலி | 70 கிராம் |
| 4. | திப்பிலிமூலம் | 70 கிராம் |

| | | |
|---|---|---|
| 5. | சித்திரமூலம் | 70 கிராம் |
| 6. | லவங்கப்பட்டை | 70 கிராம் |
| 7. | இலவங்கப்பத்திரி | 70 கிராம் |
| 8. | கடுக்காய் | 70 கிராம் |
| 9. | தான்றிக்காய் | 70 கிராம் |
| 10. | நெல்லி பருப்பு | 70 கிராம் |
| 11. | சித்திரத்தை | 70 கிராம் |
| 12. | கற்கடசிங்கு | 70 கிராம் |
| 13. | கஸ்த்தூரி மஞ்சள் | 70 கிராம் |
| 14. | கொத்தமல்லி | 70 கிராம் |
| 15. | கோஷ்டம் | 70 கிராம் |
| 16. | செண்பகப்பூ | 70 கிராம் |
| 17. | சாதிக்காய் | 70 கிராம் |
| 18. | கிராம்பு | 70 கிராம் |
| 19. | ஏலம் | 70 கிராம் |
| 20. | அதிமதுரம் | 70 கிராம் |
| 21. | சடாமாஞ்சில் | 70 கிராம் |
| 22. | குறுசாணி ஓமம் | 70 கிராம் |
| 23. | கோரோசனை | 7 கிராம் |
| 24. | இஞ்சிச் சாறு | 150 மில்லி |
| 25. | தேன் | 100 மில்லி |
| 26. | கருப்புக்கட்டி | 1 கிலோ |
| 27. | வில்வமரத்தின்வேர்ப்பட்டை | 1 கிலோ |

## மருந்து செய்யும் முறை :

வில்வமரத்தின் பட்டைகளை நன்கு இடித்துத்தூள் செய்து ஒரு பானையில் போட்டு நான்கு லிட்டர் தண்ணீர் ஊற்றிக் காய்ச்சி, 500 மில்லி சுண்டியவுடன் வடிகட்டி இதனை ஒரு சட்டியில் ஊற்றிப் பனை வெல்லத்தைப் போட்டுப் பாகுசெய்து மேற்படி மருந்துச் சரக்குகளை இடித்துச் சூரணத்தைப்போட்டு லேகியமாகக் கிண்டி தேன்விட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

5 கிராம் எடை வீதம் தினம் இரண்டு வேளை.

உட்கொள்ளும் காலம் :

48 நாட்களுக்குச் சாப்பிடவும்.

தீரும் வியாதிகள் :

எலும்புருக்கி நோய்கள் தீரும். பத்தியம் இல்லை.

குறிப்பு :

## கிராணி நோயின் வகைகளும் குறிகுணங்களும் :

1. மூலக்கிராணியின் குறிகுணம் :

கீழ்வயிறு கருத்துளைந்து குருதிவிழும். அபானவாயு கீழ்நோக்கி உறுப்புத்தள்ளும். மலங்கழியும், நாளுக்கு நாள் உடல் பற்றும் வயிறுநோகும், நாவறளும் இளைப்பு கோபதாபமுண்டாகும்.

2. வாதமூலக்கிராணியின் குறிகுணம் :

மலங்கழியும், சீதம், இரத்தம் விழும். தொப்புளில் சுருக்கென்று வலிக்கும். உளையும்.

3. பித்தமூலக்கிராணியின் குறிகுணம் :

மலம் சிறுத்துக்கழியும். பலவிதமாய் நாறும்.

4. சிலேத்ம மூலக்கிராணியின் குறிகுணம் :

உதிரமாயும் வெண்மையாயும் கழியும். காற்றுப் பிரியும்.

ீ. வாயுக்கிராணியின் குறிகுணம் :

உண்ட உணவு ஜீரணம் ஆகாது. வயிறு வலிக்கும், பொருமும். இரைந்து கழியும், புளித்தேப்பம் விடும் இருமும், வாயுப்பிரியும், நாள் சென்றால் புறந்தாள் அதைத்து வற்றும். உணவுகள் சாப்பிடப்பிடிக்காது, உடல் வறண்டும் வற்றிவரும். நாவறளும், தாகமிகும் கனவுகாணும், வெருவும்.

# வெள்ளை பாஷாணம் சுத்தி செய்யும் முறை

## சுவடி மருந்து முறை: 18

கொம்பு பாகற்காய் ஒன்றை எடுத்துக்கொண்டு அதன் நடுப் பகுதியை கீறிவிட்டு உள்ளிருக்கும் விதைகள் யாவற்றையும் எடுத்து விட்டு மேற்படி வெள்ளை பாஷானத்தை அதனுள் வைத்து மூடி பாகற்காயை நூல் கொண்டு நன்ருகக் கட்டி வைத்துக் கொள்ளவும். பின்பு. ஒரு சட்டியில் தண்ணீரும் பாகயிலைச்சாற்றையும் கலந்து எடுத்துக் கொண்டு அடுப்பில் வைக்க வேண்டும் மேற்படி பாகக்காயை தொலாந்திரமாகக் கட்டி சட்டியில் உள்ள சாற்றை எடுத்துக் கொண்ட அளவிலிருந்து பாதியளவாகக் குறையும் வரை எடுக்க வேண்டும் பாதிஅளவாகக் குறைந்தவுடன் எரிப்பதை நிறுத்தி விட்டு தொலாந்திரத்தை எடுத்து பசுமாட்டு கோமியத்தில் (சிறுநீர்) எட்டு நாளைக்கு ஊற வைத்து எடுத்துக் கொண்டால் வெள்ளை பாஷாணம் சுத்தி ஆகும்.

**விளக்கம் :**

கொம்புப் பாகற்காய் ஒன்றை எடுத்துக் கொண்டு அதன் நடுப்பகுதியைக் கீறிவிட்டு உள்ளிருக்கும் விதைகள் யாவற்றையும் எடுத்துவிட்டு மேற்படி தேவையான வெள்ளைப் பாஷாணத்தை அதனுள் வைத்து மூடிப் பாகற் காயை நூல்கொண்டு நன்றாகக் கட்டி வைத்துகொள்ளவும் பின்பு ஒரு சட்டியில் தண்ணீரும், பாகயிலைச்சாற்றையும் கலந்து எடுத்துக்கொண்டு அடுப்பில் வைக்க வேண்டும். மேற்படி பாகற்காயைத் தொலாந்திரமாகக் கட்டி சட்டியில் உள்ள சாற்றை எடுத்துக்கொண்ட அளவிலிருந்து பாதி அளவாகக் குறையும் வரை எரிக்க வேண்டும். பாதி அளவாகக் குறைந்தவுடன் எரிப்பதை நிறுத்திவிட்டுத் தொலாந்திரத்தை எடுத்துப் பசுமாட்டுக் கோமியத்தில் (சிறுநீர்) எட்டு நாளைக்கு ஊறவைத்து எடுத்துக் கொண்டால் வெள்ளைப் பாஷாணம் சுத்தி ஆகும்.

## கோடி பௌத்திரத்திற்கு மருந்துசெய்யும் முறை

### சுவடி மருந்து முறை: 19

சுக்கு வீஉய மிளகு, திப்பிலி வகை நாறுக்கு இந்த இடை
இஞ்சி உறைரு சகரம் ஆவகை உரு உரு
உலைலையா விராகன்
வேராக தண்டுச் சாறு விட்டு ஒரு சாமம் அறைத்து
குளிகை
பண்ணி வைத்துக் கொள்ளு, பாசாறு சுத்தி செய்கிறது
கொமம் பார்க்காய் கீரி அழினுள்ளே வைத்து
நூல் கொண்டு
கொண்டு சுத்தி ஒத்தைத் துணி கொண்டு கடி
நூல் கயத்தில்
தோளாந்திரம் போவேதியஞ் செய்து அந்த பாணையில்
பாகயிலைச் சாறு படி ௩ நல்ல தண்ணீர் படி ௩
ஏழுபடி

வீட்டு அந்த செடியிலேக் கொப்புங் தூளையுமாய்
அஞ்சாறு
கூடப் போட்டு தோனாந்திர பண்ணி பானைக்குச் சட்டிக்
கொண்டு மூடிச் சிலைமண் செய்து சாறு அரைப்படி மாகிற
வரைக்கும் தியேரித்து அதன் பிறகு தோனாந்த்தை எடுத்து
அவிளத்து பாசனத்தை பசுவின் கோமியத்தில்
எட்டு நாளைக்கு
உரைய வைத்து எடுத்துக் கொண்டு மாத்திரை பண்ணி
ஊமத்தஞ்
சாத்தில் பிசுர மூல வேரை யூரப் போட்டு
அந்த சாற்றில்
அரைத்திட அருமையாவள முருக்கிலைச் சாருய்ப் பேணி
காரமும்
காரித்து தடவி புணர்த்த பனுட கோடு விடுவோலை உஇ
புழுங்கலரிசி சிலைஉஇ இருப்பு கட்டி ரு பசுவின் நெய்படி
வலு இது வெல்லாம் தண்ணீர் விட்டு அறைத்து கருப்பு
கட்டியுங் கூட போட்டு மாவிலே அறைத்து நெய்யிலே
போட்டு வேக வைத்து திரும்பவும் அறைத்து
இப்படி மூன்றுதரம்
அறைத்து வேக வைத்து மூன்று அடையும்
தின்று மறுபத்தியம்
மூன்று நாளைக்கு பொய் ஏழாம் நாள் இஞ்சி தேச்சு
தலைமுழுகி
உப்பு கூட்டவும் கொடி வுபவுத்திரம் தீரும்,

**விளக்கம் :**

மேற்படி வியாதி மூலத்தில் வாயு கண்டு மேநீர் சனித்து புறையோடி கண்விட்டு சீர்ப்பாச்சல் கண்டு முளைவிழுதலாம்.

இதன் குறிகுணம் :

போகத்தால் கனல் மிஞ்சி மேகமுண்டாகி பீசத்திற்கும் அபானத்திற்குமிடையில் கொடியினடி நரம்பின்பேரிலாவது அதன் வலமிடப்புறத்திலாவது இருபுறத்திலாவது அண்டத்திலாவது அபான வாயிலாவது, நமைச்சலெடுத்து வீங்கி நொந்து கொப்பளித்துச் சீயும் சலமும் வடியும், புறையோடி நரம்பழுகியற்றுக் கண்விழுந்து அதன் வழியாக நீரும், மலமும் இறங்கும் அல்லது அபானவாயில் கழற்காய்ப் போலும், குமிழ் முளை போலவும் கற்போற்புடைத்துப் பழுத்துச் சீழ் வடியும் புரையோடும் வேதனை காணும் மலசலஞ்சிறுக்கும் அபானம் கடுத் தெரியும், கை, கால் காந்தும் கடுத்துளையும், நித்திரை சற்றும் வராது, உடல் மெலியும் அன்னஞ் செல்லாது ஆயாசங்களைப்பு உண்டாகும்.

இதன் நிவர்த்திக்கு மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 35 கிராம் |
| 2. | மிளகு | 35 கிராம் |
| 3. | திப்பிலி | 35 கிராம் |
| 4. | இஞ்சிசார் | 50 மில்லி |
| 5. | சீரகம் | 35 கிராம் |
| 6. | வெள்ளைப் பாஷானம் | 5 கிராம் |
| 7. | ஆவாரைப்பட்டைத்தூள் | 35 கிராம் |
| 8. | உலவை வேர்பட்டை | 35 கிராம் |

மேற்குறிப்பிட்ட மருந்துப் பொருள்களை விகிதப்படி எடுத்துக் கல்வத்தில் போட்டுத் தண்டுச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொண்டு மேற்படிவியாதிக்கு வயதுக்குத் தகுந்தாற்போல் கொடுக்கவும். தண்ணீர் அதிகம் சாப்பிடவும்.

பத்தியம்:

காரம், புளிப்பு இவைகளை நீக்கவும்.

**இந்த வியாதிக்கு அடைமருந்து செய்யும் முறை:**

வில்வ இலை, புழுங்கலரிசியுடன் சுத்தி மனோசிலை 5 கிராம், கருப்புக்கட்டி (பனை வெல்லம்) இவைகளைத் தண்ணீர் விட்டு நன்றாக அடைக்கு அரைப்பது போல் அரைத்துக் கொண்ட மாவை நெய்யில் போட்டு வேக வைத்துத் திரும்பவும் அரைத்து இப்படி மூன்று தடவை செய்து கடைசியாக அடையைப் போட்டு ஒரு நாளைக்கு ஒரு அடை வீதம் மூன்று நாட்களுக்குச் சாப்பிடவும். இதனைச் சாப்பிடும் முன்னரே தலைக்கு இஞ்சி தேய்த்துக் குளித்தபின் மருந்தை சாப்பிட்டால் பவுத்திரம் தீரும்.

## அண்டை வாயுவுக்கு அடை மருந்து

### சுவடி மருந்து முறை: 20

**விளக்கெண்ணெய் ஆளாக்கு முடைகோஷான்
ஒரு படி புழுங்கல்லரிசி படிவ அரைத்து
அடை பண்ணி விளக்கெண்ணெயில் போட்டு
வேக வைத்து முதனுள் விளக்கெண்ணெய்யை
தேச்சு தலைமுழுகு இந்த படி நாள்
விட்டோரு நாள் விளக்கெண்ணெய் தேச்சு முழுகப்
பண்ணி ஒருநாள் அடை தின்ன ஒரு நாள்
ஏழாம் நாள் உப்புக் கட்டிக்கொள் அண்ட வாயு தீரும்.**

**விளக்கம்:**

புழுங்கல் அரிசி. ¼ படி முடக்கொத்தான் இலை 100 கிராம் இந்த இரண்டையும் நன்றாக அரைத்து விளக்கெண்ணை ஊற்றிஅடை சுட்டுச்சாப்பிட்டு, தலைக்கு ஒரு நாள்விட்டு ஒரு நாள் விளக்கெண்ணை தேய்த்துக் குளித்து விட்டு இந்த அடை சாப்பிடும்போது உப்புச் சேர்த்துக்கொள்ளாமல் ஏழாம் நாள் உப்பு சேர்த்துக் கொள்ளவும்.

## அட்ட குணம் நிவர்த்திக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 21

குருபாதமே கேதி மகலும் வாயுறங்தலே வாந்தி
மகதத் புலவாயே சித்தாதி யேன்ன சுத்திக்கு
மிந்த மருந்து தன்னை கருதி யுரைத்தனரே......
அரைபோடி உய-தாகம் வீஉய மேனி சாத்தில்
நாலு நாளிகை வறுத்துக் கொண்டு அரைப் பொடியை
முந்தின சாத்தில் வரைத்து வில்லே பிடித்து காய
வைத்து வட்ட ஒட்டில் வைத்து மேலோடு கொண்டு
மூடிச்சிலே மண் செய்து யிருபது யேருவில் போட்டு
போட்யிப்படி புடம் போட்டு தீரும் ரெண்டு
பற்பமும் சேகரித்து பழசாற்றில் அஞ்சு புடம்
போட்டு களச்சிலே சாற்றில் மூன்று புடம்
போட்டு கத்தாளஞ் சாத்தில் மூன்று புடம் போட்டு
தீரும் எடுத்து பொடி பண்ணிக் கிளவிலடைத்து
கொள்ளு சித்தரிதியே கியத்துக் பத்து விளாகளிடைப்
போட்டு கொள்ள தீரும் பாதம் கீனங்காய்
நெல்லியை அறைத்து எலுமிச்சம்காயளவு வெள்ளாட்டுப்
பாலில் குடுக்கப் மூன்று நாள் குடித்து 'மறுபத்தியம்
மூன்றுனுள் பொய் ஏனாம் நாள் தலே முழுகி
உப்புக் கூட்டிக் கசாயம் கொள்ளவும்.

### விளக்கம் :

10 கிராம் தாளகத்தையும் 10 கிராம் அரை பொடி இவை இரண்டையும் ஒரு சட்டியில்போட்டு குப்பைமேனிச் செடியின் சாற்றைவிட்டு வறுத்துக்கொள்ளவும். மறுபடியும் இதனைக் குப்பைமேனிச்சாற்றில் அரைத்து வில்லைபோல் செய்து கொண்டு மண் ஓட்டில் வைத்துக் காயவிட்டு அந்த

முன்ஓட்டின்மேல் மூடி போட்டு சிலைமண்செய்து இருபது எருவப்புடம் போடவும். பின்பு இந்த மருந்தை கற்றாளைச்சாற்றை விட்டு அறைத்து மூன்று தடவை புடம்போட்டு வைத்துக்கொள்ளவும். சுத்தி செய்யப்பட்ட தாளகத்தைக் குப்பைமேனிச்சாற்றில் அறைத்து ஒரு புடம் போட்ட பிறகு மறுபடியும் கத்தாளைச்சாற்றில் அறைத்து ஒரு புடமும் போட்டு அறைத்துக் கொள்ளவும். பிறகு இந்த இரண்டு பற்பத்தையும் சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு நன்கு அறைத்து இந்த மாதிரி ஐந்து புடம் போட்டுப் பின்பு இந்த பற்பத்தை களச்சி இலைச் சாற்றை விட்டு அறைத்து மூன்று புடம் போட்டு எடுத்துக் கொண்டு இதனைப் பத்திரமாக ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் ஒருவேளை 130 மில்லி கிராம் வீதம் உட்கொள்ளவும்.

**காலம் :**

மூன்று நாள் விட்டு மூன்று நாள் சாப்பிடவும்.

**அனுமானம் :**

சித்தரத்தை கிஷாயம் எலுமிச்சம் பழச்சாறு, வெள்ளாட்டின் பால், நெல்லிக்காய் சாறு இவைகளில் ஏதேனும் ஒன்றைக் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

மருந்து சாப்பிட்ட ஏழாம்நாள் தலைமுழுகிவிட்டு உப்புச் சேர்த்துக் கொள்ளவும்.

**தீரும் வியாதிகள் :**

அட்ட குணம் தீரும்.

# பயத்திய - வெட்டை எலும்புருகி இவைகள் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 22

சுக்கு ய, மிளகு ய, திப்பிலி திப்பிலி மூலம் ய, சித்திர மூலம் ய
கடுக்காய் தானிக்காய் ய, நெல்லிப்பருப்பு ய, சித்தரத்தை கற்கடச்சிங்கு கா, கஸ்தூரி மஞ்சள் கா, கொத்தமல்லி ய, கோஷ்டம் ய, செண்பகப்பூ ய, சாதிக்காய் சாதிக்காய ய, கிரும்பு ய,
ஏலம்பூ ய, அதிமதுரம் ய, சாடாம் மஞ்சம் குருசாணி ஓமம் கோரோசனை இஞ்சி தேன், கருப்புக்கட்டி, வில்லு வேர்ப் பட்டை கொண்டு வந்து பதக்கு தண்ணீரில்ப் போட்டு இரண்டு
படியாக வத்தக் காச்சி அதில் கருப்புக்கட்டி தட்டிப்போட்டு
பாதக காச்சி அதில் கடை மருந்து இடித்து வஷ்த்ர காயம் பண்ணி பாக்கில்ப் போட்டு லேகியம் பண்ணவும்:
பயத்திய வேட்டை, எலும்புறுக்கி எல்லாம் தீரும்.

தேவையரன மருந்துகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 50 கிராம் |
| 2: | மிளகு | 50 கிராம் |
| 3. | திப்பிலி | 50 கிராம் |
| 4. | திப்பிலி மூலம் | 50 கிராம் |
| 5. | சித்திர மூலம் | 50 கிராம் |
| 6. | இலவங்கபட்டை | 50 கிராம் |
| 7. | இலவங்கபத்திரி | 50 கிராம் |
| 8. | கடுக்காய் | 50 கிராம் |
| 9. | தான்றிக்காய் | 50 கிராம் |
| 10. | நெல்லிப்பருப்பு | 50 கிராம் |

| | | |
|---|---|---|
| 11. | சித்தரத்தை | 50 கிராம் |
| 12. | கற்கடசிங்கு | 50 கிராம் |
| 13. | கஸ்தூரி மஞ்சள் | 50 கிராம் |
| 14. | கொத்தமல்லி | 50 கிராம் |
| 15. | கோஷ்டம் | 50 கிராம் |
| 16. | செண்பகப்பூ | 50 கிராம் |
| 17. | சாதிக்காய் | 50 கிராம் |
| 18. | கிராம்பு | 50 கிராம் |
| 19. | ஏலம் | 50 கிராம் |
| 20, | அதிமதுரம் | 50 கிராம் |
| 21. | சடாமாஞ்சில் | 50 கிராம் |
| 22. | குருசாணி ஓமம் | 50 கிராம் |
| 23. | கோரோசனை | 50 கிராம் |
| 24. | இஞ்சிச்சார் | 100 மில்லி |
| 25. | தேன் | 100 மில்லி |
| 26. | கருப்புக்கட்டி (பனை வெல்லம்) | 250 கிராம் |

## மருந்து செய்யும் முறை :

வில்வம் மரத்தின்வேர்ப்பட்டை 200 கிராம் எடைக்கு எடுத்துக்கொண்டு நன்கு இடித்து இவற்றை ஒரு பானையில் போட்டு இத்துடன் நான்குபடி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து $\frac{1}{2}$ படியாகச் சுண்டும் வரைக் காய்ச்சி இந்தக் கிஷாயத்தை வடிகட்டி வைத்துத் கொள்ளவும் பின்பு மேற்குறிப்பிட்ட கடைச்சரக்குகளை எல்லாம் உரலில் போட்டு இடித்துத் தூள்செய்து மெல்லிய துணிகொண்டு சலித்து எடுத்துக் கொள்ளவும். இந்தச் சூரணத்தை ஒரு சட்டியில் போட்டு இதனுடன் கருப்பட்டி தேவையான அளவு சேர்த்து அடுப்பில் வைத்து பாகு மாதிரி காய்ச்சி இதில் மேல்செய்து வைத்திருக்கும் கிஷாயம் இஞ்சிச்சாறு இவைகளை ஊற்றி நன்றாகக் கிண்டி மெழுகு பதம் வந்தவுடன் ஆறவைத்து ஒரு தூய்மையான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

5 கிராம் எடை எடுத்துக் கொண்டு தினம் இரண்டு வேளை வீதம் சாப்பிடவும்.

காலம் :

ஒரு மண்டலம் (அதாவது 48 நாட்கள்)

பத்தியம் :

நல்ல சத்தாயுள்ள உணவு வகைகளை சேர்த்துக் கொள்ளவும்.

தீரும் வியாதிகள் :

வெட்டை, எலும்புருக்கி ஆகிய வியாதிகள் தீரும்.

## சகல வாயுவு, வயிற்றுவலிக்கு எலுமிச்சம்பழம் தயிலம்

### சுவடி மருந்து முறை: 28

சகல வாயு, வயிற்று வலி எலுமிச்சம்பளத்தயிலம்
ஏலம், நற்சீரகம் திப்பிலி சர்க்கரை சூதம் தானகம்,
காலம் வீரு மிளகு வீரு திப்பிலி வீரு, சுக்கு வீரு ஓமம்
சுத்தி பண்ணின கொல்லன் கோவை கிளங்கு தலை சுருளி
வேர், நிலபாகை வேர், மஞ்சனத்தி பட்டை பூவரசம்
பட்டை சங்கம் வேர்ப்பட்டை நாக்கோட்டான் வேர்பட்டை,
வெளருகு வேனூர் வேம்பு, சங்கங்குப்பிகருஞ்சுரை வேர்
பட்டை கரும் நொச்சிலை சிறுபுள்ளடி ஆவகைப்பூ,
பரங்கிப்பட்டை இது வெல்லாம் இடித்து வஷ்த்தர
காயம் பண்ணி சாப்பிட சகல சூலையும் தீரும்.

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | ஏலம் | 35 கிராம் |
| 2. | நற்சீரகம் | 35 கிராம் |
| 3. | திப்பிலி | 35 கிராம் |
| 4. | சர்க்கரை | 35 கிராம் |
| 5. | பெருங்காயம் | 35 கிராம் |
| 6. | மிளகு | 35 கிராம் |
| 7. | சுக்கு | 35 கிராம் |
| 8. | ஓமம் | 35 கிராம் |
| 9. | சுத்தி செய்த நீர்வாளம் | 35 கிராம் |
| 10. | சூதம்பஸ்பம் | 35 கிராம் |
| 11. | தாளகம்பஸ்பம் | 35 கிராம் |
| 12. | கோவைக்கிழங்கு | 30 கிராம் |
| 13. | தலைசுருளி வேர் | 35 கிராம் |
| 14. | நிலவாகைபட்டை | 35 கிராம் |
| 15. | மஞ்ஞுநாத்திப்பட்டை | 35 கிராம் |
| 16. | சங்கம்வேர் | 35 கிராம் |
| 17. | வெள்ளை எருக்கன்வேர் பட்டை | 35 கிராம் |
| 18. | நாக்கொட்டான்வேர்பட்டை | 35 கிராம் |
| 19. | பூவரசப்பட்டை | 35 கிராம் |
| 20. | வேப்பம்பட்டை | 35 கிராம் |
| 21. | கருஞ்சுரைவேர் | 35 கிராம் |
| 22. | கருநொச்சிசாறு | 50 மில்லி |
| 23. | சிறுபுள்ளி | 35 கிராம் |
| 24. | ஆவரைப்பூ | 35 கிராம் |
| 25. | பரங்கிப்பட்டை | 35 கிராம் |

மேற்குறிப்பிட்ட மருந்துப் பொருள்களை வகைப்படி எடுத்துக் கொண்டு எலுமிச்சச்சாற்றை விட்டு அரைத்து நல்லஎண்ணை கலந்து காய்ச்சி தைலமாகச் செய்து கொண்டு தினம் ஒரு வேளைக்குக் கொட்டைமுத்து அளவிற்கு கொடுக்கவும்.

பத்தியம் :

உப்பு. புளி நீக்கவும்.

குறிப்பு :

மேற்படி மருந்துகளை சூரணம் செய்து கொண்டு தினம் 5 கிராம் எடை வீதம் 15 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் கசல சூலையும் தீரும்.

# சகல மார்புநோய், மேல்மூச்சு, ஈளை, இருமல் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 24

.........சிதே வியார் செங்கழு நீர்சாறு படிக பசுவின் பால்படி இளநீர்படி உ பசு......... செங்கழு நீர் குளங்கு குன்றி வேர் அவுரியிலை மூன்றுஞ்சிறுக கொதிக்க விட்டு நாலாம்நாள் வடித்து காலமே களஞ்சி நெய்....... யும் நெஞ்சு நோவு காச்சல் மேல்மூச்சு யிளை யிருமல் மருந் தீரும் சகல கஞ்சுதின்.

### விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | சீதேவியார் செங்கழுநீர் கிழங்குச்சாறு | 1½ லிட்டர் |
| 2. | பசுவின் பால் | 1½ லிட்டர் |
| 3. | இளநீர் | 1½ லிட்டர் |
| 4. | குன்றி வேர் | 100 கிராம் |
| 5. | அவுரி இலைச்சாறு | 100 கிராம் |
| 6. | கஞ்சா இலை | 50 திராம் |
| 7. | கோரோசனை | 20 கிராம் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாறு வகைகளை ஒ பாத்திரத்தில் ஊற்றி இத்துடன் கஞ்சா இலைத்தூள். கோரோசனை இவைகளையும் போட்டுக் கலந்து மூன்று நாட்கள் வரை லேசாக விட்டு விட்டு எரிய விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்,

**உட்கொள்ளும் அளவு :**

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம். ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிடவும்.

**காலம் :**

22 நாட்கள் (அரை மண்டலம்) சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம்

**அனுமானம் :**

நெய் கலந்து சாப்பிடவும்

**தீரும் வியாதிகள் :**

சகல மார்பு நோய் மேல் மூச்சு. ஈளை, இருமல் இவைகள் குணமாகும்.

# சகல மேகத்துக்கும் நெய் மருந்தும், செந்தூர வகை மருந்தும்

(செய்யும் முறையும் உபயோகமும்)

## சுவடி மருந்து முறை: 25

**பசுவின் நெய் படிக, பசுவின் பால் படிஉ தோரும் விரை உ அதிமதூரம் வால் மிளகு கொத்தமல்லி நற்சீரகம்........ திப்பிலி கோஷ்டம் இதுவகைக்கு விஉ சாதிக்காய் தீப பத்திரி கிரும்பு பாது வகைக்கு சீனி வெல்லாம்........**

நெய்யிலே யிட்டு வைத்து பால் வாறின் தினம் பிறகு சினியைப் போடு நெய்யை யிறுத்துக் கொண்டு நெய் லேகியூ வேரேவச்சு கொண்டு காலமே ஒரு துடிடை
நெய்ஃபூ
சாயங்காலம் ஒரு தாணிக்காய் லேகியமும் குடுக்க இந்தபடி பத்துனுள் கொள்ளதீரும் வியாதிமேக யிருபத்தோன்று
அக்கினி
மந்தம் தாகம் யிருமல்......... யேரி ஒன்றும் புழுக்கு தீரும் புத்திரர் ருண்டாம், ரசம் விஅ கெந்தகம்.........
தாளகம் வூஉ மூன்று மருந்தையும் குளி அம்மியிலே
போட்டு
துமூபைச் சாற்றில் .........மூன்று சாமம் மறைத்து கரப்பான் சாற்றில் மூன்ற சாமம் மறைத்து சவுரி சாற்றில் மூன்று தரம் மூன்று......த்து நாலாம் நாள்குப்பி வேடுத்து வைத்து எழுசீலே மண் செய்து குப்பிக்கு கழுத்தளவு செய்து குப்பிவாயில் சீலே சுத்தி வயக்கலு தீயம் பிடித்தால் குப்பி வாய் சுண்டியிடலு குப்பி. வயக்கிரவயனம் தாளிச்
சட்டியியில்
நாலு பிவக்கடை மணல் விட்டு குப்பியை வைத்து அதின் கழுத்தளவு மணல் விட்டு ஒட்டடுப்பில் வைய்த்து
சருவேலம்
விறகு ஆறுலும்......அவரை விற காணலும் வுருவி
காய்த்து
தீயேரிக்க விண் தெரிந்தாப்போல் நாலு சாமமும் எரிக்க அப்பால் பதம் வந்தால் விளக்கேத்தி போலேயேரியும் குப்பிகுள்ளே உள்ளடங்கி கிர போது குப்பியை எடுத்து ஒரு தாளி சட்டியில் தண்ணீர் வாமவெட்டு அதிலே
குப்பியைப்
போட்டு நாலஞ்சு நாளிகை ஆரவிட்டு அப்பால் எடுத்து குப்பியை உடைத்து பார்க்க செந்தூரமாம் குருபாதம்!

**விளக்கம் :**

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | பசுவின் நெய் | $1\frac{1}{2}$ லிட்டர் |
| 2. | பசுவின் பால் | $1\frac{1}{2}$ லிட்டர் |
| 3. | தேற்றாங்கொட்டை | 35 கிராம் |
| 4. | அதிமதுரம் | 35 கிராம் |
| 5. | வால்மிளகு | 55 கிராம் |
| 6. | கொத்தமல்லி | 55 கிராம் |
| 7. | நற்சீரகம் | 35 கிராம் |
| 8. | திப்பிலி | 35 கிராம் |
| 9. | கோஷ்டம் | 35 கிராம் |
| 10. | சாதிக்காய் | 35 கிராம் |
| 11. | சாதிபத்திரி | 35 கிராம் |
| 12. | கிராம்பு | 35 கிராம் |
| 13. | சீனி | 150 கிராம் |

மேற்குறிப்பிட்ட கடைச்சரக்குகளை இடித்துத்தூள் செய்துக்கொண்டு, சூரணம் செய்துக்கொண்டு பால், நெய் இவைகளுடன் சேர்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து நெய் பதம் வரும் வரை காய்ச்சி இதில் சீனியும் கலந்து நெய் மட்டும் வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் இரண்டு வேளை. காலை, மாலை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிடவும்.

**காலம் :**

பத்து நாட்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளி, அசைவ உணவு வகைகளை நீக்கவும்.

**அனுமானம் :**

தான்றிக்காய் லேகியத்துடன் சேர்த்துச்சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:**

அனைத்து மேக நோய்கள். அக்கினி மாந்தம், தாகம் இருமல் புத்திர பாக்கியம் உண்டாகும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை:

**செந்தூரம் வகை:**

| | | | |
|---|---|---|---|
| 1. | இரசம் சுத்தி செய்தது | 15 | கிராம் |
| 2. | நெல்லிக்காய் கந்தகம் | 20 | கிராம் |
| 3. | தாளகம் சுத்தி செய்தது | 20 | கிராம் |

இந்த மூன்று வகைகளையும் மேற்குறிப்பிட்ட அளவுகளின்படி எடுத்துக்கொண்டு கல்வத்தில் போட்டுத் தும்பை இலைச்சாற்றில் 15 மணி நேரம் அறைத்துக் காயவைத்து மறுபடியும் கரப்பான் சாற்றில் 15 மணி நேரம் அறைத்து காயவைத்து மறுமுறையும் சவுரிச்சாற்றில் மூன்று தடவை 15 மணி நேரம் அறைத்துக் காயவைத்துக் குப்பியில் வைத்து ஏழு சிலை மண் செய்து மண்குவியல் செய்து அதன் மேல் தெரியும்படி செருகி வைத்து மருந்து அடைத்த குப்பியில் வாயை நன்றாக மூடி எருவைச் சுற்றிலும் அடுக்கி, கருவமரம் அல்லது அவுரி விறகு இவைகளில் ஏதாவது ஒன்றை வைத்து 15 மணி நேரம் எரித்து மருந்து பதம் வரும் சமயத்தில் குப்பியின்மேல் விளக்கு மாதிரி எரியும்படி இருக்கும் அச்சமயத்தில் குப்பியை எடுத்து ஒரு தண்ணீர்ப் பாத்திரத்தில் குப்பியைப் போட்டு ஐந்து வினாடி நேரம் கழித்து எடுத்து ஆறவிட்டு குப்பியை உடைத்துப் பார்த்தால் செந்தூரம் போல் இருக்கும் இதனைப் பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம். 130 மில்லி கிராம் அளவிற்கு உட்கொள்ளவும்.

**காலம் :**

பத்து நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாப் பத்தியம்.

**அனுமானம் :**

நெய் கலந்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:**

அனைத்து மேகம், அக்கினி, மாந்தம், இருமல், இளைப்பு இவையாவும் தீரும்.

**வியாதிவரக் காரணம் :**

கோதையர் கலவியை மிக விரும்புவதால் மூலத்தில் கறை மிஞ்சி மேல் சலித்துச் சிரம் வரை வெந்துருகி தாது கெட்டு நரம்பு எல்லாம் பலம் குறைந்து பிரமேநீர் நீரிழிவு உண்டாகும். அக்காலத்தில் கொழுத்த மீன். இறைச்சி நெய், பால் இவைகள் உட்கொண்டால் வியாதி அதிகமாகும்.

**வியாதியின் அறிகுறிகள் :**

உடல் மெலியும், வெளுக்கும், முறுகும். வியர்க்கும், நோகும். முகம், கைகால் காந்தும், நகம் பிரியும், கண் வெளுக்கும், நெஞ்சுலரும், நாவறளும், தாகமிகும் ஆயாசங்களைப்புண்டாகும். இரவு பகல் நித்திரையும் அன்னம் செல்லாது.

# நடுக்கு வாதம், கோன்னை வாதம், பக்க வாதம், சிரசு வாதம், முக வாதம், குறுக்கு வாதம், பிடரி வாதம், கண் வாதம் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 26

குரு தோட்டிலே, நாவள்ளி கிழங்கு ஸயகா,
தண்ணீர் பதக்கு விட்டு நாலுபடியாக வத்தகாச்சி
அதில் ஆண்டதொடைசாறு நகளிதயிர், நாளிகாடி
முன்னுளி எண்ணெய் படி ச அதில் கடை மருந்து
கார்ப்பாக அரிசி, சிவசம்பு, சுக்கு, மிளகு
திப்பிலி நாகபூரம் மனேசிலை வகை ஒன்றில்
ங அரைத்து வெந்து வடித்துங் கலுமேலே
உடம்புக்கு பூசலு பிசைந்து பிடிக்க கண்ணவாதம்
முகவாதம் குறுக்குவாதம் பிடரிவாதம் தீரி
கட்டை சீரேவாதம் நடுக்குவாதம் கொண்ணெய்
வாதம் வலிப்பு வாதம் இப்படி சொல்லப்பட்ட
வாதம் மெல்லாம் தீரும்.

### விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | குருந்தோட்டி வேர் | 70 கிராம் |
| 2. | நாகவள்ளிக்கிழங்கு | 70 கிராம் |
| 3. | ஆடாதோடை இலைச்சாறு | 70 கிராம் |
| 4. | கடலை விதை | 70 கிராம் |
| 5. | புளித்த தயிர் | ½ லிட்டர் (500 கிராம் |

| | | |
|---|---|---|
| 6. | வேப்பஎண்ணெய் | 1 லிட்டர் |
| 7. | கார்போக அரிசி | 35 கிராம் |
| 8. | சிவன்வேம்பு | 150 கிராம் |
| 9. | சுக்கு | 50 கிராம் |
| 10. | திப்பிலி | 35 கிராம் |
| 11. | நாகபூரம் | 35 கிராம் |
| 12. | மனோசிலை | 10 கிராம் |
| 13. | மிளகு | 35 கிராம் |

## மருந்து செய்யும் முறை :

நாகவல்லிக் கிழங்கையும் செந்தொட்டி வேரையும் இடித்துத் தூளாகச்செய்து ஒரு பானையில் போட்டு எட்டு லிட்டர் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து ஒரு லிட்டர் அளவு வரும் வரை காய்ச்சிப் பிறகு இதனை வடித்து இந்தக்கஷாயத்துடன் மேற்குறிப்பிட்டுள்ள மருந்து வகைகளை அறைத்து இந்தக் கஷாயத்துடன் கலந்து அடுப்பில் வைத்துக் கொதிக்க வைத்து தார் போல் பதம் வந்தவுடன் இறக்கி வைத்துக்கொள்ளவும். இதனை வடிகட்டி வாரம் இருமுறை தலைதேய்த்துக் குளித்து வந்தால் மேற்குறிப்பிட்டுள்ள வியாதிகள் குணமாகும்.

குறிப்பு :

இந்த மருந்தை உடல்மேல் மட்டும்தான் தடவிக் கொள்ள வேண்டும். உள்ளுக்கு எக்காரணத்தைக் கொண்டும் சாப்பிடக்கூடாது.

பத்தியம் :

வாய்வு பதார்த்தங்களை நீக்கவும்.

# பவுத்திரத்திற்கும், சகல காது நோய்களுக்கும் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 27

எருக்கிலை பருப்பு, புழுங்கல்லரிசி, வசம்பு, பூச வசம்பு பவுத்திர தீரும். வேப்பெண்ணெய் படி நல்லெண்ணெய் படி பனைமட்டை சாறுபடி மருளகிழங்கு சாறுபடி முருங்கைபட்டை சாறுபடி முருங்கையிலை சாறுபடி இ முள்ளிக்காய் சாறுபடி இ, கண்டுதினம் வீ இ. வசம்பு இச்சாற எண்ணையும் மருந்துங் காய்ச்சி ஆரவிட்டு இந்த எண்ணெயை பஞ்சில்த் தோய்த்து காதிலடைத்து கொள்ளவு காதிலுள்ள வியாதியெல்லாம் தீரும்.

## பவுத்திரத்திற்கு அடை மருந்து:

| | | |
|---|---|---|
| 1. | எருக்கன் இலை (பழுப்பு) | 5 கிராம் |
| 2. | வசம்பு | 5 கிராம் |
| 3. | புழுங்கல் அரிசி | 150 கிராம் |

மேற்கண்ட மருந்து வகைகளை அடைக்கு மாவு அறைப்பது போல் அறைத்து விளக்கெண்ணை விட்டு அடை சுட்டு மூன்று நாள் சாப்பிட்டால் பவுத்திரம் நிவர்த்தியாகும்.

குறிப்பு:

பவுத்திரத்தில் சில வகையுண்டு. நோயாளி அன்பர்கள் பவுத்திரத்தின் குறிகுணங்களை அறிந்து, பவுத்திரம் என்று முடிவுசெய்த பின்னரே இந்தமருந்தைச் சாப்பிடுவது நல்லது.

# சகல காதுநோய்களுக்கு மருந்து

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. | வேப்பெண்ணெய் | 25 மில்லி |
| 2. | நல்லெண்ணெய் | 25 மில்லி |
| 3. | பனை மட்டைச்சாறு | 25 மில்லி |
| 4. | மருளன்கிழங்குச்சாறு | 25 மில்லி |
| 5. | முருங்கைப்பட்டைச்சாறு | 25 மில்லி |
| 6. | முருங்கையிலைச்சாறு | 25 மில்லி |
| 7. | முள்ளிக்காய்ச்சாறு | 25 மில்லி |
| 8. | கண்டு நினம் | 8 கிராம் |
| 9. | வசம்பு | 25 கிராம் |

மேற்குறிப்பிட்ட சாறுவகைகளை ஒரு பாத்திரத்தில் ஊற்றி இத்துடன் வரிசை எண் 8, 9. ஆகிய இரண்டு மருந்துகளை அறைத்துமேற்படி எண்ணெய்,சாறுவகைகள் கலந்த பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்துஎண்ணெய் பதம்வரும்வரை காய்ச்சி ஆறவைத்துக்கொண்டுதலைக்குத் தேய்த்துக் குளிக்கவும். காது சம்மந்தப்பட்ட நோய் களுக்கு காதில் 5 சொட்டு வீதம் போட்டு வந்தால் நிவர்த்தியாகும்.

**பத்தியம்:**

வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

# வாத நோய்களுக்கு மேல் தடவும் தைல மருந்து

## சுவடி மருந்து முறை: 28

**குருபாதம் வேப்பெண்ணெய் படி னு நோக்கி**
**மிலேச்சாறு படி பாத மடக்கி சாறுபடி கொல்லன்**
**கோவைக் கிளங்குச் சாறுபடி வெந்தோன்றிச்**
**சாறு படிலு எருக்கலம் பாலடி வெள் வெங்காயம்**

பூண்டு ஸ கத்திரி மஞ்சள் வீசு இந்த மருந்தெல்லாம் எண்ணெயில் போட்டு பத்ததில் வடித்து மெலுக்குப் போட்டு பிடித்து பெது வாதம் தீரும்.

## விளக்கம் :

வாத நோய்களுக்கு இந்த நூல்களிலும், மற்ற பழைய நூல்களிலும் பலவிதமான முறைகளுடன் மருந்துகள் செய்யும் முறைகளைப்பற்றி வெளி வந்துள்ளன. இருந்தாலும் இந்தச் சுவடியில் அக்காலத்துச் சித்தர்கள் அவர்கள் அனுபவித்த சிறு முறையைப்பற்றி எழுதி வைத்திருந்ததைப்பற்றிக் கீழே விளக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | வேப்பெண்ணெய் | 500 | மில்லி |
| 2. | கருன்நொச்சிஇலைச்சாறு | 250 | மில்லி |
| 3. | கொல்லன் கோவைக் கிழங்குச்சாறு | 250 | மில்லி |
| 4. | வெந்தோன்றிச்சாறு | 250 | மில்லி |
| 5. | எருக்கன்பால் | 250 | மில்லி |
| 6. | பூண்டு | 250 | மில்லி |
| 7. | கறிமஞ்சள் | 150 | கிராம் |
| 5. | வாதமடக்கிச்சாறு | 250 | மில்லி |

இவைகள் அனைத்துச்சாறு வகைகளுடன் பூண்டு, கரிமஞ்சள் இவைகளை இடித்துச் சேர்த்துக்கொண்டு வேப்பஎண்ணெயுடன்கலந்துஅடுப்பில் வைத்து எண்ணெய் பதம் வரும் வரை காய்ச்சி தினம் ஒருவேளைக்கு உடம்பில் தேய்த்துத்தடவி, பிடித்து வந்தால் வாதம் எல்லாம் தீரும்.

பத்தியம் :

வாய்வு உணவுப் பண்டங்களை நீக்கவும்.

## இரண்டாவது மருந்து செய்யும் முறை:

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | | |
|---|---|---|
| 1. | மிளகு | 100 கிராம் |
| 2. | சுக்கு | 25 கிராம் |
| 3. | மஞ்சள் | 25 கிராம் |
| 4. | சிறுதேக்கு | 25 கிராம் |
| 5. | வாய்விளங்கம் | 50 கிராம் |
| 6. | நல்லெண்ணெய் | 1 லிட்டர் |

மேற்குறிப்பிட்டுள்ள கடைச்சரக்குகளை நன்றாக இடித்துத் தூள்செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு பெரிய சட்டியில் நல்லெண்ணெயை ஊற்றி லேசாகத் தீயிட்டு எண்ணெயை நன்றாகக் காய்ச்சி கீழே இறக்கி வைத்து மேற்செய்து வைத்திருக்கும் தூளை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு மேல் தடவவும்.

# ஆனந்த வாய்வுக்கு சில வகையான மருந்துகளின் விபரம்

## சுவடி மருந்து முறை: 29

**வெள்வெங்காயம் களஞ்சி பருப்பு நவ தேங்காய்ப்பால் நாளி முடக்கோத்தான் சாறு ஆளாக் களச்சிலேச்சாறு ஆளாக்கு சித்தா மணக்கெண்ணெய்படி பெருங்காயூ விசா இது வெல்லாம் ஒன்றாய் விட்டு மெழுகு பதத்தில் யிரக்கிக்கொண்டு தினம் ஒரு கரண்டி யெண்ணெயூ ஆழக்கு வென்னீர்விட்டு கொள்ளு இப்படி வென்னீரை விட்டோரு ஒன்பது முறை கொள்ள இதுதூ முன்குடு சிரமருந்து களச்சிப் பருப்பு ஒன்று முருங்கை கொழுந்து அரைத்து**

ஒரு கோட்டை பாக்களவு பெருங்காயூ வீஇ
கொள்ளிக்காரம் சிவந்த காரம் ஒரு கோட்டை
பாக்களவு கூடகூட்டி அரைத்து கோழிமுட்டை
கருவெள்ளை கருச்சட்டியில் விட்டு வெண்ணெய்
போட்டு போரிச்சிடுக்க இந்தபடி மூன்று செள்
சூடுது அபோல் எண்ணெய் குடுக்க ஆனந்த வாய்வுரு
விளக்கெண்ணெய் சுக்கு களச்சிப்பருப்பு பெருங்காயம்
வேள் வெங்காயம் யீரவெங்காயம் அரிஞ்சதுபடிவ
வெத்திலே கழுதைலத்தி படிகமூன்று யுந்த வைத்து
உலரவைத்து மறுநாளில் பிளிஞ்சு படி இ
திரு கன்னிச்சாறு படிவ வேலிபருத்தி சாறு
படிவ விளக்கெண்ணெய் படிகயது வெல்லாம்
ஒன்ருய் சேகரித்து மெழுகு பதத்தில் வடித்து
தினம் ஒரு கரண்டி எண்ணெய் குடுக்க இப்படி
ஏழு நாள் கொடுக்க உப்பு புளி தவிரக்கலு
அனந்த வாயு தீரும்.

## விளக்கம்:

வாய்வுகளில் பல வகையுண்டு. அதாவது அண்ட வாயு, மந்தாக்கினி வாய்வு பித்த வாய்வு, உஷ்ண வாய்வு அஜீரண வாய்வு, குண்டல வாய்வு. குடகரி வாய்வு, அத்தரு வாய்வு, துடிவாய்வு, ஆனந்த வாய்வு போன்ற வாய்வுகளில் ஆனந்த வாய்வு என்பது உடம்பில் வாய்வு அதிகரித்து இதன் காரணமாக அக்கினிக் கொண்டு அடிக்கடி காற்றுப் பிரியும். சோர்வாகயிருக்கும். இதன் நிவர்த்திக்கு மருந்து,

தேவையான மருந்துகளின் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | பூண்டு | 250 கிராம் |
| 2. | கழஞ்சி பருப்பு | 50 கிராம் |
| 3. | தேங்காய்ப்பால் | 150 மில்லி |
| 4. | கடலைப்பருப்பு | 50 கிராம் |
| 5. | முடக்கொத்தான் சாறு | 250 மில்லி |
| 6. | கழச்சி இலைச்சாறு | 250 மில்லி |
| 7. | சித்தாமணக்கு எண்ணெய் | 150 மில்லி |
| 8. | பெருங்காயம் | 100 கிராம் |

இவைகளை வகைப்படி எடுத்து ஒன்றாகக் கலந்து பாத்திரத்தில் போட்டு காய்ச்சி எண்ணெய்ப் பதம் வந்த வுடன் இறக்கி வைத்துக்கொள்ளவும்.

**அளவு :**

தினம் ஒரு வேளை மட்டும் (சின்ன கரண்டி அளவு)

**காலம் :**

ஒன்பது நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

**அனுமானம் :**

மேற்படி எண்ணெயுடன் வெந்நீர் கலந்து சாப்பிடவும்.

## இரண்டாவது வகை மருந்து :

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | கழச்சிப்பருப்பு | 5 கிராம் |
| 2. | முருங்கைக் கொழுந்து | 15 கிராம் |
| 3. | பெருங்காயம் | 5 கிராம் |
| 4. | கொள்ளிக்காரம் | 5 கிராம் |
| 5. | சிவந்த காரம் | 5 கிராம் |

இந்த மருந்து வகைகள் அனைத்தையும் கொட்டைப் பாக்களவு (மூன்று கிராம் எடை)க்கு அரைத்துக்கொண்டு ஒரு கல் சட்டியில் வெண்ணெயைக் கொஞ்சம் விட்டு இதில் கோழி முட்டையின் வெள்ளைக்கருவை மட்டும் போட்டுக் கொண்டு இதனுடன் மேல் அரைத்து வைத்திருப்பதையும்

சேர்த்துப் பொரித்து மூன்று நாட்களுக்கு இப்படிச்செய்து உட்கொள்ளவும் இதனைச் சாப்பிடும்போது மேலே முதல் முறையில்சொன்ன எண்ணெய்மருந்தின் அளவுப்படி சாப்பிடவும்.

**பத்தியம் :**

வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

## மூன்றாவது வகை மருந்து

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | விளக்கெண்ணெய் | 750 மில்லி |
| 2. | சுக்கு | 100 கிராம் |
| 3. | கழச்சிப்பருப்பு | 50 கிராம் |
| 4. | பெருங்காயம் | 50 கிராம் |
| 5. | பூண்டு | 200 கிராம் |
| 6. | வெங்காயம் | 200 கிராம் |
| 7. | வெற்றிலைச்சாறு | 100 மில்லி |
| 8. | திருக்கள்ளிச்சாறு | 200 மில்லி |
| 9. | வேலிபருத்திச்சாறு | 150 மில்லி |
| 10. | கழுதை லத்தியைக் கரைத்த தண்ணீர் | 150 மில்லி |

இவைகளில் அனைத்துச்சாறுவகைகளைஒருபாத்திரத்தில் போட்டு மற்ற சரக்கு வகைகளை அறைத்து எல்லாவற் யும் ஒன்றாய்க் கலந்து அடுப்பில் வைத்து மெழுகுப்பதம் வரும் வரைக் காய்ச்சி வைத்துக்கொள்ளவும்.

**அளவு :**

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் சிறியக் கரண்டி அளவுக்குச் சாப்பிடவும்.

**காலம் :**

ஏழு நாட்கள் கொடுக்கவும்.

**பத்தியம் :**

உப்பு, புளி. வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

# அண்ட வாய்வின் நிவர்த்திக்கு மருந்துகள் செய்யும் முறை.

## சுவடி மருந்து முறை: 30

வேல் வெங்காயம் மவுத்தை பூடு மூன்று பூடு
மிளகு பதினேரு மிளகு மகறுப்புக்கட்டியொரு
தாணிக்கையுள்ள
மகஸ்கஸ்தம் பினியசுத்தி நெருப்பில் சுட்டு வேள்
வெஸ்கம் முசுட்டு மிாது வெதுப்பிக்கொண்டு இது
மூன்றையும் அம்மியில் வைத்து தட்டி உருண்டை செய்து
சாப்பிடவும். இந்த படி அந்தி சந்தி மூன்றும்
நாள் சாப்பிடவும். பாக்கு இவை சுண்ணாம்பு
வெத்திலேத்தடவி அஞ்சுபாகம் எடுத்து சுண்ணாம்பு
தடவி வெத்திலேக்குள்ளே மூன்று யேருக்கம்முட்கை
பூவை வைய்த்து மடித்து கடுகலு மூன்று திரம் மூன்று
வெத்திலேக்குள்ளே மடித்து கொடுக்கவும்,
இந்த மூன்று நாள் ஆறுபொழுதுகுடுக்கவும் மூன்று
நாளும் உப்பு இல்லாமல் கஞ்சி காச்சி
கொடுக்கவும். ஏழாம் நாளும் இஞ்சிதேச்சு
முழுகி உப்பு கூட்டவும். எட்டானாள் உப்புப்
புளி கூட்டி கொள்ளவும். அண்டவாய்வு தீரும்.

## விளக்கம் :

அண்டவாய்வின் குறிகுணம் வாய்வுக் குடலில்இறங்கி நரம்பு வழியாக விரையும். இறங்கிப் பொருமி வலிக்கும். அது மேல்நோக்கி உடலுள் வாங்கும். அதன் நரம்புப் புடைத்துக் காணும். இதன் நிவர்த்திக்குப் பலவிதமான மருந்துகளின் முறைகளை அக்காலத்தில் இருந்து இக் காலத்தின் நடைமுறைகளில் பலமருந்துகள் இருக்கின்றன இருந்தாலும், கீழ்க்கண்ட மருந்து முறைகளைப் பார்க்கும் போது அக்காலத்தில் சித்தர்கள் அவர்கள்அனுபவித்துள்ள மருந்து வகைகளைச் சுவடியின் மூலமாக எழுதி வைத்திருந்த மருந்து வகைகளைப்பற்றி மிக விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம்:

1. பூண்டு மூன்று கிராம் எடை
2. ஊமைத்தை பூ மூன்று கிராம் எடை
3. பூண்டு மூன்று கிராம் எடை
4. கருப்பட்டி 10 கிராம்

முதல் மூன்றையும் நெருப்பில் சற்று வதக்கிக்கொண்டு அரைத்து உருண்டை செய்து கருப்பட்டி கலந்து மூன்று தினங்களுக்குச் சாப்பிடவும். மேற்படி மருந்து உருண்டையுடன் வெற்றிலைப்பாக்கு, எருக்கம் மொட்டு இவைகளுடன் சேர்த்து மென்று சாப்பிடலாம்.

அளவு:

ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு வேளை வீதம் சாப்பிடவும்.

காலம்:

மூன்று நாட்கள் மட்டும்.

பத்தியம்:

வாய்வு உணவு வகைகளை நீக்கி விட்டு, உப்பு, இல்லாத கஞ்சி மட்டும் மூன்றுதினங்களுக்கு கொடுக்கலாம்

குறிப்பு:

மறுபடி மூன்று நாள் இடைவெளிக்குப் பின்பு இந்த மருந்தைச் சாப்பிட்ட பிறகு ஏழாம் நாள் இஞ்சியை அரைத்துத் தலை முழுகவும், எட்டாம் நாள் உப்பு, புளி சேர்த்துக்கொள்ளவும்.

# அக்கினி மந்தம், வாதபித்தசிலேத்தும வகை, மேக குட்டம், சூலை, ஆறாத புண் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

**சுவடி மருந்து முறை: 31**

பறங்கிப்பட்டை, அமுக்கிருவேர் க, கடுகு எ,
தானிலெ வீ, நெல்லபருப்பு எ, சுக்கு எ,
வாய்விளங்கம் வீ எ, மிளகு வீ எ, திப்பிலி வீ எ
ஏலம் வீ எ, லவங்கப்பட்டை எ, ஓமம் எ குருசாணி
ஓமம் வீ எ சித்திரமூலம் வீ எ, சித்தரத்தை எ
தேசாபுரம் வீ எ, திப்பிலிமூலம் எ, கோவும்
வலி வீ எ, நரசீரகம் வீ எ, கருஞ்சீரகம் வீஎ,
சடாமஞ்சி வீஎ அதிமதுரம் சாதிலெ வீ எ, கிராம்பு
வீஎ, விலாமிச்சம்வேர் நன்னாரிவேர் வீ எ, வெள்ளருகு
வீ சர்க்கரைப்பூ வீ எ தேன்படி பதிவு நெய்படி க இந்த
மருந்தெல்லாம் இடித்து வஷ்த்திர கசாயம் பண்ணி
சர்க்கரை போட்டு பிசறி நெய் விட்டு தேனும் விட்டு
பிசறி சட்டியில் போட்டு வறுத்து சிவந்தவரணத்தில்
லிருக்கும் எடுத்து கொள்ளவும். தினம் ஒண்ணு
ஒரு கானிலெப் பிரமானம் சாப்பிடவும்.
இதுசூத்தீரும் வியாதி அக்கினி மந்தம் வாதம்
பித்த சிலேர பணம் மேகம் குஷ்ட்டம் ஓமம்
சூலெ ஆருத பின்பு புண் ஏலு குணமாம் தாதுவத்தினெ
விரியமுண்டாம் அது பத்தியம் மாகாது, புகையிலெ
தவிரக்கலு இடைசா சாபத்திலு.

தேவையான மருந்துகளின் விபரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | பரங்கிப்பட்டை | 100 | கிராம் |
| 2. | அமுக்கிரான்வேர் | 100 | கிராம் |
| 3. | கடுகு | 50 | கிராம் |
| 4. | நெல்லிப்பருப்பு | 50 | கிராம் |
| 5. | மருதாணி இலைச்சாறு | 100 | மில்லி |

| | | |
|---|---|---|
| 6. | சுக்கு | 50 கிராம் |
| 7. | வாய்விளங்கம் | 50 கிராம் |
| 8. | மிளகு | 50 கிராம் |
| 9. | திப்பிலி | 50 கிராம் |
| 10. | ஏலம் | 50 கிராம |
| 11. | சின்னலவங்கப்பட்டை | 50 கிராம் |
| 12. | ஓமம் | 35 கிராம் |
| 13. | குருசாணி ஓமம் | 35 கிராம் |
| 14. | சித்தரமூலம் | 35 கிராம் |
| 15. | சித்திரத்தை | 35 கிராம் |
| 16. | தேவதாரம் | 35 கிராம் |
| 17 | திப்பிலி மூலம் | 35 கிராம் |
| 18. | கோஷ்ட்டம் | 35 கிராம் |
| 19. | நச்சீரகம் | 35 கிராம் |
| 20. | கருஞ்சீரகம் | 35 கிராம் |
| 21. | சடாமாஞ்சில் | 35 கிராம் |
| 22. | அதிமதுரம் | 35 கிராம் |
| 23. | கிராம்பு | 35 கிராம் |
| 24. | விலாமிச்சம்வேர் | 35 கிராம் |
| 25. | நன்னாரிவேர் | 35 கிராம் |
| 26. | வெள்ளை எருக்கன்சாறு | 150 மில்லி |
| 27. | சர்க்கரை | 250 கிராம் |
| 28. | தேன் | 100 மில்லி |
| 29. | நெய் | 100 மில்லி |
| 30. | தழுதா இலைச்சாறு | 100 மில்லி |
| 31. | தேக்கு இலைச்சாறு | 100 மில்லி |

## மருந்து செய்யும் முறை :

மேற்குறிப்பிட்ட மருந்து வகைகளைக் குறித்த அளவுக்கு எடுத்து, கல் உரலில் போட்டு நன்றாகஇடித்து துணிக்கொண்டு வடிக்கட்டிய சூரணத்தை எடுத்து சர்ககரைப் பாவு செய்து இந்த சூரணத்தையும் சாறு வகை களையும் போட்டுக்கிண்டி தேன் நெய் விட்டு பிசைந்து லேகியமாக வைத்துக்கொள்ளவும்.

அள வு:

தினம் ஒரு வேளைக்கு 8 கி ரா ம் எடை வீதம் சாப்பிடவும்.

காலம் :

24 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் :

புகையிலை நீக்கவும்.

குறிப்பு :

இந்த மருந்துகளை சாப்பிட்டுக்கொண்டு வந்தால் தாதுவிருத்தி, வீரியம் உண்டாகும்.

## கை வெள்ளை, கால் வெள்ளை, உதடு வெள்ளை இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 32

கைவெள்ளை. கால்வெள்ளை உதடுவெள்ளை
வாங்கும் பரங்கிப்பட்டை சூரணம் பரங்கிப்பட்டை
ந மிளகு, ஓமம் குருசாணி ஓமம், நற்சீரகம்
கருஞ்சிரகம் திப்பிலி. சாதிக்காய், சாதிபத்திரி
பரங்கிப்பட்டை சாதிலங்க பத்திரி பட்சையாய் கூட்டி
மற்ற மருந்தெல்லாம் இளம் வறுப்பா வறுத்து கூடி
வஷ்த்திர காயம் பண்ணி விடசுக் கொள்ளு மருந்து
சாப்பிடுதுக்கு முதனுள் நொச்சி சாறுபடி, வெளி
மருந்து சாறுபடி, குப்பைமேனி அச்சாறுபடி.

## விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பரங்கிப்பட்டை சூரணம் | 70 | கிராம் |
| 2. | மிளகு | 70 | கிராம் |
| 3. | ஓமம் | 70 | கிராம் |
| 4. | குருசாணி ஓமம் | 70 | கிராம் |
| 5. | நச்சீரகம் | 70 | கிராம் |
| 6. | கருஞ்சீரகம் | 70 | கிராம் |
| 7. | திப்பிலி | 70 | கிராம் |
| 8. | சாதிக்காய் | 70 | கிராம் |
| 9. | சாதிபத்திரி | 70 | கிராம் |
| 19. | தாளிசபத்திரி | 70 | கிராம் |
| 11. | இலவங்கப்பத்திரி | 70 | கிராம் |

மேற்குறிப்பிட்டுள்ள எல்லா மருந்து வகைகளையும் சட்டியில் போட்டு லேசான சூட்டில் வறுத்து எடுத்து இடித்துத் தூள் செய்து சூரணம் போல் செய்துக் கொண்டு நொச்சியிலைச்சாறு ஒரு லிட்டர் கொடிவேலி, சமூலம் சாறு குப்பமேனி இலைச்சாறு இவைகளை எல்லாம் கலந்து அடுப்பில் வைத்து கிஷாயம் செய்து மேல் செய்து வைத்திருக்கும் சூரணத்தில் 10கிராம் எடைக்ரு எடுத்துக்கொண்டு இந்த கிஷாயத்தில் கலந்து சாப்பிடவும்.

அளவு :

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் சாப்பிடவும்.

காலம் :

48 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் :

கஞ்சி சாதம் சாப்பிடவும்.

குறிப்பு :

இந்தச் சூரணத்தை சாப்பிடும் முன்னர் கொடுவேலி வேர்பட்டை, குப்பைமேனிச்சாறு, நொச்சிச் சாறு இதனை சமன்எடை எடுத்து கிஷாயம் செய்து முதல்நாள் சாப்பிட்டு விட்டு இந்தச் சூரணத்தைச்சாப்பிடவும்.

## சகல சன்னிக்கு தைல மருந்து

### சுவடி மருந்து முறை : ௭௩

வ. சுக்கு ஸூ மிளகு ஸூ திப்பிலி, சித்தரத்தை.........
சன்னி
னுயகடத ங தருஞ்சீரமம் ங, கார்ப்பாக அரிசி ங, வெளிச்சி
பூசின் கருஸ்குலைகலிய வீடஸ மஞ்சள், வசம்பு,
வீட இலுந்பை
புண்ணுக்கு, வேன் வெங்காயம் பெருங்காயம், ஓமம் இந்த
மருந்தெல்லாம் எண்ணெயில் போட்டு தீர்ந்த பதத்தில்
வடித்துக்
கொள்ளு. இந்த தயிலம் சகல சன்னிக்கு போட்டாலும்
நோய் வானம் சுத்தி பண்ணி கருஸ்கு லிங்கம் இருண்டு
மருந்து குளி அம்மியில் வைய்த்து நாலு வருசத்துக்கு
பழம்
புளியை காந்தி கொதிக்க வைய்த்து அந்த சாறு விட்டு
மூன்று
சாமம் அரைத்து வில்லை செய்துகொற்று எந்த அனு
பானத்திலே
யிட சகல தோசமும் சகல சன்னியும் திரும் காசம் பத்து குளி
அம்மியில்விட்டு வெற்றிலே சாறு கொண்டு மூன்று சாமம்
அறைத்து
குளிகை சேர்த்துவச்சுக் கொண்டு எந்த
அனுபானத்திலேயுயிட்டு
சன்னி தரும் காரேன் எண்ணெய்படி மண்கிட்டி
சதகுப்பை மஞ்சள்

ஸூய கஸ்தூரி மஞ்சள்கருஞ்சீரகம் ஸூய அடின்வெள்ளுள்ளி ஸூய நோச்சியிலை சாறுபடி சருஞ்சாயிலைச் சாறு கறப்பான் யிலைச் சாறுபடி வெள்ளாட்டு பால் படின பசுவின்

பால்படின

முதிர்ந்த பதத்தில் எண்ணெயை வடித்துக் கொள்ளு இதுவும் தீரும். மவிய செகலத்து நோயும் தீரும் இது கைகண்டது.

## விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | சுக்கு | 35 | கிராம் |
| 2. | மிளகு | 35 | கிராம் |
| 3. | திப்பிலி | 35 | கிராம் |
| 4. | சித்திரத்தை | 35 | கிராம் |
| 5. | சன்னலவங்கப்பட்டை | 35 | கிராம் |
| 6. | கருஞ்சீரகம் | 85 | கிராம் |
| 7. | கார்போக அரிசி | 35 | கிராம் |
| 8. | விலாம் பிசின் | 35 | கிராம் |
| 9. | கருங்குங்கிலியம் | 35 | கிராம் |
| 10. | மஞ்சள் | 35 | கிராம் |
| 11. | வசம்பு | 35 | கிராம் |
| 12. | வேப்பம்புண்ணாக்கு | 35 | கிராம் |
| 13. | பூண்டு | 50 | கிராம் |
| 14. | பெருங்காயம் | 50 | கிராம் |
| 15. | ஓமம் | 50 | கிராம் |

மேற்குறிப்பிட்ட மருந்து வகைகள் யாவற்றையும் கல் உரலில் போட்டு நன்றாக இடித்து தூள் செய்து வேப்ப எண்ணெயில் கலந்து சுடர் தைலம் காய்ச்சி இறக்கி வடிகட்டி வைத்துக் கொண்டு சகல சன்னி வகைகளுக்கும் கொடுக்கலாம்.

அளவு :

வயதுக்கு தகுந்தாற்போல் கொடுக்கவும்.

## இரண்டாவது முறை:

1. சுத்தி செய்த நீர்வாளம்
2. கருங்குங்லிகம்

இந்த இரண்டு வகைகளையும் சமம் எடை எடுத்துக் கொண்டு நான்கு வருடத்திற்கு மேல் ஆன புளியைக் கரைத்து இத்துடன் சேர்த்துக் கொதிக்கவைத்து மேற்படி புளிச்சாரைவிட்டு 9 மணி நேரம் அரைத்து வில்லைசெய்து காயவைத்து வயதுக்கு தகுந்தபடியும், வியாதிக்குத் தகுந்தபடியும். வியாதிகளுக்குத்தகுந்த அனுமானத்துடன் கொடுத்தால் சகல தோஷம் சந்நி தீரும்.

## மூன்றாவது முறை:

மேற்படி சுத்தி செய்த லிங்கத்தை அளவுபடி எடுத்து அம்மியில் வைத்து வெற்றிலைச்சாறு கொண்டு 9 மணி நேரம் அரைத்து மாத்திரைசெய்து வைத்துக்கொண்டு வியாதிக்குத் தகுந்தாற்போல் அனுபானத்தில் கொடுத்தால் சன்னி தீரும்.

## நான்காம் முறை தைலம்:

| | | |
|---|---|---|
| 1. | கருஞ்சீரகம் | 25 கிராம் |
| 2. | கஸ்தூரி மஞ்சள் | 25 கிராம் |
| 3. | வசம்பு | 25 கிராம் |
| 4. | ஓமம் | 25 கிராம் |
| 5. | மனோசிலை | 20 கிராம் |
| 5. | வெள்ளி பாஷானம் | 20 கிராம் |
| 7. | கௌரிப் பாஷானம் | 20 கிராம் |
| 8. | கெந்தகம் | 35 கிராம் |
| 9. | ரசம் | 20 கிராம் |
| 10. | வீரம் | 20 கிராம் |

இவைகளை கல்வத்தில் போட்டு மடற்கள்ளியின் பால்விட்டுஅரைத்து பிறகு 200மில்லி வேப்ப எண்ணெயில் இதனை கலந்து நன்றாக அரைத்து வெள்ளைத் துணியை

பந்தம் போல் சுருட்டிக்கொண்டு தீ யி ட் டு இதன் மேல் இந்த மருந்து எண்ணெயை விட்டுக்கொண்டு இருந்தால் இந்தச் சுடரில் இருந்து சுடர் தை யி ல ம் இறங்கும். இதைப் பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்டு ஒரு காசு எடை வீதம் உள்ளுக்கும் மேலுக்கும் பூசி வந்தால் சகல சன்னி தீரும்.

குறிப்பு:

1. சன்னி 13 வகைப்படும்.

2. சுடர்த் தயிலம் என்பது மருந்துகளை ஒருதுணியில் தடவிப் பந்தம்போல் சுருட்டி மேலே எண்ணெயை ஊற்றி எரியவிட்டு இதில் இருந்து வடியும் எண்ணெய்தான் சுடர்த் தயிலம் என்று பெயர்பெறும்.

## ஐந்தாவது முறை :

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | வேப்ப எண்ணெய் | 500 மில்லி |
| 2. | மண்சீட்டி | 50 கிராம் |
| 3. | சதகுப்பை | 50 கிராம் |
| 4. | மஞ்சள் | 50 கிராம் |
| 5. | கஸ்தூரி மஞ்சள் | 50 கிராம் |
| 6. | கருஞ்சீரகம் | 50 கிராம் |
| 7. | அபின் | 10 கிராம் |
| 8 | நொச்சியிலைச்சாறு | 250 மில்லி |
| 9. | கஞ்சா இலைச்சாறு | 250 மில்லி |
| 10. | கரப்பான் இலைச்சாறு | 250 மில்லி |
| 11. | வெள்ளாட்டுப் பால் | 1 லிட்டர் |
| 12 | பசுவின் பால | 1 லிட்டர் |

## மருந்து செய்யும் முறை :

மேற்குறிக்கப்பட்டு இருக்கும் மருந்து வகைகளை இடித்துத் தூள்செய்து ஒரு பானையில் போட்டு இத்துடன் சாறு வகைகளை ஊற்றி எண்ணெய், பால் இவைகளை நன்கு கலந்து அடுப்பில் வைத்து மெல்லிய தீயிட்டு சுண்டக் காச்சி எண்ணெய்ப் பதம் வந்தவுடன் இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு வயதுக்குத்தகுந்தஅளவுப்படி கொடுத்து வந்தால் சகல சன்னிகள் தீரும். இது கைகண்ட மருந்து.

# தலை நோய், தொண்டை கரப்பான், புண் கரப்பான், நாசி நீர்ப்பாச்சல் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 34

நல்ல எண்ணெ பழக கடுக்கு வாயிலே அரளி படுத்தல் புகெயிலே வெண்ணெ கொச்சிலே, துளசியிலே, கரு நோச்சிலே எருக்கம் உப்பு, கருவேல யிலே முருக்கயிலே ஆவாரை கடுசார் சுவகரா கோஷ்ட்டம் அதிமதுரம், கருஞ்சீரகம். ஆனை வசம்பு, சென்னகரபட்டை நசங்கத்ரி பட்டை, கடுக்காய், கார் பேரக அரிசி பூவரசம்பட்டை, அரளி போட்டு மருந்தோனி பட்டை வெள்வேல பட்டை வகைக்கு கீர வெங்கரயம் மிளதும் இது வெள்ளலாம் மரைத்துக் கரைத்து ஒரு பதத்தில் வடித்து சிந்தாமல், ஒரு பானையிலே தொண்டைக் கரப்பான் புண் கரப்பான் கொல்லும் நாசி நீர்ப் பாச்சல் நண்டை கண்ட இரங்கதுபோல் நடுங்கி யோடும்

கண்டீரே

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| 1. | நல்லெண்ணெய் | 1 லிட்டர் |
| 2. | வாக இலை சாறு | 250 மில்லி |
| 3. | அரளி பருப்பு இலைசாறு | 250 மில்லி |
| 4. | பாகயிலைச்சாறு | 250 மில்லி |
| 5. | வெள்ளை நொச்சி பிலைச் சாறு | 250 மில்லி |
| 6. | துளசியிலைச் சாறு | 250 மில்லி |
| 7. | கரும் நொச்சியிலைச்சாறு | 250 மில்லி |
| 8. | எருக்கன் உப்பு | 250 மில்லி |
| 9. | கருவேலன் யிலைச்சாறு | 250 மில்லி |
| 10. | முருக்கன்யிலைச் சாறு | 250 மில்லி |
| 11. | ஆவாரையிலைச் சாறு | 250 மில்லி |
| 12. | கோஷ்ட்டம் | 250 கிராம் |
| 13. | அதி மதுரம் | 50 கிராம் |
| 14. | கருஞ்சீரகம் | 50 கிராம் |
| 15. | ஆனை திப்பிலி | 50 கிராம் |
| 16. | வசம்பு | 50 கிராம் |
| 17. | சின்ன கா ன்பட்டை | 50 கிராம் |
| 18. | செங் கொன்றை | 50 கிராம் |
| 19. | கடுக்காய் | 50 கிராம் |
| 20. | கார்போக அரிசி | 50 கிராம் |
| 21. | பூவரசம் பட்டை | 50 கிராம் |
| 22. | அரளி மொட்டு | 50 கிராம் |
| 23. | மருதாணிப்பட்டை | 25 கிராம் |
| 24. | வெள்ள வேலன்பட்டை | 25 கிராம் |
| 25. | வெங்காயம் | 100 கிராம் |
| 26. | மிளகு | 25 கிராம் |

மேற்கூறியவற்றை எல்லாம் நன்றாக அரைத்து ஒரு பானையில் போட்டு இத்துடன் நல்ல எண்ணெயையும் ஊற்றிக் கலக்கி அடுப்பில் வைத்து, எண்ணெய்ப் பதம் வரும் வரை நன்கு காய்ச்சி வைத்துக் கொள்ளவும்.

**காலம் :**

வாரம் இருமுறை வீதம் ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

**பத்தியம் :**

கரப்பான் உணவு வகைகள் நீக்கவும்.

# மேக சந்தனாதி எண்ணெய்த் தைலம்

## சுவடி மருந்து முறை: 35

சந்தனம், சாதிக்காய், கோஷ்ட்டம் விசு வாசி மகாப்பூ வங்கானி பச்சை தரதோலம் கீச கோலம் மஞ்சிட்ட கடாம எஞ்சி செங்கழுநீர் செண்பகப்பூ ஏலம், சன்ன இலவங்கம், இலவங்கப்பட்டை, இலவங்க பத்திரி, வெட்டி வேர் தேதாரம்

போர்த்தை சித்தரத்தை செ வள்ளிக்கோடி தரக் கோலம் கடுகு ரோகினி, சாதி பத்திரி, தாளிச பத்திரி, சிறு நாகப்பூ, வெள்ளி வொத்தாரம் அதிமதுரம், கல்னூர் கலமதம், கலப்பாசி கலப்பிசின், விளாவரிசி, வேர்பாலே அரிசி மருசள், மரமஞ்சள் கஸ்தூரி மஞ்சள் செஞ்சந்தனம் நற்சீரகம், கருஞ்சீரகம், மிளகு, ஏலம் புனுக பட்டை கொண்டோசினே மிளகு பூலாங்கிழங்கு பாலக்கேரு ட பச்சை, சிப்பி நா தணம், கற்பூர சாபாத்தி, ஆனை முனி நோகண்டி, கடுகு ரோகணி கூகைநீர், கிரும்பு, சுக்கிரா காரம் அதிவிடையம் கிளியூர் பட்டை கருக்கு வாய்ப்பட்டை வால் மிளகு கடுக்காய், தாணிக்காய் நெல்லிப் பருப்பு மோச்சக்காய், கொத்தமல்லி வாய் விளங்கம், ஓமம் குருசாணி ஓமம், கோமபாக்கு, பித்த ரோகணி, கஸ்தூரி

குங்குமம் கோரோசினை பச்சைக் கற்பூரம், புனுகு சடம் பச்சை புனுகு, சவ்வாது இந்த மருந்தெல்லா வகைக்கு எஞ்சிக் கருத்த எள்எண்ணெய் பசுவின்பால் எளநீர் படிஉ காட்டு மருந்து கசாயத்துக்கு, மலாக்கயா சந்தனம், அகில் கட்டை, கோஷ்ட்டம், தேவதாரம், அதிமதுரம், ஏலம் மிளகு, இத்தறத்தை, சதாவேரி, நன்னாரிவேர் பொன்னாங்கரினி, கோரை கிளங்கு வில்லை வேர், சித்திக் கொடி விலாமிச்ச வேர், வெட்டி வேர், தாமரை வளையம் அல்லி கிளங்கு சித்தா முட்டி வேர், போரி முட்டி வேர், போர் முட்டி வேர், சிறு கீரை வேர், கரிப்பான் வேர், வேல்லாறை வேர்யிலை காத் தொட்டியிலை, நீர்வள்ளி கிளங்கு வேங்கை வயிரம், வாகை வயிரம், தானை விழுது, சீரார் செங்கழுநீர், பளம்பாசி தகரை, மயிர் மாணிக்கம் சவரிக் கோத்து, தலைசுருளி வேர், வேருகங்கிாங்கு, தூநு வனை வேர், கஞ்சா கோரை முள்ளி வேர், செந்தோட்டி வேர், மருதோணிப்பூ, முடக் கோத்தான், கிலுகிலுப்பை, பொன்

முசுட்டை பற்பாடகம், சிருபினை வேர், விஷ்டணு காந்தி சாக் கொன்றை வேர். நிலைக்கு மின்னுயுருவி வேர், கொடி வேலி வேர் தலை சுருளி வேர், துளசி வேர் சிறுவழுதலை வேர். பாலக் குறண்டி ஆமடா மொடை, கற்ப்பூரவல்லி நொச்சியிலை, பத்தான் வித்திருக்கும் கலவத்தைப் பிரித் தெடுத்து, பத்தாம் பெண்டு நிலம் கைக் கண்டான் கம்பத்தான்

காசிடை கொண்ட கருமக கிரந்தி நாசம் ஆம வேசையறிக்கு சொல்லாதே விண்டு நிலம் சோதி நேரிடை கெந்தகம் ஏலம் காலட இதமாகலிடை நிலம் சோதி கோலம் கீலி சாற்றில் வரைத்து கொள்ள வீராகுல வாலனு மாவண மாணமும் பில்லையே காலமும் மறுகரை கனவிலும் மந்தான்,

**விளக்கம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | சந்தனம் தூள் | 500 | கிராம் |
| 2. | சாதிக்காய் | 50 | கிராம் |
| 3. | கோஷ்ட்டம் | 50 | கிராம் |
| 4. | மகரப்பூ | 50 | கிராம் |
| 5. | வங்காளிப்பச்சை | 50 | கிராம் |
| 6. | தக்கோலம் | 50 | கிராம் |
| 7. | கச்சோலம் | 50 | கிராம் |
| 8. | மஞ்சிட்டி | 50 | கிராம் |
| 9. | சடாமாஞ்சில் | 50 | கிராம் |
| 10. | செங்கழுநீர்க் கிழங்கு | 50 | கிராம் |
| 11. | செண்பகப்பூ | 50 | கிராம் |
| 12. | ஏலம் | 50 | கிராம் |
| 13. | சன்ன இலவங்கம் | 50 | கிராம் |
| 14. | இலவங்கப்பட்டை | 50 | கிராம் |
| 15. | இலவங்கப்பத்திரி | 50 | கிராம் |
| 16. | வெட்டி வேர் | 50 | கிராம் |
| 17. | தேவதாரம் | 50 | கிராம் |
| 18. | பேரரத்தை | 50 | கிராம் |
| 19 | அரத்தை | 50 | கிராம் |
| 20. | செவ்வள்ளிக்கொடி | 50 | கிராம் |
| 21. | கருகு ரோகினி | 50 | கிராம் |
| 22. | சாதிப்பத்திரி | 50 | கிராம் |
| 23. | தாளிச பத்திரி | 50 | கிராம் |
| 24. | சிறுநாகப்பூ | 50 | கிராம் |
| 25. | வெள்ளி வெரித்தாரம் | 50 | கிராம் |
| 26. | அதிமதுரம் | 50 | கிராம் |
| 27. | கல்னார் | 50 | கிராம் |
| 28. | கல மதம் | 50 | கிராம் |
| 29. | கலப்பாசி | 50 | கிராம் |
| 30. | கலப்பிசின் | 50 | கிராம் |
| 31. | வாளுவ அரிசி | 50 | கிராம் |
| 32. | வேட்பாலை அரிசி | 50 | கிராம் |
| 33. | மஞ்சள் | 50 | கிராம் |
| 34. | மரமஞ்சள் | 50 | கிராம் |
| 35. | கஸ்தூரி மஞ்சள் | 50 | கிராம் |
| 36. | செஞ்சந்தனம் | 50 | கிராம் |

| | | |
|---|---|---|
| 37. | நற்சீரகம் | 50 கிராம் |
| 38. | கருஞ்சீரகம் | 50 கிராம் |
| 39. | மிளகு | 50 கிராம் |
| 40. | பூதசுரன்பட்டை | 50 கிராம் |
| 41. | கொண்டோசினை | 50 கிராம் |
| 42. | மிளகு | 50 கிராம் |
| 43. | பூலாங்கிழங்கு | 50 கிராம் |
| 44 | பாலகுருட்டை பச்சை | 50 கிராம் |
| 45. | சிப்பி நாதனம் | 50 கிராம் |
| 46. | கற்பூர சாபாத்நி | 50 கிராம் |
| 47. | ஆனை முளி | 50 கிராம் |
| 48. | நீர்க்கண்டி | 50 கிராம் |
| 49. | கடுக்கு வாய்ப்பட்டை | 50 கிராம் |
| 50. | வால் மிளகு | 50 கிராம் |
| 51. | கடுக்காய் | 50 கிராம் |
| 52. | தான்றிக்காய் | 50 கிராம் |
| 53. | நெல்லிப்பருப்பு | 50 கிராம் |
| 54. | மோச்சக்காய் | 50 கிராம் |
| 55. | கொத்தமல்லி | 50 கிராம் |
| 56. | வாய் விளங்கம் | 50 கிராம் |
| 57. | ஓமம் | 50 கிராம் |
| 58. | கோம பாக்கு | 50 கிராம் |
| 59. | குருசாணி ஓமம் | 50 கிராம் |
| 60. | பித்த ரோகணி | 50 கிராம் |
| 61. | கஸ்தூரி | 50 கிராம் |
| 62. | குங்குமம் | 50 கிராம் |
| 63. | கோரோசனை | 50 கிராம் |
| 64. | பச்சை கற்பூரம் | 50 கிராம் |
| 65. | புனுகு பச்சை | 50 கிராம் |
| 66. | புனுகு சடம் | 50 கிராம் |
| 67, | ஜவ்வாது | 50 கிராம் |
| 68. | இளநீர் | $1\frac{1}{2}$ லிட்டர் |
| 69. | மாலாக்காய் | 50 கிராம் |
| 70. | அகில் பட்டை | 50 கிராம் |
| 71. | காட்டு மருந்து | 50 கிராம் |
| 72. | சதா வேர் | 50 கிராம் |
| 73. | நன்னாரி வேர் | 50 கிராம் |
| 74. | பொன்னாங்கண்ணி | 50 கிராம் |
| 85. | கோரைக்கிழங்கு | 50 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 76. | வில்வ வேர் | 50 | கிராம் |
| 77. | சீந்திக் கொடி | 50 | கிராம் |
| 78. | விலாமிச்ச வேர் | 50 | கிராம் |
| 79. | வெட்டி வேர் | 50 | கிராம் |
| 80. | தாமரை வளையம் | 50 | கிராம் |
| 81. | அல்லிக்கிழங்கு | 50 | கிராம் |
| 82. | சித்தாமுட்டி வேர் | 50 | கிராம் |
| 83. | பேராமுட்டி வேர் | 50 | கிராம் |
| 84. | சிறு கீரை வேர் | 50 | கிராம் |
| 85. | கரிப்பான் வேர் | 50 | கிராம் |
| 86. | வல்லாரை வேர் இலை | 50 | கிராம் |
| 87, | காத்தொட்டியிலை | 50 | கிராம் |
| 88. | நீர்வள்ளிக்கிழங்கு | 50 | கிராம் |
| 89. | நிலைப்பனைக்கிழங்கு | 50 | கிராம் |
| 90. | அமுக்கிரான் கிழங்கு | 50 | கிராம் |
| 91. | வேங்கை மரத்தின்வயிரம் | 50 | கிராம் |
| 92. | வாகை வைரம் | 50 | கிராம் |
| 93. | தாளை விழுது | 50 | கிராம் |
| 94. | சீரான் | 50 | கிராம் |
| 95. | பழம்பாசி | 50 | கிராம் |
| 96. | காரை | 50 | கிராம் |
| 97. | மயிர் மாணிக்கம் | 50 | கிராம் |
| 98. | சவரிக் கொத்து | 50 | கிராம் |
| 99. | தலைச் சுருளி வேர் | 50 | கிராம் |
| 100. | வேருகாங் கிழங்கு | 50 | கிராம் |
| 101. | தூதுவளை வேர் | 50 | கிராம் |
| 102. | கஞ்சாச் செடி | 50 | கிராம் |
| 103. | கோரை முள்ளி வேர் | 50 | கிராம் |
| 104. | செந்தொட்டி வேர் | 50 | கிராம் |
| 105. | மருதாணிப்பூ | 50 | கிராம் |
| 106, | முடக்கொத்தான் இலைச்சாறு | 100 | மில்லி |
| 107. | கிலுகிலுப்பை செடிச்சாறு | 100 | மில்லி |
| 108. | பொன் முசுட்டை வேர் | 50 | கிராம் |
| 109. | பற்படாகம் | 50 | கிராம் |
| 110. | சிறுபினை வேர் | 50 | கிராம் |
| 111. | விஷ்ணு சுரண்டி சமூலம் | 50 | கிராம் |
| 112. | சரக் கொன்றை வேர் | 50 | கிராம் |
| 113. | நிலைக்கு மின் வேர் | 50 | கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 114. | நாயுருவி வேர் | 50 | கிராம் |
| 115. | கொடிவேலி வேர் | 50 | கிராம் |
| 116. | சிறுவதலை வேர் | 50 | கிராம் |
| 117 | பாலக் குறண்டி வேர் | 50 | கிராம் |
| 118. | ஆடாதோடா சார் | 250 | மில்லி |
| 119. | கற்பூரவள்ளி சார் | 600 | மில்லி |
| 120. | நொச்சியிலைசார் | 200 | மில்லி |
| 121. | பசும்பால் | 1½ | லிட்டர் |
| 122. | துளசி வேர் | 500 | மில்லி |
| 123. | நல்லெண்ணெய் | 1½ | லிட்டர் |

மேற்கூறிய அனைத்து வகைகளையும் 50 கிராம் எடை வீதம் எடுத்துக்கொண்டு கடைச் சரக்குகளையெல்லாம் பசும் பாலில் அரைத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி சாறு மற்றும் எண்ணெய் வகைகளை எல்லாம் நன்கு சலந்து அடுப்பில் வைத்து காய்ச்சி எண்ணெய் பதம் வந்தவுடன் இறக்கி ஆறவைத்துச் சுத்தமான பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

ஒரு நாளைக்கு 125 மில்லி கிராம் வீதம் (ஒரு வேளைக்கு மட்டும்) 48 நாட்கள் சாப்பிடவும். இந்த எண்ணெயை மாதம் இரு முறை தலைக்குத்தேய்த்து அரப்புத் தூள் போட்டு நன்கு முழுகவும்.

**தீரும் வியாதிகள் :**

பிரமேகம், நீரிழிவு, நீர்ச்சிறுப்பு, பிரமியம், கிரந்தி, பித்தமயக்கம், அஸ்தி வெட்டை, அஸ்தி ஜுரம், குஷ்ட்டம், கண் எரிவு, கண் புகைச்சல் போன்றவை தீரும்.

# மேக சந்தனுதி தைலம்

## சுவடி மருந்து முறை: 36

பறங்கி பட்டை, சித்தரத்தை, பேரரத்தை கல் நாற்,
கலமதம் கூகை நீர், சடாமாஞ்சி, விளாவரிசி, மூங்கி
லரிசி செவ்விக் கோடி கொத்தமல்லி, நற்சீரகம்,
தாறிசை பத்திரி, ஆனை திப்பிலி, அதிமதுரம்,
கோஷ்ட்டம், கிரும்பு, குருசாணி ஓமம், அதிவிடையம்,
சிறுனுகப்பூ சிப்பினுகணம், மரமஞ்சள், கொண்டிடோசினை
கினிங்கு பூலாம் கிளங்கு, வில்வேர் பூஞ்சாந்துப் பட்டை
கினியூர பட்டை, வங்கன் கிளங்கு, வில்வவேர் பசபசை
கஸ்தூரி மஞ்சள், வால் மிளகு, கடுகு ரேகணி
கடுக்காய், தாணிக்காய், நெல்லிப் பருப்பு, மனெி
சக்காய், வசம்பு, இலவங்கப்பட்டை, எலவங்க
பத்திரி, இந்த மருந்தெல்லாம் வகை ஒண்ணுக்கு
களிஞ்சி ஒன்று எதிர் வேங்கை பட்டை செம்மறு தோணி,
செம்பனுகதி வயிரம் காரைஇ மறுக்காரை, பெருங்
குமிழ் பெருவானுக பனுதி வயிரம் காரை, மறுக்காரை
பெருங்குமிழ் பெருவானுக பொன்முசுட்டை, வெள்ளருகு
செந்தோட்டி பரப்படாகம், கருங்காலி, முசுரகுரண்டி
தூதுவளை வேர் நன்னுரி வேர், வில்வ வேர் அமுக்கிலா
வேர், சிறு கீரை வேர் கிமுவைப் பட்டை, தலைசுருளி
சாக் கோன்னரவேர், நீர்வள்ளி கிழங்கு, நிலைப்பனங்
கிழங்கு யெண்ணிண படிக பால் படிஉ, இழநீர் படிஉ....
சித்தா, முட்டவோஸ்ய போர் முட்டி போன் ங நன்னாரி
வேர், ங வில்லை வேர், தூது வளை வேர், செந்
தொட்டி வோங்க, வால்குரண்டி வோஸ் ஙக நீறுக்கு
மிளலை சித்திக்கொடி, ங ஆடா தொடை ங, மண

முண்ணை சேர் ஙக, முசுக் குண்டி வேர் ஙக மருதானிவேர் ஙக கோரை கிழங்கு முசுமுசுக்கை, பொன்னாங்கன்னி, காத் தோட்டியிலை சீரர் செங்கழுநீர், வெத்திலை நெல்லிக்காய், கரிப்பான், ஆவகை சாறு படிக பசுவின் பால் படிஉ எண்ணை படிக மிழகு இ, கொத்தமல்லி ங வாய் விளங்கம், தாளிச சத்திரிஇ வீடக, பூலாங் கிழங்கு வீஉரு, பூஞ்சாந்து பட்டை வீஉஎ, கிளியூரப் பட்டை வங்காளப் பச்சை வீஉயரு, கஸ்தூரி மஞ்சள் வீடரு. சித்தரத்தை வீடரு சீரகம், சன்ன இலவங்கப் பட்டை வீடக கொண்டோசினை கிளங்கு வீடங, கிரும்பு, செங்கோட்டை எஉய சுருத்த எள்ளுபடிவகவ ஓமபங் உ வெள் வெங்காயம், சித்திர மூலப் பொடிவ, விவனு வேம்பு, பொடிபடிவ விளாம்பட்டை, பொடி படிலு, கரும்பு கட்டி இந்த மருந் தெல்லாம் உரலில் போட்டு செங் கோட்டை முகிளி தண்ணீர் போட்டு கூட போட்டு கூட போட்டு இடித்து புண்ணுக்குப் போலே வைத்துக் கொண்டு நாற்பது நாள் எரு சாணி காய எலு சாப்பிட இதுக்கு தீரும் வியாதி காந்தி குடம் பதகிரி தினவு வங்கு சகலமும் தீரும்,

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| 1 | பரங்கிப்பட்டை | 25 கிராம் |
| 2. | சித்தரத்தை | 25 கிராம் |
| 3. | பேரரத்தை | 25 கிராம் |
| 4. | கல்னுர் | 25 கிராம் |
| 5. | கபமதம் | 25 கிராம் |
| 6. | கூகை நீர் | 25 கிராம் |
| 7. | சடா மாஞ்சில் | 25 கிராம் |
| 8. | வாலுளுவை அரிசி | 25 கிராம் |
| 9. | மூங்கி அரிசி | 25 கிராம் |
| 10. | செவ்வள்ளிக்கொடி | 25 கிராம் |
| 11. | கொத்தமல்லி | 25 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 12. | நற்சீரகம் | 25 | கிராம் |
| 13. | தாளிசபத்திரி | 25 | கிராம் |
| 14. | ஆனை திப்பிலி | 25 | கிராம் |
| 15. | அதிமதுரம் | 25 | கிராம் |
| 16. | கோஷ்டம | 25 | கிராம் |
| 17. | கிராம்பு | 25 | கிராம் |
| 18. | குருசாணி ஓமம் | 25 | கிராம் |
| 19. | அதிவிடயம் | 25 | கிராம் |
| 20 | சிறு நாகப்பூ | 25 | கிராம் |
| 21. | சிப்பிஞகனம் | 25 | கிராம் |
| 22 | மர மஞ்சள் | 25 | கிராம் |
| 23. | நொண்டி டோசினைகிழங்கு | 25 | கிராம் |
| 24. | பூலான் கிழங்கு | 25 | கிராம் |
| 25. | வில்வம் வேர் | 25 | கிராம் |
| 26. | பூஞ்சாத்து பட்டை | 25 | கிராம் |
| 27. | கிளியூர பட்டை | 25 | கிராம் |
| 28. | வங்கன் பசுபசை | 25 | கிராம் |
| 29. | கஸ்தூரி மஞ்சள் | 25 | கிராம் |
| 30. | வால்மிளகு | 25 | கிராம் |
| 31. | கடுகு ரோகினி | 25 | கிராம் |
| 32. | கடுக்காய் | 25 | கிராம் |
| 33. | தான்றிக்காய் | 25 | கிராம் |
| 34. | நெல்லிப்பருப்பு | 25 | கிராம் |
| 35. | மாசிக்காய் | 25 | கிராம் |
| 36. | வசம்பு | 25 | கிராம் |
| 37. | இலவங்கப்பட்டை | 25 | கிராம் |
| 38. | இலவங்க பத்திரி | 25 | கிராம் |
| 39. | கழிஞ்சிக்காய் | 25 | கிராம் |
| 40. | வேங்கைப்பட்டை | 25 | கிராம் |
| 41. | செம்மருதோனி | 25 | கிராம் |
| 42. | செம்பனாகதி வயிரம் | 25 | கிராம் |
| 43. | காரை | 25 | கிராம் |
| 44. | மறுக்காரை | 25 | கிராம் |
| 45. | பெருங்குமிழ் | 25 | கிராம் |
| 46. | பெருவானாகதி | 25 | கிராம் |
| 47. | பொன்முசுட்டை | 25 | கிராம் |
| 48. | வெள்ளெருக்கு | 25 | கிராம் |
| 49. | செந்தொட்டி | 25 | கிராம் |
| 50. | பற்படாகம் | 25 | கிராம் |

| | | |
|---|---|---|
| 51. | கருங்காலி | 25 கிராம் |
| 52. | முகரகுரன்பு | 25 கிராம் |
| 53. | தூதுவளை வேர் | 25 கிராம் |
| 54. | நன்னாரி வேர் | 25 கிராம் |
| 55. | வில்வவேர் | 25 கிராம் |
| 56. | அமுக்கிராவேர் | 25 கிராம் |
| 57. | சிறுகுளவேர் | 25 கிராம் |
| 58. | கிமுவை பட்டை | 25 கிராம் |
| 59. | தலைசுருளி | 25 கிராம் |
| 60. | சரக்கொன்னைவேர் | 25 கிராம் |
| 61. | நீர்வள்ளிக்கிழங்கு | 25 கிராம் |
| 62. | நிலப்பனைக் கிழங்கு | 25 கிராம் |
| 63. | நல்லெண்ணெய் | 1 லிட்டர் |
| 64. | பசும்பால் | 1 லிட்டர் |
| 65. | இளநீர் | 2 லிட்டர் |
| 66. | சித்தாமுட்டிவேர் | 25 கிராம் |
| 67. | பேராமுட்டி வேர் | 25 கிராம் |
| 68, | வங்குரண்டி வேர் | 25 கிராம் |
| 69, | விஷ்ணுகரண்டி வேர் | 25 கிராம் |
| 70. | நீறுக்கு | 25 கிராம் |
| 71. | ட ளகு | 25 கிராம் |
| 72. | சீந்திக்கொடி | 25 கிராம் |
| 73. | ஆடாதொடா வேர் | 25 கிராம் |
| 74. | மருதான்றி வேர் | 25 கிராம் |
| 75. | கோரைக்கிழங்கு | 25 கிராம் |
| 76. | முசுமுசுக்கை | 35 கிராம் |
| 77. | பொன்னாங்கண்ணி | 25 கிராம் |
| 78. | காத்தொட்டியிலை | 25 கிராம் |
| 79. | செங்கழுநீர்க்கிழங்கு | 25 கிராம் |
| 80. | வெற்றிலைச்சாறு | 25 மில்லி |
| 81. | நெல்லிக்காய்ச்சாறு | 25 மில்லி |
| 82, | கரிப்பான்சாறு | 25 மில்லி |
| 83. | ஆவரைச்சாறு | 25 மில்லி |
| 84. | கொத்தமல்லி | 25 கிராம் |
| 85 | வாய்விளங்கம் | 25 கிராம் |
| 86. | தாளிசபத்திரி | 25 கிராம் |
| 87. | பூலாங்கிழங்கு | 25 கிராம் |
| 88. | பூச்சாத்துப்பட்டை | 25 கிராம் |
| 89. | கிளியூரப்பட்டை | 25 கிராம் |

| | | |
|---|---|---|
| 90, வங்காளபச்சை | 25 | கிராம் |
| 91, கஸ்தூரி மஞ்சள் | 25 | கிராம் |
| 92. சித்தரத்தை | 25 | கிராம் |
| 93. சீரகம் | 25 | கிராம் |
| 94. சன்னலவங்கப்பட்டை | 25 | கிராம் |
| 95. கொண்டோசினைக்கிழங்கு | 25 | கிராம் |
| 96. கிராம்பு | 25 | கிராம் |
| 97. சேங்கொட்டை சுத்தி செய்தது | 20 | கிராம் |
| 98. ஓமம் | 25 | கிராம் |
| 99 பூண்டு | 25 | கிராம் |
| 100. சித்திரமூலம் தூள் | 25 | கிராம் |
| 101. சிவன் வேம்புத்தூள் | 25 | கிராம் |
| 102. விளாம்பட்டைத்தூள் | 25 | கிராம் |

மேற்கூறியவைகள் அனைத்தையும் கல் உரலில் போட்டு இடித்து ஒரு பானையில் போட்டுச்சாறு வகைகள் மற்றும் எண்ணெய் இவைகளையும் சேர்த்து ஊற்றி அடுப்பில் வைத்து மெழுகு பதம்வரும்வரை நன்கு காய்ச்சி ஆறிய பின்பு வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**சாப்பிடும் அளவு :**

ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 165 மில்லி கிராம் எடையளவு உட்கொள்ளவும்.

**காலம் :**

48 நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம், புளி, உப்பு, கரப்பான் பண்டங்கள் நீக்கவும்.

# சகல நீர்க்கடுப்பு நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 37

காரி பூங்க, வெடி உப்பு வே, இந்துப்பு, பொரிகாரம்
ரசம், சீனாக்காரம் காரியத்தை உருக்கு தடா அடித்து
அந்த தகட்டை ஒரு சட்டியில் போட்டு, தக்க உகிர
பொது ரசத்தையும் கூடவிட்டு மற்ற மருந்தெல்லாம்
பொடி செய்து சட்டியில் போட்டு கருப்பு சட்டுவங்
கொண்டு
வருங்கவும். சிவந்து பற்பமாயிருக்கும், அந்த பற்பத்துக்கு
அனுபோல் சுண்ணாம்பு கல்லுக்குச் சட்டியில் ஊத்தி
அந்த
தண்ணீர் கறுத்த என் கடுகுகரண்டி கூடவிட்டு மத்திச்சு
அந்த பற்பத்தில் விடை போட்டு குடுக்க உரப்பு புளி
விரக்கலு
இந்தபடி மூன்று நாள் குடுக்க சகல நீர்க்கடுப்பும் தீரும்.

## விளக்கம் :

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | காறிமுள்ளிச்சாறு | 50 மில்லி |
| 2. | வெடியுப்பு | 15 கிராம் |
| 3. | இந்துப்பு | 15 கிராம் |
| 4. | பொரிகாரம் | 10 கிராம் |
| 5. | ரசம் | 10 கிராம் |
| 6. | சீனாக்காரம் | 15 கிராம் |
| 7. | சுத்திசெய்த காரீயம் | 15 கிராம் |

காரீயத்தை உருக்கி இலுப்ப எண்ணெயில் பத்துத் தடவை முறைப்படிச் சுத்தி செய்துகொண்டு அதனைத் தட்டையாகத் தட்டிக்கொண்டு ஒரு சட்டியில் போட்டு உருக்கும் சமயத்தில் ரசத்தையும் கூடவிட்டு மற்றமுதலில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்து வகைகளைச்சட்டியில்போட்டு கருப்பு சட்டுவத்தால் வறுக்க வேண்டும். இப்படி

வறுக்கும்போது சிகப்பு நிறமாக பஸ்பம் போல் வரும். இதனை எடுத்துக்கொண்டு சுண்ணாம்புத் தண்ணீரில் கொன்மை கறுத்த எள் எண்ணெய், கடுகு எண்ணெய் ஆகியவைகளுடன் மேற்படி பற்பத்தை 130 கிராம் எடை எடுத்து மத்திச்சுக் கொடுக்கவும்.

**பத்தியம் :**

புளி, உப்பு இவைகள் நீக்கவும்.

## இரண்டாவது முறை:

1. சீதேவி செங்கழுநீர் கிழங்கு
2. நற்சீரகம்
3. கிராம்பு
4. கோரோசனை
5. வெங்காயம்

இவைகளைச் சமன் எடை எடுத்து நன்றாக இடித்துப் பானையில் போட்டு 1 லிட்டர் அளவுக்குத் தண்ணீர் விட்டு இதை 100 மில்லி லிட்டர் அளவு வரும் வரை நன்றாகக் காய்ச்சி இதில் நல்லெண்ணெய் ஒரு லிட்டர் சேர்த்து மீண்டும் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்ளவும்.

**சாப்பிடும் அளவு :**

தினம் ஒரு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் பத்து நாட்கள் தொடர்ந்து சாப்பிடவும.

## மூன்றாவது முறை :

1. நெல்லிப்பருப்பு
2. நற்சீரகம்
3. புளியவிரை தோல்
4. சுத்தமான சந்தனப்பொடி
5. ஏலம்
6. கிராம்பு
7. அவுரியரிசி

இவைகளை வகைக்கு 25 கிராம் எடை வீதம் எடுத்துக்கொண்டு நன்கு அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு எடுத்துக்கொண்டு எருமை மோரில் கரைத்துச் சாப்பிட்டால் சகல நீர்க்கடுப்பும் தீரும்.

## நீரடைப்புக்கு மருந்து

1. வங்க வெள்ளை கூட்டி வெந்நீர் விட்டு அரைத்து மூன்று சங்கு அளவிற்கு உட்கொள்ளவும். இதனை வெண்ணெயில் கலந்து சாப்பிடவும்.

2. வெந்தயத்தை 10 கிராம் எடைக்கு எடுத்து சுமார் 12 மணி நேரம் ஊறவைத்து நன்கு அரைத்து மோர் கலந்து உட்கொண்டால் நீரடைப்பு, சதை வளர்ச்சி நீங்கும்.

## அஸ்தி சுரம் நிவர்த்திக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 38

ஊமதங்காயில் விரை யெடுத்து போட்டு அதுக்குள்ளே இந்த பூவை முகிள் கொண்டு மூடி சிலைமன் செய்து புடம் போட்டு அந்த உப்பை எடுத்து சாதிக்காயூ வகவாசி யூ கூட்டிப் பொடி செய்து வெறு கடி பிரமான கொள்ளு சந்தி சுரம் தீரும்.

**விளக்கம்:**

ஊமத்தங்காயில் உள்ளிருக்கும் விதைகளை எடுத்து விட்டு அதன் உள் மேற்படி செடியின் மொட்டு பூவையும் போட்டு சிலைமண் செய்து புடம்போட்டு அந்த உப்பை எடுத்து இத்துடன் சாதிக்காய் வாலுவையரிசி சூரணம் செய்து கொள்ளவும்.

**சாப்பிடும் அளவு:**

தினம் மூன்று வேளை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும்.

**பத்தியம்:**

கஞ்சிச்சாதம் மட்டும் கொடுக்கவும்.

## அஸ்தி சுரத்தின் குறி குணம் :

தாகம் அதிகம் காணும். தேகம் வெளுக்கும், குளிர்ச்சி யாயிருக்கும். ஒவ்வொரு நேரம் சுரம் அதிகமாகிக் காய்ந்து விட்டு விடும்.

## இரண்டாவது மருந்து முறை :

| | | |
|---|---|---|
| 1. | பேய்ப்புடல் | 35 கிராம் |
| 2. | முத்தக்காசு | 35 கிராம் |
| 3. | பற்பாடகம் | 35 கிராம் |
| 4. | நீலாவரைசமூலம் | 35 கிராம் |
| 5. | கடுகுரோகிணி | 35 கிராம் |
| 6. | சுக்கு | 35 கிராம் |
| 7. | பேய்பாச்சோற்றுக்கற்றாலை | 35 கிராம் |

இவைகளை அளவுப்படி எடுத்துக்கொண்டு நன்றாக இடித்து ஒரு பானையில் போட்டு இரண்டு லிட்டர் அளவு தண்ணீர் விட்டு நன்றாகக் காய்ச்சி 300 மில்லி வரும்வரை சுண்டக்காய்ச்சி இறக்கி வடிகட்டிக்கொண்டு தினம் ஒரு வேளைக்கு 50மில்லிவீதம் ஆறு நாட்களுக்கு கொடுக்கவும்.

**பத்தியம் :**

இச்சாபத்தியம்.

# சகல கணைக்கும் எண்ணெய் மருந்து

## சுவடி மருந்து முறை : 39

**சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தாணிக்காய்**
**நெல்லி பருப்பு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிபத்திரி**
**மாடசகதாம், அதிவிடையம், கொத்தமல்லி**
**வாய்விளங்கம், சித்தரத்தை, சிறுதேக்கு, செவியூ**

அதிமதுரம், யேலம்பூ, கிராம்பு. விலாமிச்சவேர் பூலாங்கிழங்கு, கருஞ்சீரகம், நற்சீரகம் இது வெங்காயம் இந்த மருந்தெல்லாம் வீங

விலக்கெண்ணெயில்

இடித்து எண்ணெயிப்போட்டு, நீர் வெங்காயம் அரைத்துப் போட்டு எண்ணெயை வடித்துக்கொள்ளு. பெரிய ஆழாக்கு மாகாணிபடிகொடுக்க சின்ன குளந்தையளுக்கு அரை மாகாணிபடி குடிக்கசுகமும் கணையும் தீரும். திருகு கள்ளி சாறுபடி மருந்து புங்கஇலை, பனஇலை, இந்த மூன்று யிக்கிலெடுத்துப்போட்டுக்கொள்ளு சிலை இலை முடக்கோத்தான் இந்த அஞ்சும் யிட்டு சாறுபடினு கறுத்த எள்ளுண்ணி சாறு கூடவிட்டு கலந்துகுடி தீரும். உப்புளி கூடிக்க கொள்ளு கோஷ்ட்டம் வசம்பு. பொரிகாரம், புனுகு இந்த மருந்து நாலு சூரிசத்தில் அரைத்துப்பூரை.

**விளக்கம் :**

| | | |
|---|---|---|
| 1. | சுக்கு | 25 கிராம் |
| 2. | திப்பிலி | 25 கிராம் |
| 3. | மிளகு | 25 கிராம் |
| 4. | கடுக்காய் | 25 கிராம் |
| 5. | தாணிக்காய் | 25 கிராம் |
| 6. | நெல்லிப்பருப்பு | 25 கிராம் |
| 7. | சிறுநாகப்பூ | 25 கிராம் |
| 8. | சாதிக்காய் | 25 கிராம் |
| 9. | சாதிபத்திரி | 25 கிராம் |
| 10. | மாசிக்காய் | 25 கிராம் |
| 11. | அதிவிடயம் | 25 கிராம் |
| 12. | கொத்தமல்லி | 25 கிராம் |
| 13. | வாய்விளங்கம் | 25 கிராம் |
| 14. | சித்தரத்தை | 25 கிராம் |
| 15. | தேக்கு | 25 கிராம் |
| 16. | செவியூ | 25 கிராம் |

| | | |
|---|---|---|
| 17 | அதிமதுரம் | 25 கிராம் |
| 18. | ஏலம் | 25 கிராம் |
| 19. | கிராம்பு | 25 கிராம் |
| 20. | விலாமிச்சவேர் | 25 கிராம் |
| 21. | பூலாங்கிழங்கு | 25 கிராம் |
| 22. | கருஞ்சீரகம் | 25 கிராம் |
| 23 | நற்சீரகம் | 25 கிராம் |
| 24. | பூண்டு | 25 கிராம் |

மேற்படி மருந்து வகைகளைச் சட்டியில் போட்டு லேசாக வறுத்து இடித்து இத்துடன் வெங்காயத்தையும் சேர்த்து இடித்து விளக்கெண்ணெயில் போட்டு எண்ணெய் பதம் வரும் வரை நன்றாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

வியாதிகளுக்கு ஏற்றபடியும் வயதுக்குத் தகுந்தாற் போல் இந்த எண்ணெயை உட்கொள்ளவும்.

## சுரம், கணைக்கு :

திருகு கள்ளிச்சாறு, புங்க இலை, பபஇலை இவைகளுடன், திலைஇலை, முடக்கொத்தான் இலை இந்த ஐந்து வகைகளையும் இடித்துச் சாறு எடுத்துக்கொண்டு நல்லெண்ணெயுடன் கலந்து காய்ச்சி வடிகட்டிக் கொடுத்தால் கணைச்சுரம் நீங்கும்.

**குறிப்பு :**

கோஷ்ட்டம், வசம்பு, பொரிகாரம், புனுகு இவைகளை சமன் எடை எடுத்துக்கொண்டு நான்குதடவை உரைத்துக் கொடுக்கலாம்.

## கணை வகையின் விபரம்:

மாந்த முதிர்ந்து இந்தக்கணை நோய் வருகிறது இதில் பதினெட்டு வகை உண்டு. வாதகணை, பித்தகணை சேஷ்மகணை, மாந்தகணை, நீர்க்கணை, சூலைக்கணை பிரளிக்கணை, ஊதுகணை, கழிகணை, மகாகணை, வரட்கணை, கொதிப்புகணை, பிறகணை, வீக்ககணை, ஆமக்கணை, தேரைக்கணை, முக்கணை, மூலக்கணை, போர்கணை, இரத்தகணை, விஷமாந்தகணை, ஊதுமாந்த கணை, அந்தக்கனை, மந்தாரகணை, எரிகணை, மற்றக் கணை வியாதிகள் சிறு குழந்தைகளுக்கு வரும். இப்படிப் பட்ட கணை வியாதிகளுக்கு மேற்சொன்ன மருந்தைக் கொடுக்கலாம்.

## தீராத புண்ணுக்கு உள்ளுக்கும் மேல் பூசுவதற்கும் மருந்து

### சுவடி மருந்து முறை: 40

நல்லதும்பை, பெருந்தும்பை, அவுரி இலை, கொஞ்சி இலை, மிளகு, வெள்வெங்காயம், பெருங்காயம், வசம்பு முருங்கைப்பட்டை இந்த மருந்தெல்லாம் வரைந்து நூச்சிலைச் சாறு பிளிந்து கொண்டு, அதில் கலக்கி உள்ளுக்கு கொடுக்க வியாதி தீரும். துத்தம், துரிசு, ரசம், வெள்ளை குங்கலியம், வெற்றிலைச்சாறு, பசுவின் வெண்ணை ஆலம் பஞ்சருகு பாசாண்மை செங்கீரைத்தண்டு, சுட்டு நத்தச்சாம்பல் ரணி பங்கும் கெவுரி சாறு ஒரு பங்கு எடுத்துக்கொண்டு எருமை வெண்ணெயில் வரைத்துக்கொண்டு சகல புண்ணுக்கு போடு.

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | நல்ல தும்பை | 50 கிராம் |
| 2. | பெருந்தும்பை | 50 கிராம் |
| 3. | அவுரி இலை | 50 கிராம் |
| 4. | கொழிஞ்சி இலை | 50 கிராம் |
| 5. | மிளகு | 25 கிராம் |
| 6. | பூண்டு | 25 கிராம் |
| 7. | பெருங்காயம் | 25 கிராம் |
| 8. | வசம்பு | 25 கிராம் |
| 9. | முருங்கப்பட்டை | 50 கிராம் |

இவைகளைச் சமன் எடைக்கு (மேற்குறிப்பிட்டுள்ளபடி) எடுத்துக்கொண்டு பூச்சியிலைச் சாற்றைவிட்டு அரைத்து நன்கு கலக்கி வைத்துக்கொள்ளவும்.

சாப்பிடும் அளவு :

தினம் 10 மில்லி கிராம் வீதம் ஒரு வேளை அளவு தொடர்ந்து ஏழு நாட்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட்டு வந்தால் தீராத புண்கள் யாவும் தீரும்.

## மேல் பூசும் மருந்து :

துத்தம், துரிசு, ரசம், வெள்ளைக் குங்கலியம் பசுவின் வெண்ணெய், ஆலம் பழுப்பு சருகு (சுட்ட சாம்புல்) பாசானம், செங்கீரைத்தண்டு சுட்ட சாம்பல் கெளரி சமன் எடை வீதம் எடுத்துக்கொண்டு இவற்றைச் செங்கீரைத் தண்டுச்சாறுவிட்டு அரைத்து எருமை வெண்ணெயில் குழப்பி வைத்துக்கொண்டு தினம் புண்களுக்கு மேல்பூசி வரவும்.

குறிப்பு : இந்த மருந்தை உள்ளுக்குச் சாப்பிடக்கூடாது.

# பேதியாவதற்கு தொப்புளில் தடவும் மருந்து

## சுவடி மருந்து முறை: 41

துத்தம் தீயில் வெதுப்பி திரவத்தின் உடனே
எடுத்துக்கொண்டு தீக்கின் சுண்ணாம்பு ரண்டு
விறுகனிடை கூட்டிக்கொண்டு சலத்தில் போட்டு
விளக்கெண்ணை விட்டு காலிசெம்பு கொண்டு
ஒரு சாமம் தேச்சு சிமிலாகும் பாணியில்
குலடைத்து கொள்ள ரசம் வீ க, கெந்தலை
வீ உ நெல்ல பருப்பு வீ ங, வெப்பாலை அரிசி
வீ ற வெங்காரம் வீ ரு, ஆமணக்கு முது வீசா,
நெரவானுவிய கார்போக அரிசி வீ எ புரசன்
விரை, வீ அ கடுக்காய்வியற சிவதைவேர்
இதுவெல்லாம் கொடி கலௌளி, பால்விட்டு
மூன்றுவெளி அரைத்து முத்த தேங்காய் வைய்த்து
குடிமி கொண்டு மூடி மூன்றுனுள் ளெடுத்து சட்டியில்
உள்ளி... வைய்த்து வெய்யிலில் வைக்க தயிலம்,
மிரங்னு அதை சிமிழில் லடைத்துக்கொண்டு அரை
பணவிடை தயிலம் கொப்பளித்து தடவி நன்றாய்
பேதியாகும்.

**விளக்கம் :**

அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தனது உடல்நிலை நலனுக்காக எண்ணெய் தேய்த்துக்கொள்வதற்கும், பேதி போவதற்கு மருந்து சாப்பிடும் பழக்கத்தைப்பற்றி பழங் காலத்தில் இருந்தவர்கள் ஒரு பழக்க வழக்கங்களில் ஒன்றாக இந்த பழக்கத்தை வைத்திருந்தார்கள். இருந்த போதிலும் பேதிக்கு மருந்துகள் பல வகைகள் உண்டு. அதில் மேலே குறிப்பிட்டுள்ள மருந்துகளைத் தயார்செய்து தொப்புளில் தடவிக்கொண்டால் பேதியாகும் என்பதை அக்காலத்துச் சித்தர்கள் அனுபவித்து இதனைப்பற்றி சுவடியில் எழுதி இருக்கிறார்கள்.

ஏன் இப்படியொரு முறைகளைத் தயார்செய்து இருக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் ஆராயும்போது, உள்ளுக்கு மருந்தைச் சாப்பிட்டால் சற்று பேதி அதிக மாகும் என்றும் மருந்தை உட்கொள்ளுவதற்கும் கஷ்ட மாகவும் இருக்கும். இதனைத்தவிர வேறு தொந்தரவுகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதை அவர்களின் மனதில் கொண்டு இந்த மருந்தினை வெளி உபயோகத்தின் மூலமாகத் தடவிக்கொண்டால் கட்டுப்பாட்டுடன் பேதி போவதுடன் எந்தவித தொந்தரவுகளும் இருக்காது என்று அக்காலத்துச்சித்தர்கள் மருந்து இருந்த வகைகளைப் பற்றிக் கீழே விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளது.

**மருந்து செய்யும் முறை:**

தேவையான அளவிற்குத் துத்தத்தை எடுத்து அனலில் காண்பித்துச்சற்று வெதுப்பினால் அதிலிருந்து திரவம் மாதிரி வரும். இதனை உடனே எடுத்துக் கொண்டு இத்துடன் சுண்ணாம்பு 10கிராம்சேர்த்துக் கலந்துகொண்டு கொஞ்சம் தண்ணீர், விளக்கெண்ணையை விட்டுச் சேர்த்து இதனையெல்லாம் ஈயச்சொம்பில் போட்டு மூன்று மணி நேரம் சொம்பில் படுமாறு குழப்பிக் கொண்டிருக்கும் போதே களிம்பு மாதிரி வரும். இதனைத் தீராத புண் களுக்குப் போட்டால் புண்கள் ஆறும். மேலும் இந்தக் களிம்புடன் ரசம், கந்தகம், நெல்லிப்பருப்பு, வெட்பாறை யரிசி, வெங்காரம், ஆமணக்கு முத்து, நீர்வளம் பருப்பு, கார்போக அரிசியின் விரை, கடுக்காய், சிவதைவேர் இவைகளை 50 கிராம் எடைவிகிதப்படி எடுத்துக் கல்வத்தில் போட்டுக் கொடிக்கள்ளிப்பால்விட்டுமூன்றுநாள் அரைத்து முற்றின தேங்காயின் உள்வைத்து தேங்காயின் குடுமியைக்கொண்டு மேற்படி மருந்து தேங்காயை மூடி, மூன்றாவது நாள் எடுத்து அப்படியே ஒருசட்டியில்போட்டு வைத்து வெயிலில் வைக்கத் தயிலம் மாதிரி இறங்கும். இதனைச்சிமிழியில் அடைத்து வைத்துக்கொண்டு 250 மில்லி கிராம் எடை எடுத்து தொப்புளில் தடவிகொண்டால் சற்று நேரத்தில் பேதியாகும். இது கைகண்ட மருந்தாகும்.

மேலும் இந்த மருந்தை கொஞ்சம் எடுத்து மல்லிகைப்பூச் செண்டில் தடவிக்கொண்டு ஒரு தடவை முகர்ந்தால் ஒரு தடவை பேதியாகும், பத்து தடவை முகர்ந்தால் பத்து தடவை பேதியாகும். ஆனால் இனிப் பேதி போக வேண்டாம் என்றால் குளித்துவிட்டு மோர் சாதம் சாப்பிட்டால் உடனே பேதி நின்றுவிடும். குளிக்கும்போது அருப்பு காரை வேரை அரைத்து தேச்சு முழுகினால் அனைத்துப் பீனிசம் தீரும்.

## குளிர் சுரம், ஈனை இருமல், உள்மாந்தம் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து

### சுவடி மருந்து முறை: 42

**யேருக்கிலே பருப்பு வாட்டி சங்கிலி பிளிந்து கொண்டு ரண்டு நாசியிலும், எலி மருந்து ரெண்டு பங்கு சாதிலிங்கம் ஒரு பங்கு யெருமை மோர் விட்டரைக்க வென்சுரத்து முலைபாலில் கொடுக்க குளிர் சுரத்துக்கு இஞ்சிசாறு விடு எலும்புருக்கி இளை இருமல் தார்ரொசம் உளமாந்தை சாமாந்தை சகலமும் தீரும் இது கைகண்டது.**

### விளக்கம் :

எருக்கம் பழுப்பு இலையை அனலில் வாட்டி, ஒரு சங்கில் பிளிந்துக்கொண்டு பத்துச்சொட்டு வீதம் இரண்டு மூக்கில் போட்டால் பீனிசம் நிவர்த்தியாகும்.

### வெண் சுரத்திற்கு :

2. சுத்தி செய்த சாதிலிங்கம் அரைக் கிராம், எலி மருந்து ஒரு கிராம் அளவுக்கு எடுத்துக்கொண்டு எருமை மோரில் அரைத்துக் கொடுத்தால் வெண்சுரம் நிவர்த்தியாகும். இப்படி மூன்று நாட்கள் கொடுக்கவும்.

மேற்படி 1-வது வகை மருந்தை முலைப்பாலில் அரைத்து மேல்சொன்ன அளவுப்படிக் கொடுத்தால்குளிர்ச் சுரம் நிவர்த்தியாகும்.

மேற்படி 2-வது வகை மருந்தை இஞ்சிச்சாற்றில் கலந்து கொடுத்தால் ஈளை இருமல், தார்காசம், உளமாந்தம், சாதாரண மாந்தம் இவைகள் அனைத்தும் தீரும்.

## மேகக்கணச்சூடு. மேக பீனிசம் இவைகளின் நிவர்த்திக்கு மருந்து.

**சுவடி மருந்து முறை : 43**

விளக்கெண்ணை ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி
அதிமதுரம், நற்சீரகம், இலவங்கப்பட்டை, மாசிக்காய்
இருவிளிங் இ, ஒரு எலுமிச்சங் காய் அளவு இவ்வளவு
தண்ணீர் விட்டரைத்து எண்ணையில் போட்டு வத்தில்
வடித்துக்கொள்ள கண்ட மருந்தெல்லாம் வகைக்கு
வீடக தெதருன் விரையில்லரைக்க கருப்பட்டி சீரக
தூள் மாற்றான் கொரேசனை குமரி வகுத்த முதும்
பெறற்ருன் வெண்ணெயில் போதக் கலந்தொட்டுறல்
கெரன் விரல் ஆருத் தெரியும் குப்பி பிரமேகம்
கணர்டு மேகப்பீனி சத்துக்கு நல்லெண்ணைக்கு மிளகுங்கு
முடித்து போட்டு தயலனை இலேச்சாறு யிடித்து வெதுப்பி
எண்ணெயில் விட்டு மூன்ருனுளுக்கு சூரிய அடம் வச்சு
நாலா நாளேடுத்து நாளு நாளைக்கு கொரு முறுகு
முறுகி வாறு சாம்பிருணி வீயரு மலக்காய் சந்தனம்
கட்டை வீயரு சாதிக்காய் வீடக சாதிபத்திரி இலவங்கப்
பட்டை சன்ன இலவங்கம் வீடக வால்மிளகு வீடக
அனுபானம் கரை தேனில் குடுக்க.

**விளக்கம் :**

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | விளக்கெண்ணெய் | 100 மில்லி |
| 2. | ஏலம் | 35 கிராம் |
| 3. | கிராம்பு | 35 கிராம் |
| 4. | சாதிக்காய் | 35 கிராம் |
| 5. | சாதிபத்திரி | 35 கிராம் |
| 6. | இலவங்கப்பட்டை | 35 கிராம் |
| 7. | மாசிக்காய் | 35 கிராம் |
| 8. | வெங்காயம் | 50 கிராம் |

இந்த மருந்து வகைகளை மேலே குறிப்பிட்டஅளவுப்படி எடுத்துக்கொண்டு தூள் செய்து கொண்டு பிறகு வெங்காயச்சாற்றினை விட்டு எலிமிச்சங்காயளவுக்கு அரைத்துக் கொண்டு எண்ணெயை சட்டியில் ஊற்றிக் காய்ச்சிக் கொண்டிருக்கும் சமயத்தில் அரைத்து வைத்திருக்கும் மருந்தினை இந்த எண்ணெயுடன்கலந்து காய்ச்சிகொண்டு தேற்றான்கொட்டை,கருப்பட்டி, சீரகத்தூள், கோரோசனை சோற்றுக்கற்றாலை சீரகத்தூள் இவைகள் அனைத்தையும் வெண்ணெயில் அரைத்து மேற்படி காச்சின எண்ணெயில் போட்டு காச்சி மேலே வடிகட்டி குறிப்பிட்ட அளவுப்படி சாப்பிட்டு வந்தால் மேற்சொன்ன வியாதிகள் தீரும்.

மிளகு 20 கிராம் எடைக்கு எடுத்து இடித்து ஒரு துணியில் போட்டு தூதுவளைச்சாறு 100மில்லி இத்துடன் சேர்த்து மூன்று நாளைக்குச் சூரிய புடம்போட்டு எடுத்துக் கொண்டு தலை முழுகி வந்தால் மேற்சொன்ன வியாதிகள் நிவர்த்தியாகும். இதனைத்தவிர,

| | | |
|---|---|---|
| 1. | சாம்பிராணி | 25 கிராம் |
| 2. | மலக்காய் | 25 கிராம் |
| 3. | சந்தனம் | 25 கிராம் |

4. சாதிக்காய் 25 கிராம்
5. சாதிபத்திரி 25 கிராம்
6. இலவங்க 'பட்டை 25 கிராம்
7. சின்ன இலவங்கப்பட்டை 25 கிராம்
8- வால்மிள கு 25 கிராம்

இவைகளையெல்லாம் சமன் எடைக்குளடுத்து இடித்துச் சூரணம் செய்துகொண்டு நாள் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு ஐந்துகிராம் எடை வீதம் அரை மண்டலம் (24 நாட்கள்) சாப்பிடவும்.

**அனுமானம் :**

சர்க்கரை தேன் கலந்து கொடுக்கவும்.

## நீரிழிவு நோயின் நிவர்த்திக்கு மருந்தும் அதன் குறிகுணமும்

### சுவடி மருந்து முறை: 44

மலரக்காய் சந்தனுடவபச்சை வேட்டு சந்தனுடவ
தேவதார்ய செஞ்சந்தனு ய, அகில் கட்டை ய
விலாமிச்சம் வேர் ய, வெடி வேர் ய, சுக்குனு
திப்பிலு, மிளகு லு, கொத்தமல்லி, வாய்விளங்கம்,
கடுக்காய், தாணிக்காய், நெல்லிப்பருப்பு ங, ஓமம் ய,
குருசாணி ஓமம், நச்சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை
சன்னி நாயலை ய, செவிநூ சா, சிறுதேக்கு, பேய்புடசா,
மஞ்சள் சா, மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள் ய, குறுவந்தம்
மஞ்சள் யவிளாவரிசி, வெப்பாலை அரிசி சா, சித்தரத்தை
பேரரத்தை ய, சிறுநாகப்பூ பெருநாகப்பூ அதிமதுரம்
ஏலம் லவங்கப்பட்டை, லவங்கபத்திரி சாதிக்காய்
தாளிசபத்திரி ய, கிராம்பு யனு, மதாப்பூ ய, அதிவிடை யு
அக்கிரா கிராம் கச்சோலம் மணக்கிடி சா,
சடாமருசிய செண்பகப்பூ கல்னார் ய, கலப்பிசின்

கலப்பரிசி, கூகைநீறு, மனோசிலை ய, காந்தம் ஙு,
சங்குமுடித்தார் மடனு, ஆபின் வ, வெள் வெங்காரூ ய
பெருங்காயம் ய, இந்துப்பு, வங்கிலுப்பு, சீனக்காரம்,
பொரிகாரம் ய, சவுக்காரம் ய, கொம்பாகுனு கொதுக்காய்,
சிவிகாசுக்கடிய, கர்தடக சிங்கிய ஆவரசம் மலப்பட்டை
பிசின் ய, பூவரசம்பூ ச, சிவதைய கழுத்திருப்பது
சென்னக் காப்பனுட சாதித்திர வேதிட சாம்பிருனிய
கோடனு பூங் சாத்துப்பட்டை து, கொண்டோசினேக்கிழங்கு
பூலாங்கிளங்கு ய, குங்குமப்பூ கோரோசினை து. பச்சை
கற்பூரமனு புனுகு சடவடனு வங்காளபச்சை மயிரோசனேய
ஆட்டுக்கால் ய, கொழுந்து வேங்கைப்பட்டை கற்கண்டு
சீனி, வெல்லம் பேரீச்சம்பழம் முந்திரிப்பழம் பனுட
காட்டு மருந்து ஆனை நெருஞ்சி வேர் குருந்தொட்டி
வேர் குளிர் தாமரை பெரிய தாமரை கோட
கிழங்கு, ஆம்பல்கிழங்கு தாளிச மூலம், கரிப்பாசை
செந்தோட்டிது தாளை விழுது வானைக்கிழங்கு
தலைசுருளிவேர்
கொடுவேலிவேர் பொன்முசுட்டைவேர் நல்லமுசுட்டைவேர்
சிறுசெருப்படி கொருப்பை வறுதலை கொம்மட்டி
மாதளம்பூ வில்லை வேர் யிலைச்சாறு புளிபஞ் சிறுகீரை
சிறுகீரைவேர் சிறுசெங்கமுள்ளிவேர் பசலஇலைச்சாறு
முத்தக்காசு அவுரிவேர் அமுக்கிராவேர் ஆலம்விழுது
சாக்கோரை வேர் அரசு பலம் புல்லுரவி மகிலுப்பட்டை
புரசம் பட்டை நல்லத்திப்பட்டை குழவைபட்டை
மாம்பட்டை நலவலப்பட்டை, மருதப்பட்டைவேர்
வேலம்பட்டை, ஆலம்பட்டை, கற்பூரவல்லி மிளகு
தக்காளி, கருநொச்சி, வெள்ளை நொச்சி, கொட்டன்
சுரந்தை, விளாம்பட்டை, விளாவேர், படிபாடகம்
சீந்திக்கொடி, வாதமடக்கி அச்சம்வேர், குரவிச்சவேர்
விஷ்ணுகாந்தி, சவுரி கோட்டான், ஓரிலைத்தாமரை,
விரசம்பட்டை, தென்னம்பாழை, இளநீறு, ஆவரை
முன்னூறு, அப்பைகிழங்கு, சிறுசின்னி பெருச்சின்னி
கொங்குபட்டை, வீரத்துபட்டை நெய்க்கோட்டான்
பட்டை தெத்தான்வேர் துளசி துரிக்கத்தாளைவேர்

இலவம்வேர், மகிளம்பூ, ஆக்காட்டு மருந்து அப்பம்
இதிலே சாறு வகையான தெல்லாம் ஓர் ரெண்றுசா
இதை மிடாவியடைத்து நன்றாய் வெந்தாிறத இரக்கி
பட்டை வெருண்டான் தெல்லாம் எடுத்து உரலில்லிட்டு
தூய வத்து வெந்த சாத்திவிட்டு பிசைந்து வடிகட்டிக்
கொண்டு சாரும் யெண்ணை படி சாயுடன் இலந்து
கடைகாத் குண்டான் தெல்லாம் நீர்வள்ளிகிழங்கு
சாறுவிட்டு நன்ருயபரைத்து வளித்து எண்ணெயுடன்
கலந்து அதன்பிறகு வேப்பம்பிசின், வெள்வேலம்பிசின்,
விளாம்பிசின் கருவேலன்பிசின், நாவல்பிசின் இவை
ரெண்டு சிறு எலுமிச்ச காய் அளவு நருக்கி வெய்யலில்
வைய்த்து பொடிசெய்து முலைப்பால் பசுவின்பால்
வெள்ளாட்டு பால் தொரும் விரை நய, இதை
சீவித் தண்ணீரில் நனையப்போட்டு மறுநாள் யெடுத்து
அரைத்து அதிகொஞ்சம் தண்ணீர் அரைத்து விளாங்காய்
அளவு கோபங்கொடி முத்தின திண்டிலே
அடித்தலை நறுக்கி தும்பச்சாறு இவை சேர
ஒன்ருயிக்கலந்து
சூரிய புடமாக வைத்துக் களாத்திரிக்கும் உமிக்காந்தலிலே
வைய்த்து விடிவேரு விநாயக பூசை பண்ணி தேடசனை
பூவைய்த்து அடுப்பில் லேத்தி அசன் பொங்கலாக
சிறு சிறு தீயெரித்து மொழுகு பதத்திலே வடித்து
நசுக்கி இடிக்கம்பு கொண்டு நேருக்கி வடித்து தயிலம்
ஆறினதின்பிறகு அந்த தயிலத்திலே மிளகாய், சந்தனம்
உலர்ந்த கிண்ணி உயிரு பொடி பண்ணி வங்காள பச்சை
அல்லது பச்சை புனுகு சடல தாளம்பூ வெட்டி விளாமிச்ச
வேரமுது நரிக்கி தயிலத்துடனே போட்டு வேடுகட்டி
வைத்துக்கொண்டு சனிக்கும் அதி காலத்திலே தலைக்கிட்டு
வெகு நேரம் சரைதின பிறகு சீயக்காய் கொதிக்க
வைத்த வென்னீரில் தலை முழுகு ஆதி காலத்திலே
உள்ளுக்கு
ஒரு கரண்டியும் திரிக்கு ஒரு கரண்டி தயிலம் கொள்ள
நீரளிவு உயர்ந்த தீரும்.

**விளக்கம் :**

இந்த நீரிழிவு வரக்காரணம் பல மாதர்களிடத்தில் வேசியர்களோடும் பிணியாளோடும், போகிப்பதாலும், ¿ யாத அனுபோகத்தாலும் மூலத்தில் அக்கினி கொண்டு தாது கெட்டுப் பிரிமியங்கள் நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை அரையாப்பு பவுத்திரம், பிரமேகம், கிருச்சனம் கல்லடைப்பு நீரிழிவு போன்ற வியாதிகள் வருகின்றன. இவை நிவர்த்திக்கு மருந்து.

**மருந்து செய்யும் முறை :**

| | | |
|---|---|---|
| 1. | சந்தனம் | 50 கிராம் |
| 2. | தேவதாரம் | 50 கிராம் |
| 3. | மலரக்காய் | 50 கிராம் |
| 4. | அகில்பட்டை | 50 கிராம் |
| 5. | விலாமிச்சவேர் | 50 கிராம் |
| 6. | வெட்டிவேர் | 50 கிராம் |
| 7. | சந்தனம் | 50 கிராம் |
| 8. | சுக்கு | 25 கிராம் |
| 9. | மிளகு | 25 கிராம் |
| 10. | திப்பிலி | 25 கிராம் |
| 11. | கொத்தமல்லி | 50 கிராம் |
| 12. | வாய்விலங்கம் | 25 கிராம் |
| 13. | கடுக்காய் | 50 கிராம் |
| 14. | தான்றிக்காய் | 50 கிராம் |
| 15. | நெல்லிப்பருப்பு | 50 கிராம் |
| 16. | ஓமம் | 25 கிராம் |
| 17. | குருசாணி ஓமம் | 25 கிராம் |
| 18. | நச்சீரகம் | 25 கிராம் |
| 19. | கருஞ்சீரகம் | 25 கிராம் |
| 20. | சதகுப்பை | 25 கிராம் |
| 21. | நாக இலே | 150 கிராம் |
| 22. | வெளிச்சிப்பட்டை | 20 கிராம் |
| 23: | வசம்பு | 25 கிராம் |
| 24. | வலம்புரிக்காய் | 25 கிராம் |
| 25. | சிறுதேக்கு | 50 கிராம் |

| | | |
|---|---|---|
| 26. | பேய்புடல் | 60 கிராம் |
| 27. | மஞ்சள் | 25 கிராம் |
| 28. | மரமஞ்சள் | 25 கிராம் |
| 29. | கஸ்தூரி மஞ்சள் | 50 கிராம் |
| 30. | வெட்பாலை அரிசி | 50 கிராம் |
| 31. | சித்தரத்தை | 50 கிராம் |
| 32. | பேரரத்தை | 50 கிராம் |
| 33. | சிறுநாகப்பூ | 50 கிராம் |
| 84. | பெருநாகப்பூ | 50 கிராம் |
| 35. | அதிமதுரம் | 50 கிராம் |
| 36. | ஏலம் | 50 கிராம் |
| 37. | இலவங்கப்பட்டை | 50 கிராம் |
| 38. | இலவங்கபத்திரி | 50 கிராம் |
| 39. | ஜாதிக்காய் | 50 கிராம் |
| 40. | தாளிசபத்திரி | 50 கிராம் |
| 41. | கிராம்பு | 50 கிராம் |
| 42. | மாதுளம்பூ | 50 கிராம் |
| 43. | அதிவிடையம் | 50 கிராம் |
| 44. | அக்கிரகாரம் | 50 கிராம் |
| 45. | கார்போகலரிசி | 50 கிராம் |
| 46. | மஞ்சிட்டி | 50 கிராம் |
| 47. | ஜடாமாஞ்சில் | 50 கிராம் |
| 48. | செண்பகப்பூ | 50 கிராம் |
| 49. | கல்நார் | 50 கிராம் |
| 50. | கலப்பிசின் | 50 கிராம் |
| 51. | கூகைநீர் | 50 கிராம் |
| 52. | சுத்திசெய்த மனோசிலை | 50 கிராம் |
| 53. | காந்தத்தூள் | 50 கிராம் |
| 54. | சங்கு இலை | 50 கிராம் |
| 55. | அபின் | 25 கிராம் |
| 56. | பூண்டு | 150 கிராம் |
| 57. | பெருங்காயம் | 50 கிராம் |
| 58. | இந்துப்பு | 25 கிராம் |
| 59. | வளையலுப்பு | 25 கிராம் |
| 60. | சீனிக்காரம் | 50 கிராம் |
| 61. | பொரிக்காரம் | 50 கிராம் |
| 62. | சவுக்காரம் | 50 கிராம் |
| 63. | சென்னாநாயுருவிவேர் | 50 கிராம் |
| 64. | கொம்பு பாகற்காய் சார் | 250 மில்லி |
| 65. | கோவைக்காய் சார் | 250 மில்லி |

| | | |
|---|---|---|
| 66. | கிளியூரன்பட்டை | 50 கிராம் |
| 67. | காசிக்கட்டி | 50 கிராம் |
| 68. | கற்கடைசிங்கி | 50 கிராம் |
| 69. | பூவரசன்பட்டைச்சாறு | 200 மில்லி |
| 70. | சிவதைவேர் இடித்தது | 50 கிராம் |
| 71. | சமூத்திரப்பழம் | 50 கிராம் |
| 72. | அன்னபேதி | 50 கிராம் |
| 73 | சாம்பிராணி | 25 கிராம் |
| 74. | பூதகரன்பட்டைத்தூள் | 50 கிராம் |
| 75. | வாழைக்கிழங்குச்சாறு | 500 மில்லி |
| 76. | சிவந்த கொட்டாங்கரந்தை வேர் | 100 கிராம் |
| 77. | பூலாங்கிழங்கு காய்ந்ததூள் | 50 கிராம் |
| 78. | குங்குமப்பூ | 25 கிராம் |
| 79. | கோரோசனை | 25 கிராம் |
| 80. | பச்சைக் கற்பூரம் | 25 கிராம் |
| 81. | புனுகு | 25 கிராம் |
| 82, | துடரிவேர் | 50 கிராம் |
| 83. | வங்காளப்பச்சை | 50 கிராம் |
| 84. | மயிரோசனை | 50 கிராம் |
| 85. | வேங்கைப்பட்டை | 50 கிராம் |
| 86. | கொன்றைவேர்ப்பட்டை | 59 கிராம் |
| 87. | பேரீச்சம்பழம் | 250 கிராம் |
| 88. | முந்திரிப்பழம் | 100 கிராம் |
| 89. | ஆனைநெருஞ்சிவேர் | 50 கிராம் |
| 90. | குருந்தொட்டி வேர் | 50 கிராம் |
| 91. | குளிர்தாமரை | 50 கிராம் |
| 92. | பெரிய தாமரை விதை | 50 கிராம் |
| 93 | கோடைக்கிழங்கு | 50 கிராம் |
| 94, | அப்பல்கிழங்கு | 50 கிராம் |
| 95. | தாளிசமூலம் | 50 கிராம் |
| 96. | கரிப்பாசை | 50 கிராம் |
| 97. | செந்தொட்டிவேர் | 50 கிராம் |
| 98, | தாழைவிழுது | 50 கிரரம் |
| 99. | வள்ளிக்கிழங்கு | 50 கிராம் |
| 100. | தலைச்சுருளி வேர் | 50 கிராம் |
| 101 | கொடிவேலிவேர்பட்டை | 50 கிராம் |
| 102. | பொன்முசுட்டை வேர் | 50 கிராம் |
| 103- | நல்ல முசுட்டை வேர் | 50 கிராம் |
| 104. | சிறு நெருஞ்சிவேர் | 50 கிராம் |

| | | | |
|---|---|---|---|
| 105 | பொடுதலை இலைச்சாறு | 100 | மில்லி |
| 106 | சிறுநெருப்படி இலைச்சாறு | 100 | மில்லி |
| 107 | கொடுப்பை இலை | 50 | கிராம் |
| 108. | வழுதலை இலைச்சாறு | 100 | மில்லி |
| 109. | கொமுட்டிக்காய்ச்சாறு | 100 | மில்லி |
| 110. | மாதுளம்பூச்சாறு | 100 | மில்லி |
| 111. | வில்வம்வேர் இலைச்சாறு | 100 | மில்லி |
| 112. | நீர்ப்புலாகொழுந்துசாறு | 100 | மில்லி |
| 113. | புளியன் இலைச்சாறு | 100 | மில்லி |
| 114. | சிறுகீரை இலைச்சாறு | 100 | மில்லி |
| 115. | சிறுகீரைவேர்பட்டைத் தூள் | 100 | கிராம் |
| 116. | செங்கமுள்ளி இலைச்சாறு | 100 | மில்லி |
| 117. | முத்தக்காசு | 50 | கிராம் |
| 118. | அவுரிவேர்ப்பட்டைத்தூள் | 50 | கிராம் |
| 119 | அமுக்கிரான் கிழங்குத்தூள் | 50 | கிராம் |
| 120. | ஆலம்விழுது பச்சை | 100 | கிராம் |
| 121. | கோரைவேர்ப் பச்சை | 50 | கிராம் |
| 122. | அசுரப்பேளம் | 50 | கிராம் |
| 123. | புல்லுருவி இலைச்சாறு | 100 | மில்லி |
| 124. | மகிழம்பூபட்டைச்சாறு | 100 | மில்லி |
| 125. | புரசம் பட்டைச்சாறு | 100 | மில்லி |
| 126 | நல்ல அத்திப்பட்டைச்சாறு | 100 | மில்லி |
| 127. | குலுவைப்பட்டைச்சாறு | 100 | மில்லி |
| 128. | மாம்பட்டைச் சாறு | 110 | மில்லி |
| 129. | நாவல்மரம்பட்டைச்சாறு | 250 | மில்லி |
| 130. | ஆலம்பட்டைச்சாறு | 250 | மில்லி |
| 131. | கற்பூரவல்லிச்சாறு | 100 | மில்லி |
| 132. | மிளகு | 50 | கிராம் |
| 133. | தக்காளி இலைச்சாறு | 150 | மில்லி |
| 134. | கருநொச்சிச்சாறு | 150 | மில்லி |
| 135 | வெள்ளைநொச்சிச்சாறு | 150 | மில்லி |
| 136. | கொட்டக்கலந்தைவேர் | 50 | கிராம் |
| 137. | விளாம்பட்டைச் சாறு | 100 | மில்லி |
| 138. | விளாம்வேர்பட்டைச் சாறு | 100 | மில்லி |
| 139. | பற்படாகம் | 50 | கிராம் |
| 140. | சீந்திக்கொடிச்சாறு | 150 | மில்லி |
| 141. | வாதாமடக்கிச்சாறு | 150 | மில்லி |
| 142 | அச்சப்வேர் | 50 | கிராம் |
| 143. | குருவிச்சம்வேர் | 50 | கிராம் |

| | | |
|---|---|---|
| 144. | விஷ்ணுகாந்திசமூலம் | 50 கிராம் |
| 145 | சவுரிக்கோட்டச்சமூலம் | 50 கிராம் |
| 146. | ஓரிலைத்தாமரைச்சாறு | 100 மில்லி |
| 147. | விரிசம்டட்டைச்சாறு | 100 மில்லி |
| 148. | தென்னம்பாளைச்சாறு | 500 மில்லி |
| 149. | இளநீர் | 500 மில்லி |
| 150. | ஆவாரை இலைச்சாறு | 100 மில்லி |
| 151. | ஆப்பைக்கிழங்கு | 50 கிராம் |
| 152. | சிறுசின்னி இலைச்சாறு | 50 மில்லி |
| 153. | பெருசின்னி இலைச்சாறு | 50 மில்லி |
| 154. | ஆயுள்ப்பட்டை | 50 கிராம் |
| 155. | கொங்குப்பட்டைச்சாறு | 100 மில்லி |
| 156. | ரெத்துப்பட்டைச்சாறு | 100 மில்லி |
| 157. | நெய்க்கோட்டான் பட்டைத்தூள் | 100 கிராம் |
| 158. | தேத்தாவேர் | 50 கிராம் |
| 159. | துளசிஇலைச்சாறு | 100 மில்லி |
| 160. | துரிக்கத்தாழைவேர்சாறு | 100 மில்லி |
| 161. | இலவம்வேர் பட்டைச்சாறு | 100 மில்லி |
| 162. | காட்டு மந்து இலைச்சாறு | 100 மில்லி |
| 163. | நல்லெண்ணெய் | 4 லிட்டர் |
| 164. | வேப்பம்பிசின் | 100 கிராம் |
| 165. | வெல்வேலன்பிசின் | 100 கிராம் |
| 166. | விளாம்பிசின் | 100 கிராம் |
| 167. | கருவேலம்பிசின் | 100 கிராம் |
| 168. | நாவல்பிசின் | 100 கிராம் |
| 169. | வெள்ளாட்டுப்பால் | 1 லிட்டர் |
| 170. | முலைப்பால் | 50 மில்லி |
| 171. | கோவைத்தண்டுசாறு | 100 மில்லி |
| 172. | சந்தன இலைச்சாறு | 100 மில்லி |
| 173. | தாழம்பூச்சாறு | 100 மில்லி |
| 174. | விளாமிச்சவேர் | 100 கிராம் |
| 175 | நீர்வள்ளிக்கிழங்கு | 50 கிராம் |

மேற்படி வியாதிக்கு மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளைப்பார்த்து வாசிக்கும்போது ஒரு ஆச்சரியம் வரக்கூடும். காரணம் இவ்வளவு மருந்துப் பொருள்களும் எங்கு கிடைக்கும் இந்த மருந்து வகைகளையெல்லாம் எப்படி நாம் சரிபார்ப்பது, இந்த மருந்து வகைகள் யாவும்

இதில் குறிப்பிட்டுள்ள மருந்து வகைகள்தானா என்பதை பற்றி அதிகச் சிந்தனை வரக்கூடும். அதே நேரத்தில் இந்த மருந்து வகைகள் விலைகள் அதிகமாக இருக்கக் கூடும் என்று சந்தேகம் வரக்கூடும். இந்த நிலையில் அக்காலத்தில் மருத்துவ அறிஞர்கள் (சித்தர்கள்) இந்த மருந்து வகைகளையெல்லாம் எளிதில் பெற்று இந்த மருந்தினைசெய்துநோயாளிகளுக்குக்கொடுத்துநோயைத் தீர்த்த பிறகு இந்த மருந்தினை அனுபவ முறையாக நமக்கு இந்தச் சுவடிகள் மூலமாக எழுதிவைத்திருக் கிறார்கள், என்பதை இந்தச் சுவடி மூலமாக நாம் தெரிந்து கொண்டோம். மேலும் இதுவரை எந்த நூல் களிலும் இடம் பெறாத அளவிற்கு அதிகமாக மருந்து வகைகளைச் சேர்த்து இந்த மருந்தினை அக்காலத்தில் செய்யப்பட்டு நோயாளிகளுக்குக் கொடுத்துக் குணம் செய்திருக்கிறார்கள். எனவே, மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளைச் சரிபார்த்துக் காயவைக்க வேண்டிய வகைகளை நன்றாகக் காயவைத்து இடித்துத்தூள்செய்து கொண்டு ஒரு பெரிய எண்ணெய்ச் சட்டியில் நல்லெண் ணெயைஊற்றி மேல் செய்து வைத்திருக்கும் தூள்களைப் போட்டுச் சாறு வகைகளையும் ஊற்றி எல்லாம் கலக்கி அடுப்பில் வைத்து எண்ணெய்ப்பதம் வரும்வரை நன்றாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

இந்த எண்ணெயை ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு 15 மில்லி அளவு சாப்பிடவும்.

**உட்கொள்ளும் காலம் :**

ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளி, கொழுப்பு உணவு வகைகள் நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

நீரிழிவு வியாதி தீரும். மற்ற பழைய நோய்கள்தீரும்.

குறிப்பு :

மேற்படி எண்ணெய் மருந்தை தலைக்குத் தேய்த்துக் குளிக்கலாம்.

இந்த நோயின் பொதுவான அறிகுறிகள் :

உடல் மெலியும், உடல் வெளுக்கும், உடல் முருகும், உடல் வியர்க்கும், உடல் நோகும், முகம், கை, கால்கள் காந்தும், நகம்பிரியும், கண் வெளுக்கும், நெஞ்சு உலரும், நாக்குக் காயும், தாகம் அதிகமாக இருக்கும். ஆயாசங்கள், களைப்பு இவைகள் அதிகமாக இருக்கும். இரவு, பகல் நித்திரை அதிகமாக வரும், அன்னம் செல்லாது.

## மூலக்கிராணி நிவர்த்திக்கு மருந்து

### சுவடி மருந்து முறை : 45

ஏலம், இலவங்கப்பட்டை, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி அதிவிடையம், சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், ஓமம் அபின் ஆவகை நல்லெண்ணை விட்டு. வறுத்து குடிச்சு, சிலைவடி கொண்கு கொடிவேலிவேர் இதுரு முணத்தோன் றுக்கொண்டு சிறு நறுக்கி நல்லெண்ணைவீட்டு வறுத்து இடித்து வடிகட்டி கொண்டு கலந்து வைத்துஅதி சாரத்து குமாதனை சமூலம் மாங்காயு வயத்து அதில் குடுக்க கிருணிகத்தெல்லாம் குடுக்க மூலக்கிரானிக்கு வெள்ளாட்டு தயிரில் கொடுக்க ரெத்தம் விழுகிறது, கோழிமுட்டை வெள்ளைக்கருவில் கொடுக்க யேகச்களிச்சலும் ஸ்ரீம சர்க்கரையிட நல்லெண்ணைவிட்டு உருக்கு இந்த மருந்து கூடப்போட்டு கிண்டிக்குடுக்க நிற்கும் மலகுமான துணை.

# மூலத்தின் விபரம்

**விளக்கம் :**

உள்மூலம், பிறமூலம், இரத்தமூலம், சீய் மூலம் மூலபாண்டு, முளைமூலம், வாத, பித்த சிலேத்ம மூலம் எனப் பலவகைப்படும். இதன் நிவர்த்திக்கு மருந்து.

**தேவையான மருந்துகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 1. | ஏலம் | 35 கிராம் |
| 2. | இலவங்கப்பட்டை | 35 கிராம் |
| 3. | கிராம்பு | 35 கிராம் |
| 4. | சாதிக்காய் | 35 கிராம் |
| 5. | சாதிபத்திரி | 35 கிராம் |
| 6. | அதிவிடையம் | 35 கிராம் |
| 7. | சுக்கு | 35 கிராம் |
| 8. | மிளகு | 35 கிராம் |
| 9. | திப்பிலி | 35 கிராம் |
| 10. | நச்சீரகம் | 35 கிராம் |
| 11. | ஓமம் | 35 கிராம் |
| 12. | அபின் | 10 கிராம் |
| 13. | ஆவாரைபட்டை | 35 கிராம் |

ஆகிய இவைகளை ஒரு புதுச்சட்டியில் போட்டு கொஞ்சம் நல்லெண்ணெயை விட்டு வறுத்துக்கொண்டு இடித்துச் சீலை வடிகொண்டு வடிகட்டி சூரணத்தை வைத்துக்கொண்டு பிறகு கொடிவேலிவேர் 35 கிராம் எடைக்கு எடுத்துக்கொண்டு இதனையும் சட்டியில்போட்டு நல்ல எண்ணெயிட்டு வறுத்துக்கொண்டு இடித்து வடிகட்டி சூரணம் செய்துகொண்டு இத்துடன் மேல் செய்து வைத்து இருக்கும் சூரணத்தையும் கலந்து பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.

அளவு :

தினம் இரண்டு வேளை 5 கிராம் எடை.

காலம் :

24 நாட்கள்.

பத்தியம் !

காரம். புளிப்பு, இவைகளை நீக்கவும்

அனுமானம் :

1. அதிசாரத்துக்கு : மாதளை மூலத்திற்கும் மேற்படி சூரணத்தை மாங்காய்ப்பூவின் சாற்றில் கலந்து கொடுக்கவும்.

2. மூலக்கிராணிக்கு : வெள்ளாட்டுத் தயிரில் கலந்து கொடுக்கவும்.

3. இரத்த மூலத்திற்கு: கோழி முட்டை வெள்ளைக் கருவில் கலந்து கொடுக்கவும்.

4. அதிகமான கழிச்சலுக்கு : இந்தச் சூரணத்தைச் சர்க்கரை, நல்லெண்ணெய் இவைகளில் கிண்டி மேற் சொன்ன அளவுக்குக் கொடுக்கவும்.

குறிப்பு :

கடல் சங்கை உடைத்துப் பசும்பாலில் உரைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாட்கள் கொடுக்கவும் பழைய தண்ணீல் பேரிக்காய், மஞ்சள், சமுத்திராப்பழம், இவைகளைச் சமம் அளவு எடுத்து அரைத்து உள்ளுக்கு மூன்று நாட்கள் சாப்பிடவும்.

# தீராத சுரங்களுக்கும், தீராத ஜன்னிகளுக்கும் நிவர்த்திக்கு மருந்து

சுவடி மருந்து முறை: 46

யேந முட்டை சாம்பல் பொடிசெய்து எருக்கம் பால்விட்டு நனைச்சி உலந்தி வைய்த்துக்கொண்டு மோசவலப்பு மூக்கில் லூதவிட்டு காட்டு எலுமிச்சம் வேர், நன்னுரி வேர், தாதுவளை வேர், கண்டங்கத்திரிவேர் முசுகுரண்டி வேர், செந்தோஷ்டிவேர் குநவஞ்சுவேர் நாயுநரி வேர், துளசி வேர், விஷ்ணுகிராந்தி மொசுமொசுக்கை; யேப்ப பிணக்கில் சுக்கு. திப்பிலி. மிளகு தேசாபுரம், கொத்தமல்லி பேயப்புடல், குளிர்சுரம் பெரும் தும்பைவேர். நல்லது போட்டுக் கொள்ளவும் துண்டாக்கி அதுக்குள்ளே லிங்கக்கட்டியை வைத்து சீவினதுண்டை வைய்த்துப்பொருத்தி சிலை மண்செய்து கருட புடம் காட்டே யருவினுலே போடவும். இந்தப்படி ஙாய புடம் போடவும் அபோல் அந்த அனுப்பான்களிலே மூலைப்பால் இஞ்சிச்சாறு தேன், இதுகளிலோண்டு கீத்து உரைத்து குடிக்கவும் சகல சூரமும், சகல தோசமும், சகல சன்னியும் தீரும்.

**விளக்கம்:**

1. காட்டு எலுமிச்சம்வேர் 35 கிராம்
2. நன்னாரி வேர் 35 கிராம்
3. மாதுளை வேர் 35 கிராம்
4. கண்டங்கத்திரிவேர் 35 கிராம்
5. முசுகுரண்டிவேர் 35 கிராம்

| | | |
|---|---|---|
| 6. | செந்தொட்டிவேர் | 35 கிராம் |
| 7. | குறிஞ்சி வேர் | 35 கிராம் |
| 8. | நாயுருவிவேர் | 35 கிரரம் |
| 9. | துளசிவேர் | 35 கிராம் |
| 10. | விஷ்ணுகிரந்திவேர் | 35 கிராம் |
| 11. | மொசுமொசுக்கை இலை | 35 கிராம் |
| 12. | வேப்பம் பிண்ணாக்கு | 35 கிராம் |
| 13. | சுக்கு | 35 கிராம் |
| 14. | திப்பிலி | 35 கிராம் |
| 15. | மிளகு | 35 கிராம் |
| 16. | தேவதாரம் | கிராம் |
| 17. | கொத்தமல்லி | 35 கிராம் |
| 18. | பேய்ப்புடல் | 35 கிராம் |
| 19. | பெரும்துப்பை வேர் | 35 கிராம் |

மேற்சொன்னவைகளை நறுக்கிக்கொண்டு எருமுட்டைச் சாம்பலில் எருக்கன்பால் விட்டு உலர்த்திவைத்து இருக்கும் சாம்பலையும் இத்துடன் சேர்த்து 12 கிராம் எடைக்குச் சுத்தி செய்த லிங்கத்தை இதற்குள் வைத்துச் சீலைமண் செய்து கருடபுடம் காட்டு எருவைக்கொண்டு புடம் போடவும். இப்படி நான்கு தடவை போட்டு எடுத்துக் கொள்ளவும். மேற்சொன்ன சுரம் வகைகளுக்கு இஞ்சி. தேன் இவைகளில் இந்த லிங்கக்கட்டியை மூன்றுதரம் அல்லது நான்கு தரம் உரைத்துக்கொடுக்கவும்.

அளவு :

தினம் இரண்டு வேளை வீதம் கொடுக்கவும்.

கரலம் :

5 நாட்கள் கொடுக்கவும்.

பத்தியம் :

இச்சாபத்தியம், பேதி அதிகம் ஆனால் மோர் சாதம் சாப்பிடவும்.

# சகல விஷங்கள் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 47

உருக்குமுறை கெமு மிளகேளாளிவே தாந்தி பருக்கிய காரம்

பரிவான் நற செருக்கிய வீரஞ்சிறந்த தயிலிருக்கம் மருக்கிய

தாளகம்மாளமானசூதமே உ— சூத்த தொடாரை தூக்காரு
சிடைவெத்த தொடாத்தில் வெடியுப்பு, நீர்வாரு பார்த்ததை
பூசித்து பாங்காய் யரைத்திரு நீத்த தோடாம் நிறையாக
கட்டுமே—ங—கட்டுஞ்சாக கொசிடை பூலம் மபீறு வாள பளாடு

முக்கால்எட்டு மோயார் எனலாம் பருப்போடு வெட்டுற
வெப்பம் விரையின் பருப்பிடே பருப்போடு அஞ்சும் பகீர்ந்த
சூசுகாசிடை அருப்போடு மூன்றுமாக பதினோன்று யிருப்போடு
அரைத்திடும் வெடியுப்பு நீர்பார்த்து தருப்போடரை பொடி
காணும் பலம் ரெண்டே ரெண்டையுங் கூட்டி நிமிர் பிசைந்திட்டு
ஒண்டியிருக்க உறவாக்கு தாக்குலே தண்டி யிருக்கத்தானே
மணியாக்கு ஆண்டி மணிலே அடைவானேக்கிடே அடவாக முன்போலே
யளவாய் பதினேன்றும் படவகாக்க கூடி பாச்சி யுருக்கி
வக்க கடவா யேமுதிரங்கவளித்துருக்கித்திட்டு தடவான்
சோதினைதாக்கு நீ சோதியே—எ— சோதிக்க லோகஞ்
சோரணம் போல் நன்றிடு மாத்திரையிலும் மாத்துஞ்சிவ டில்லைப

ஆதித்த பாசான் மறுபது முடக்கொள்ளும், பேதிககும் தேகமும்

பிறக்கு மதில் பொன்னே பொன்னாக வேண்டினால் ஆடிடு
நிமிசாயைப்
பொன்னாக வேண்டினால் பூட்டியாய்சூமே நாக்கோட்டான்
வேரை அரைத்து நேர்த்திங் கனவு வெள்ளாட்டுப்பால் படிஇ
இந்த படி பாலில் கலக்கி குடுக்க படி மூன்று நாள் கொடுக்க.
சகலமான விசான் தீரும்.

**விளக்கம் :**

இந்தப் பாடல் முழுமை பெறவில்லை என்றாலும் இந்தப் பாடலில் உள்ள கருத்து சகல விஷத்திற்கும் தீரும் மருந்து.

நாக் கொட்டான் என்ற செடியின் வேரை ஒரு நார்த்தங்காய் அளவுக்கு அரைத்து வெள்ளாட்டுப் பால் கலந்து மூன்று நாட்கள் வீதம் மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் சகல விஷமும் தீரும் என்பதுதான் இந்தப் பாடலின் கருத்து ஆகும்.

## சூலைக்கட்டு, சூலைவெட்டு, நிவர்த்திக்கும் சுக பேதிக்கும் மருந்து

**சுவடி மருந்து முறை : 48**

முரங்கையிலே அரைத்து ஒரு நார்த்தங்காய் அளவு
பத்து மிளகு மான.........................வெங்காயம் பூவும்
அரைத்து
பசுவின் வெண்ணெயில் குளப்பி குடுக்கவு பேதிக்கு பேத
மிஞ்சினால் பசுவின் மோர் சிட்டி...........காய்த்து போரி
முதிச்ச சோற்றில் விட்டு குடுக்க பேதி நிற்கும்.

பாரிசவாய்வுக்கு வேப்ப முத்துப் பருப்பை ...........
தண்ணீரில் அரைத்து குடுக்க இந்த படி மூன்று நாள்
குடுக்க பாரிச வாய்வு தீரும். விளக்கெண்ணே படி
உரு, பூவரசு யிலை இ. சங்கம் குப்பிக, களச்சிபிலே க
வாத மடக்தி க கரு நோச்சி க, வாகை யிறு க..........
யிலே க, கருக்கு வாயிலே க புங்கிலே டி, இலுப்பை க
கரிப்பான் இ, போதடுதலே இ, சுண்டசூலே நிலவாகை
யிலை.............நதினுயகம் இ, வெள்ளேக்த சிறு செருப்பு
நாகை காந்தை இ, இடக்கொல்லன் கோவை........
குங்கு சுங்கம், வேர் சிவனுர் வேம்பு...... ........வேநீர்
வெங்காயம் படி இ, கடுக்காய் காய கருஞ்சிரகம்...........
தீயின் பசுவின் பாலில் பிசறி வச்சு பால் விட்டு அரைத்து
பிளிந்துகொள்ளு சாதிக்காய், கிரும்பு, ஏலம்........
பொடிபண்ணி எண்ணையில் போட்டு பேதி மிஞ்சினல்
பசுவின்மோர் முறிச்சுகூட்டு கொள்ளுவண்ணுன் அவுரி
..........குடுக்க மிளகு எருக்கம்பால் புகையு நல்லெண்ணே
சுண்ணும்பு மேல் பூச்சு வாதமடக்கி வேலம்பருத்தி..........
காரீயு வீசி உருக்கி அதில் மூன்று வீரலேசம் விட வாங்கும்
அதை பொடிபண்ணிக்கொண்டு அந்த பொடியோடே
எருக்கலம் கரிவிசா கூட்டி செம்பருத்தி யிலே சாத்தில்
லரைத்து கொட்டைப்பாக்களவு வில்லே விட்டு புளியஞ்சீராய்
தூளில் முணரைஞ்யேணு பொணுது முடலிலே
புகைக்கரட்டிலு
அப்பால் நாலுநாள் அந்திசந்தி தண்ணியில் கொண்டு
ஞரிகை
யிருக்க சூலேகட்டு வெட்டுசூலே முதல்த் தீரும்.

விளக்கம் :

## 1. பேதி போவதற்கு மருந்து !

1. முருங்கை இலை அரைத்து
   சாந்து அளவு 20 கிராம்
2. வெங்காயப்பூ 15 கிராம்
3. மிளகு 5 கிராம்

இவைகளை ஒன்றாக அரைத்து வெண்ணெயில் கலந்து சாப்பிட்டால் சுகபேதி ஆகும். இந்த மருந்தினைச் சாப்பிட்டு அதிகப்பேதி போனால் மோர் குடிக்கவும்.

## 2. பாரிச வாய்வுக்கு மருந்து :

வேப்பங்கொட்டைப் பருப்பு ஐந்து கிராம் எடைக்குத் தண்ணீர் விட்டு அரைத்து உட்கொண்டு வந்தால் நிவர்த்தியாகும்

## 3. சூலைக்கட்டுக்கு மருந்து :

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | விளக்கெண்ணெய் | 500 மில்லி |
| 2: | பூவரசு இலைச்சாறு | 50 மில்லி |
| 3. | சங்குப்பிசசாறு | 50 மில்லி |
| 4 | களிச்சி இலைச்சாறு | 50 மில்லி |
| 5. | வாதமடக்கி இலைச்சாறு | 50 மில்லி |
| 6. | கருநொச்சிச்சாறு | 50 மில்லி |
| 7. | வாகை இலைச்சாறு | 50 மில்லி |
| 8. | புங்கன் இலைச்சாறு | 50 மில்லி |
| 9. | காட்டுக்கிளுகிளுப்பை இலைச்சாறு | 50 மில்லி |
| 10. | கரிப்பான் இலைச்சாறு | 50 மில்லி |
| 11. | பொடுதலை இலைச்சாறு | 50 மில்லி |
| 12. | சுண்ட இலைச்சாறு | 50 மில்லி |
| 13. | நிலவாகை இலைச்சாறு | 50 மில்லி |
| 14. | நதிநாயக இலைச்சாறு | 50 மில்லி |
| 15. | வள்ளி இலைச்சாறு | 50 மில்லி |
| 16. | சிறுசெருப்படி இலைச்சாறு | 50 மில்லி |
| 17. | நாகை இலைச்சாறு | 50 மில்லி |
| 18. | காந்த இலைச்சாறு | 50 மில்லி |
| 19. | கோவை இலைச்சாறு | 50 மில்லி |
| 20. | சங்கம்வேர்ப்பட்டைச்சாறு | 50 மில்லி |

| | | | |
|---|---|---|---|
| 21. | சிவன்வேம்பு சமூலச்சாறு | 50 | மில்லி |
| 22. | இளநீர் | 200 | மில்லி |
| 23. | வெங்காயச்சாறு | 100 | மில்லி |
| 24. | கடுக்காய் | 25 | கிராம் |
| 25. | கருஞ்சீரகம் | 25 | கிராம் |
| 26. | ஜாதிக்காய் | 25 | கிராம் |
| 27. | கிராம்பு | 25 | கிராம் |
| 28. | ஏலம் | 25 | கிராம் |

**மருந்து செய்யும் முறை :**

கடைச்சரக்குகளை மட்டும் விகிதப்படி எடுத்துக் கொண்டு இவைகளைப் பசும்பால்விட்டுநன்றாகஅரைத்து வைத்துக்கொள்ளவும். ஒரு பெரிய எண்ணெய்ச் சட்டியில் எண்ணெயை ஊற்றி மேற்குறிப்பிட்டிருக்கும் சாறு வகைகளை இத்துடன் ஒன்றாகக்கலந்து மேல் அரைத்து வைத்திருக்கும் மருந்தையும் கலந்து அடுப்பில் வைத்து எண்ணெய்ப்பதம் வரும்வரை நன்றாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் ஒரு வேளைக்கு 5 கிராம் எடைக்கும் உட்கொள்ளவு

**உட்கொள்ளும் காலம் :**

48 நாட்கள் (ஒரு மண்டலம்)

**பத்தியம் :**

இச்சாப்பத்தியம்.

**தீரும் வியாதிகள் :**

பாரிச வாய்வு, சூலைக்கட்டு தீரும்.

குறிப்பு :

கீழ்க்கண்ட முறையிலும் மருந்து செய்து சாப்பிட்டால் சூலைக்கட்டு நிவர்த்தியாகும்.

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | முறையாகச் செய்யப்பட்ட வங்கபஸ்பம் | 20 கிராம் |
| 2. | முறையாகச் செய்யப்பட்ட ரசபஸ்பம் | 20 கிராம் |
| 3. | நல்லெண்ணெய் | 100 மில்லி |
| 4. | சுண்ணாம்புநீர் | 20 மில்லி |
| 5 | வாதமடக்கிச்சாறு | 20 மில்லி |
| 6. | வேலிப்பருத்திச்சாறு | 20 மில்லி |
| 7. | செம்பருத்தி இலைச்சாறு | 20 மில்லி |

இவைகளை எல்லாம் கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்து உருண்டை செய்யும் பதம் வரும் வரை வெயிலில் காயவைத்துப் பிறகு இதனை 140 மில்லி கிராம் எடைக்குஉருண்டைசெய்து காயவைத்துக்கொண்டு பாட்டிலில்அடைத்து வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

ஒரு நாளைக்கு ஒரு மாத்திரை வீதம் 5 நாட்கள் விட்டுவிட்டு இப்படி மூன்றுமுறை சாப்பிடவும்.

பத்தியம் : இச்சாபத்தியம்

தீரும் வியாதிகள் :

சூலைக்கட்டு நிவர்த்தியாகும்.

# வரமூலம், கிரந்திமேகம், நீரழிவு இவைகள் நிவர்த்திக்கு மருந்து

## சுவடி மருந்து முறை: 49

சிவனும் வேம்பும் வெள்ளருக்கும் மருள கிளங்கும் மறுக்கரரை

வேர் கோடு, வேலி வேர் சவுரிவேர், இந்துப்பு வளகிலுப்பு காச்சல் வெடி உப்பு சுக்கு, திப்பிலி, ஓமம் வால்மிளகு, பெருங்காயம், காட்டு முருங்கைவேர் உவரம்பட்டை, சூரணம் பண்ணி கொடுக்க 1 முதல் 7 சாதிலிங்கம் வீசா எருக்கம்........தீக்கரிவணு ........ இரண்டு திரியும் வணு அதிச்சாதி லிங்கத்தை பொடிபண்ணி இந்தக் காயின் கரியில் கலந்து கிளிக்கிட அஞ்சரை நாள் பதினொரு பொழுது சங்கானில் வச்சுப் புகை குட்ட மறு பொழுதில் அஞ்சரை நாள் பதினொறு பொழுதும் வெள்ளுரி ஒரு முட்டை அந்தி சந்தியில் பனிரண்டு நாளும் உப்புனித விரக்கலு பதிமூன்றும் வடிச்சு கஞ்சி தேச்சுதலை முளுகி உப்பு புளிக்க கூட்டு அப்பால் நாலு முறுக்கு விளக்கெண்ணை

தேச்சு திலை நாற்பது நாளைக்கு கரபபான் வண்ட தந்த விரக்கலு, காரீயூ வீசா வருக்கி அதில் சுக்கு தது, மிளகு லு, திப்பிலி லு, வால்மிளகு, சாதிகாய், சாதிபத்திரி கிரும்பு, ஏலம் லு வெள்வெங்காயம் வ, பெருங்காயம் வ கரும்பு கடக்கி என்று படி கவ, செங்கோட்டை வ, தேங்காய் க இந்த வகையெல்லாம் இளம் வறுப்பாக வறுத்து செங்கோட்டை முகில் தண்ணீர் போட்டு உரலில் போட்டு யிடித்து லேகியமாய் புதுக்கலசத்தில் வய்திரக்கொண்டு

தினம் ஒரு நாணிக்காய் யளவு சாப்பிட்டுவர மூலம் தீரும் கிராந்திமேகலுகில் தீரும். கலந்த வேரில்தண்ணீர், சர்க்கரை சீரகம், பூனைக்காளிவிரை பூமிச்சர்க்கரைக்கிள் வருஅந்த தண்ணீரில் சீரகம் சர்க்கரை போட்டு தாதியூ நேரமெல்லாம் தண்ணீர் கொஞ்சம் விட்டு தீரிகத்தேர் அந்த மட்டும் கொடுக்க உதயத்தில் அந்த மூன்று மருந்து மரைத்து அந்த
தண்ணீரில் மாகாணிபடி தண்ணீயூ இந்த மருந்து கலக்கி சர்க்கரை சேர்த்து சேர்மானம் பண்ணிக் கொடுக்கத் தங்கபற்பம்
போட்டு பணவிடை போட்டு கொடுக்க இந்தப்படி அஞ்சு நாள் குடுக்க அப்பால் விளக்கெண்ணை மூன்று கிரமமாய் முழுகிதினம் பேரில் இந்தப்படி ஒரு நாள் குடுக்க சகல நீர்ரளிவும் தீரும்.

தேவையான மருந்துகளின் விபரம் :

| | | |
|---|---|---|
| 1. | சிவன்வேம்பு | 70 கிராம் |
| 2. | வெள்ளை எருக்கன் பழுப்பு இலை | 70 கிராம் |
| 3. | மருளக்கிழங்கு | 70 கிராம் |
| 4. | மரக்காரைவேர் | 70 கிராம் |
| 5. | கொடிவேலி வேர் | 70 கிராம் |
| 6. | சவுரிவேர் | 70 கிராம் |
| 7. | இந்துப்பு | 70 கிராம் |
| 8. | காட்டு கிலுகிலுப்பை இலை காய்ந்தது | 70 கிராம் |
| 9. | வெடியுப்பு | 35 கிராம் |
| 10. | சுக்கு | 70 கிராம் |
| 11. | திப்பிலி | 70 கிராம் |
| 12. | வால்மிளகு | 70 கிராம் |

13. பெருங்காயம் 35 } கிராம்
14. காட்டு முருங்கைவேர் பட்டைவேர் 35 கிராம்
15. உவரம்பட்டை 35 கிராம்
16. சர்க்கரை (நாட்டுச்சர்க்கரை) 100 கிராம்

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்துவகைகள் விகிதப்படி எடுத்துக்கொண்டு கல்உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள்செய்து இந்தச் சூரணத்தைச் சீலை வடிகொண்டு வடிகட்டி ஒரு ஜாடியில் பத்திரமாக வைத்துக்கொள்ளவும். இந்தச் சூரணத்தைப்பாட்டிலில் அடைத்துவைக்குமுன்னர் மேற்குறிப்பிட்டிருக்கும் சர்க்கரையுடன் கலந்து காற்றுப் புகாதவாறு மூடி வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு :**

தினம் 5 கிராம் எடை வீதம் 2 வேளை சாப்பிடவும்.

**உட்கொள்ளும் காலம் :**

48 நாட்கள் (ஒரு மண்டலம்)

**பத்தியம் :**

வியாதிக்கேற்றபடி உணவு வகைகளைச் சேர்த்துக் கொண்டு மற்றதை நீக்கிக்கொள்ளவும்

**தீரும் வியாதிகள் :**

வரமூலம், கிரந்திமேகம், நீரிழிவு இவைகள் தீரும்.

## இரண்டாவது முறை ::

தேவையான மருந்துகள் விபரம்:

1. சீரகம் 35 கிராம்
2. பூனைக்காலி விதை 35 கிராம்
3. பூமிச்சக்கரைக்கிழங்கு 35 கிராம்
4. சர்க்கரை 10 கிராம்

மேற்குறிப்பிட்டிருக்கும் வகைகளை நன்றாக இடித்துத் தூள்செய்து சீலை வடிகொண்டு வடிகட்டி வைத்துக் கொள்ளவும். தினம் 3 கிராம் எடை வீதம் இந்தச் சூரணத்துடன் 35 மில்லி கிராம் எடைக்குத் தங்க பஸ்பத்தையும் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவு தீரும்.

# வரமூலம், கிரந்திமேகம் நிவர்த்திக்கு இரண்டாவது முறை மருந்து

## சுவடி மருந்து முறை: 50.

தேவையான மருந்துகளின் விபரம்:

1. முறையாகச் செய்யப்பட்ட வங்க பஸ்பம் (ஈயபஸ்பம்) 30 கிராம்
2. சுக்கு 35 கிராம்
3. திப்பிலி 35 கிராம்
4. வால்மிளகு 35 கிராம்

| | | |
|---|---|---|
| 5. | ஜாதிக்காய் | 35 கிராம் |
| 6. | ஜாதிப்பத்திரி | 35 கிராம் |
| 7. | கிராம்பு | 35 கிராம் |
| 8. | ஏலம் | 35 கிராம் |
| 9. | வெள்வெங்காயம் (பூண்டு) | 35 கிராம் |
| 10. | பெருங்காயம் | 35 கிராம் |
| 11. | எள் | 50 கிராம் |
| 12. | சேங்கொட்டை | 35 கிராம் |
| 13. | தேங்காய்ப்பூ | ஒரு காய் அளவு |

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளில் வங்க பஸ்பம் சேங்கொட்டை இந்த இரண்டினைத் தவிர மற்ற மருந்து வகைகளை விகிதப்படி எடுத்துக்கொண்டு ஒரு சட்டியில் போட்டு இலேசாக வறுத்துக்கொண்டு இதனைக் கல் உரலில் போட்டு இடித்துத் தூள் செய்துகொண்டு சீலைவடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதில் வங்க பஸ்பத்தையும் சேங்கொட்டை இடித்த தூளையும் சேர்த்து நன்றாகக் கலக்கிக் கருப்பட்டியில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

உட்கொள்ளும் அளவு :

தினம் இந்தச்சூரணத்தை ஒரு கிராம் எடை வீதம் 24 நாட்கள் சாப்பிடவும்.

பத்தியம் :

இச்சாப்பத்தியம். புளி, உப்பு, வாய்வு பதார்த்தம், அசைவ உணவு வகைகள் நீக்கவும்.

( சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம், தஞ்சாவூர்-9 )